வாரப் பதிப்பு விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 ஐப்பசி திங்கள் 12-ம் நாள் (28—10—1966) வெள்ளிக்கிழமை றஜப் 13 | இதழ் 21

மில்க்வைற்
நீலசோப், பார்சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




## அரசாங்கம் இராஜினாமாச் செய்ய வேண்டும்

# தேர்தல் முடிவின் எதிரொலி

## எதிர்க்கட்சிகளின் விஷமப்பிரச்சாரம்

தேசிய அரசாங்கம் உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற பிரச்சாரத்தை எதிர்க்கட்சிகள் இடைத் தேர்தல் வெற்றியையொட்டி நாடு பூராவிலும் மேற் கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது. இத்தேர்தல் வெற்றியால் ஊக்கப் பெற்ற எதிர்க் கட்சிகள் தங்களின் வகுப்புவாதப் பிரச்சாரத்தை முடுக்கி விடலாமென்றும் தெரிகிறது. தேசிய அரசாங்கம் சர்வாதிகாரத்திற்கு திட்டமிடுவதாகவும்பிரச்சாரம் மேற்கொள்ளப்படலாம் என்றும் அதே வட்டாரங்களிலிருந்து அறியப் படுகிறது.

இடைத் தேர்தல் முடிவுகள் வெளியாகிய சில மணி நேரத்தின் பின்னர் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் இடைத் தேர்தலில் கிடைத்த வெற்றியை எங்ஙனம் பயன்படுத்துவது என்று ஆலோசனை நடாத்தினார்கள் என்றும் முடிவில் மூன்றம்சத்திட்டம் ஒன்றை இவர்கள் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றும் அறியப்படுகிறது.

மத்திய பகுதியிலிருந்து தென்பகுதிவரை உள்ள மக்களின் மனநிலையை நடந்து முடிந்த தேர்தல் பிரதிபலிப்பதாகக் கூறி அரசாங்கத்தை இராஜினாமாச் செய்யும் வண்ணம் நிர்ப்பந்திப்பது என்று இவர்கள் தீர்மானித்துள்ளார்களாம். இதனை வலியுறுத்தி தென்னிலங்கை பூராவிலும் ஓர் பலமான பிரச்சாரத்தையும் உடனடியாக ஆரம்பிக்கும் வண்ணம் இவர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

அரசாங்கம் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரி நடாத்தும் கூட்டங்களில் வேறு இரு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அச்சந்திப்பின் போது தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது கடைப்பிடித்து வரும் தமிழ் எதிர்ப்புக் கோஷத்தை மேலும் தீவிரப்படுத்துவதென்றும் தேசிய அரசாங்கம் அமைக்கவிருக்கும் பயிற்றப்பட்ட விவசாயத்தொண்டர்கள் திட்டமும், இலங்கை வானொலியை கூட்டுத்தாபனமாக்கும் முயற்சியும் நாட்டில் ஓர் சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் என்று மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டுமென வும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இச்செய்தி பற்றி அரசாங்கக் கட்சிப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்

(9-ம் பக்கம் பார்க்க)


### நீதிமன்றத்தை

## அவமதித்ததாக புதிய வழக்கு?

எதிர்க்கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் மீதும் ஒரு தினசரிப்பத்திரிகையின் ஆசிரியர் மீதும் நீதிமன்றத்தை அவமதித்ததாக வழக்குத் தொடரப்படலாம் என்று பேசப்படுகிறது.

இடைத்தேர்தல் காலங்களில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்தப்பிரமுகர் நிகழ்த்திய பேச்சு நீதிமன்றத்தை அவமதிப்பதாக இருந்ததாகவும், அப்பேச்சை ஒரு தினசரி ஏடு பிரசுரித்ததாகவும் இப்பொழுது இவ்விருவர் மீதும் வழக்குத் தொடரப்படலாம் என்றும் தெரிகிறது.

இவ்வழக்கு சில நாட்களுக்கு முன்னரே தொடரப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. சில காரணங்களால் பிற்போடப்பட்டு வந்ததென்றும் இப்பொழுது தாக்கல் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.



இலங்கை வந்திருந்த இந்திய தி. மு. கழகப்பிரமுகர் திரு. மா. தங்கவேலர் கடந்த வாரம் தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து அகமகிழ்ந்தார்.

படம்: கிங்ஸ்லி எஸ். செல்லையா

## 20,000 மக்களுக்கு குழாய்நீர் வசதி

### கிழக்கில் 2 ஊர்களுக்கு சலுகை

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு ஆகிய இடங்களில் வாழும் சுமார் 20,000க்கு மேற்பட்ட மக்களுக்கு பயனளிக்கக் கூடிய குழாய்நீர் விநியோகத் திட்டவேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. நவம்பர் மாதம் 2ந் திகதி பட்டிருப்புக்கு விஜயம் செய்யவிருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் திட்டவேலைகளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். இத்திட்ட வேலைகளுக்கு ரூபா 5 இலட்சம் செலவிடப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருவது தெரிந்ததே.

கிழக்கு மாகாணத்தின் தென்கோடியில் கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருந்துவருகிறது. இப்பிரச்சினையை தீர்த்துவைத்து, மக்களுக்கு நல்ல நீர் கிடைக்கச் செய்ய உள்ளூராட்சி அமைச்சரும் பட்டிருப்பு எம். பி. திரு. சி. மூ. இராசமாணிக்கமும் எடுத்த தொடர்முயற்சியினால், நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, ஆகிய பகுதி மக்களின் குடிதண்ணீர்ப்பிரச்சினையைத்தீர்த்து வைக்க, குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் உருவாகியுள்ளது. இத் திட்ட வேலைகளுக்கு ரூபா 5 லட்சம் செலவிடப்படவிருக்கிறது. சுமார் 20,000 மக்கள் பயன்பெறும் இத் திட்டத்தை நவம்பர் மாதம் 2ம் திகதி உள்ளூராட்சி அமைச்சர் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவிருக்கிறார் என்று தெரிகிறது.



அஞ்சற் திணைக்கள இந்து ஊழியர்களின் கலைமகள் விழா கடந்த வாரம் கொள்ளுப்பிட்டியில் உள்ள அஞ்சல் திணைக்கள அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. முத்தமிழும் கலந்த இவ்விழாவில் அஞ்சற் திணைக்கள அதிபர் திரு. பெரேரா, எரிபொருள் கூட்டுறவுத் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை உட்பட பலபிரமுகர்கள் கலந்துக்கொண்டனர். அனைவரையும் வரவேற்று அஞ்சற் திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு திருநாவுக்கரசு உரை நிகழ்த்தினார்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 3-11-66 காலை தலைநகரில் 2-11-66 மாலை கிடைக்கும்




## ரஷ்ய விண்வெளி வீரர்கள்

**யூரி காகரின்:**

உலகின் முதல் விண்வெளி வீரர் இவர்தான். அஞ்சா நெஞ்சமும் மன உறுதியும் கொண்ட இவர் 1934ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் திகதி பிறந்தார். இவர் ஒரு விமானி. இவருடைய மனைவி வாலென்டினா ஒரு மருத்துவப்பட்டதாரி. இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. வாஸ்டாக் என்ற விண்கப்பலில் 12-4-61-ல் ஒரு முறை உலகை வலம் வந்தார்.

**கெர்மன் டிட்டோ:**

இவர் ஒரு விமானியாவர். விமானப் பயிற்சியில் ஈடுஇணையற்று விளங்கிய இவரை விண்வெளி வீரராக்கியது இவரது துணிவே. 1935ம் ஆண்டு பிறந்த இவருடைய தந்தை ஓர் ஆசிரியர். உலகை 17 முறை வலம் வந்தார்.

**ஆன்ட்ரியன் நிகோலாயேவ**

இவர் 1929ம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு விவசாயி. இவர் டாக்டராக விரும்பினை ஆராய்ச்சி பயின்று விமானத்தொழில் செய்கின்றார். இவருடைய மனைவி வாலென்டினா தெரஸ்கோவா என்பவரே உலகின் முதல் விண்வெளி வீராங்கனை. இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் உண்டு. உலகை 64 முறை வலம் வந்தார்.

**பாவெல் பாப்போவிச்:**

இவர் 1930ம் ஆண்டு பிறந்தார். முதலில் தொழில் நிபுணராக வேலை பார்த்த இவர் பின்பு விமானப்படையில் சேர்ந்தார். இவர் ஓர் ஓ. ஆர். எஸ். (Order of the Redstar) பட்டம் பெற்றவர்.

**வெலெரி பைக்கோ வஸ்கி:**

1934ம் ஆண்டு பிறந்த இவர் விமானப்படையில் ஓர் உயர்தர அதிகாரி. இவர் ஒரு ஓ. ஆர். எஸ். இவருடைய மனைவி ஒரு விஞ்ஞானி. 14-11-63ல் இவர் வாஸ்டாக்-4 என்ற கப்பலில் உலகை 81 முறை வலம் வந்தார்.

**வாலென்டினா தெரஸ்கோவா:**

உலகின் முதல் விண்வெளி வீராங்கனையான இவருக்கு வயது 27. டயர்த் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்த இவர் தொழிற் கல்வி பயிலநினைத்து விமானம் ஓட்டக் கற்றார். இவருடைய கணவன் ஓர் வானவெளி வீரர். வாஸ்டாக்-5ல் 16ம் திகதி தொடக்கம் 19-ம் திகதி ஆனி மாதம் 63-ம் ஆண்டு வரை 48 முறை உலகை வலம் வந்தார். இதைக் கண்டு அகிலம் அதிசயித்தது.

தொகுப்பு:
தென்புலோலியூர் சிவா

## இவை தெரியுமா?

★ உலக மொத்த ஜனத்தொகை 230 கோடி, இதில் முஸ்லிம்கள் சுமார் 21 கோடி 54 இலட்சம். கிறிஸ்தவர்கள் சுமார் 69 கோடி

★ ஒவ்வொரு மனிதனும் 15 தொன் (3600 இறுத்தல்) எடையுள்ள காற்றைச் சுமந்து கொண்டு திரிகிறான்.

# உலகில் மிகப் பெரியவை

உலகில் மிகப் பெரியது எது? மிக உயரமானது எது? மிக அகலமானது எது? இப்படியாக பல விஷயங்களைப் பற்றிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுக்கான விடையை அறிந்திருப்பது நல்லது.

மிக உயர்ந்த மலைச் சிகரம், 29,002 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகரமாகும்.

மிகப் பெரிய சமுத்திரம்: பசிபிக் சமுத்திரம். இதன் மொத்தப் பரப்பு, 6,39,86,000 சதுரமைல்கள்

மிக நீளமான நதி: 4,000 மைல்களுக்கும் அதிகமான நீளமானது நைல்நதியாகும். தென் அமெரிக்காவிலுள்ள அமேசன் நதி நைலுக்கு அடுத்த படியாக உள்ளது.

மிகப் பெரிய தீவு: டென்மார்க்குக்குச் சொந்தமான கிறீன்லாந்து. அதன் பரப்பு 8 லட்சத்து, 40, ஆயிரம் சதுர மைல்களாகும்.

மிகப் பெரிய ஏரி: ஆசியாவிலுள்ள காஸ்பியன் கடல்: கடலாக இருந்தாலும், அது எந்த ஒரு பெரிய சமுத்திரத்துடனும் சேர்ந்திராமல் நாலு பக்கமும் நிலத்தால் சூழப்பட்டு இருப்பதால், நிலவியலாளர் அதனை ஏரி என்றே கருதுகின்றனர். காஸ்பியன் கடலின் நீர்ப் பரப்பு, 1,70,000 சதுர மைல்களாகும்.


ஆழமானகடல்: விஞ்ஞானிகள் மிகவும் கஷ்டப்பட்டு கண்டுபிடிக்க முயற்சிக்கும் விஷயங்களில் இது ஒன்று. எனினும் நமக்கு இதுவரை தெரிந்தளவில் பசிபிக் கடலில் பிலிப்பைன்சுக்கு அப்பாலுள்ள 'மரியான பள்ளம்' எனப்படும் கடல் பகுதிதான் மிக ஆழமானதாகும். அங்குள்ள ஆழம் சுமார் 37,000 அடியாகும்.

பெரிய எரிமலை: இன்னும் நெருப்புக் கக்கும் எரிமலைகளில் தென் அமெரிக்காவில் ஈக்வடலில் உள்ள 'கொடபாக்சி' எரிமலை தான் மிக உயரமானதாகும். அது, 19,612 அடி உயரம் கொண்டது. அர்ஜென்டைனாவுக்கும் சிலிக்கும் இடையிலுள்ள 'அகன்காகுவா' மேலும் 3000 அடி உயரங் கொண்டதாகும். எனினும் அது நெருப்புக் கக்குவதை நிறுத்தி விட்டதாக கருதப்படுகிறது.

மிகப் பெரிய நீர்வீழ்ச்சி: உயரத்தின் அடிப்படையில் பார்த்தால், வெனிசூலாவிலுள்ள ஏஞ்சல் வீழ்ச்சிதான் முதலிடம் பெறுகிறது. அந்த நீர் வீழ்ச்சியின் உயரம் 3,212 அடி. நயாகரா நீர் வீழ்ச்சியின் உயரம் 158 அடி முதல் 168 அடிக்குள்ளாகத் தானிருக்கிறது.

மிக நீண்ட கால்வாய்: ஒரு வகையில் பார்த்தால் சுவீடனில் முதலில் 1832ல் திறக்கப்பட்டு 1916ல் மறுபடி திருத்திக்கட்டப்பட்ட கோட்டா கால்வாயாகும். அதன் நீளம் 115 மைல். எனினும் அக்கால்வாயில் கோட்டா நதியின் ஒரு பகுதி அடங்கியிருப்பதுடன் வழியில் அது இரு ஏரிகளையும் கொண்டுள்ளது. எனவே மத்திய தரைக்கடலையும், செங்கடலையும் இணைக்கும் சூயஸ் கால்வாயைத்தான், கால்வாய் என்று கூறமுடியும்.

மிகப் பெரிய நகர்: ஜனத்தொகையை வைத்து மதிப்பிட்டால், ஒரு கோடியே 10 இலட்சம் மக்களைக் கொண்ட டோக்கியோ, முதலாவதாக உள்ளது. அது ஜப்பானின் தலைநகரமாகும். இரண்டாவதாக உள்ள லண்டனின் ஜனத்தொகை டோக்கியோவை விட சுமார் 20 இலட்சம் தான் குறைவு.



அமெரிக்கா 1980-ம் ஆண்டளவில் 3 பேர்களை ரொக்கட்டுமூலம் சந்திரமண்டலத்துக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளது. சந்திரமண்டலத்துக்குப் பயணம் செய்யவிருக்கும் 3 மனிதர்களையும் சுமந்து செல்லவிருக்கும் ரொக்கட்டின் மாதிரி உருவம் தான் இங்கே காணப்படுகிறது.

## அமெரிக்க விண்வெளி வீரர்கள்

**எம். எஸ். காப்பெண்டர்:**

அமெரிக்க கடற்படையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் இவர் 1925ம் ஆண்டு பிறந்தார். 1949ம் ஆண்டு வானவூர்திப் பொறியியல் பட்டம் பெற்றார். இவர் ஆரோரா-7 என்னும் வானவெளிக் கப்பலில பூமியைப் பாதியளவு சுற்றினார்.

**எல். ஜி. கூப்பர்:**

இவர் அமெரிக்க விமானப்படையின் காப்டன். இரண்டாம் உலகப் போரில் இவர் சாதித்த சாகசங்கள் பல. 1927-ம் ஆண்டு பிறந்த இவர் ஒரு பொறியியலாளர். இவர் 15-5-63ல் பூமியை 22 முறை 34 மணி 16 நிமிடங்களில் சுற்றி வந்தார்.

**ஜே. எச். கிளென்:**

1921ம் ஆண்டு பிறந்த இவரின் உயரம் 5 அடி 10 அங்குலம். இவர் தான் மெர்க்குரி என்ற வான வெளிக் கப்பலில் முதன் முதல் உலகைச் சுற்றி வந்தார்.

**வி. ஐ. கிரிஸம்:**

இவர் கொரியாப்போரில் பங்கு பற்றி புகழ் பெற்றவர். 1926ம் ஆண்டு பிறந்தார். இவர் ஆரோரா 7ல் பூமியை பாதியளவு சுற்றி வந்தார்.

**டபிள்யூ. எம். ஸ்கிர்ரா:**

அமெரிக்கக் கடற்படை அதிகாரி இவர். 1923ம் ஆண்டு பிறந்தார். இவர் 14-10-62ல் சிக்மா-7 என்ற வானவெளிக் கப்பலில் பூமியை 6 முறை சுற்றி வந்தார்.

**ஏ. பி. ஷெப்பார்ட்:**

இவரும் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்தவரே. 1923ம் ஆண்டு பிறந்த இவர் மெர்க்குரி என்னும் வானவெளிக்கப்பலில் பதினைந்தரை நிமிடம் வான வெளியில் முதன் முதலாகச் சென்று வந்தவராவர்.

தொகுப்பு:
தென்புலோலியூர் சிவா

## ஒரே ஒரு நிமிடத்தில்....

ஒரே யொரு நிமிடம் தானே என்று சர்வ சாதாரணமாக நாம் சொல்லி விடுகிறோம். ஆனால் அந்த ஒரு நிமிடத்தில் உலகில் எத்தனை காரியங்கள் முடிந்து விடுகின்றன தெரியுமா?

ஒரு நிமிடத்தில் 6000 விண்கற்கள் பூமியை நோக்கி பாய்கின்றன.

பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதில் 950 மைல் தூரம் கடந்திருக்கும்,

சுமார் 38 புயல்கள் உருவாகியிருக்கும். 14 ஆயிரம் கன அடி மழை உலகில் பல பகுதிகளில் பெய்திருக்கும்.

நதிகள் அந்த ஒரு நிமிட நேரத்தில் 35,000 டன் தண்ணீரையும் வண்டலையும் கடலில் கொண்டு போய்ச் சேர்த்திருக்கும்.

ஒருநிமிடத்தில் உலகத்தில் 100 பேர் மாண்டிருப்பார்கள். 114 குழந்தைகள் பிறந்திருக்கும். 34 திருமணங்கள் நடைபெற்றிருக்கும். மூன்று தம்பதிகள் திருமண விலக்குப் பெற்றிருப்பார்கள்.


ஒரு நிமிடத்தில் உலகம் முழுவதிலும் 2,80,00 டெலிபோன் அழைப்புக்கள் கேட்டிருக்கும்.

60 லட்சம் சிகரெட்டுக்கள் புகைக்கப் பட்டிருக்கும்.

63,000 கலன் மது மனிதர்களால் குடிக்கப்பட்டிருக்கும்.

4 ஆயிரம் டன் உணவுப் பொருட்கள் உண்ணப்பட்டிருக்கும்.

ஒரு நிமிடத்தில் முன்னூறு தொன் நிலக்கரியும் எழுநூறு தொன் இரும்பும் வெட்டி எடுக்கப்பட்டிருக்கும்.




ஈ பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

கே: தீய மனிதர்களும் அதிர்ஷ்டசாலிகளாக வாழ்கின்ருர்களே அது எப்படி?

ப: இப்பிறப்பில் தீயவர்களாக இருந்தாலும் முந்திய பிறப்புகளில் ஏகப்பட்டபுண்ணியங்கள் செய்திருப்பார்கள். அந்தப் புண்ணியங்கள் மூட்டை மூட்டையாக குவிந்து கிடக்குமாதலின், அவை இன்னும் பல பிறப்புகளுக்கு அதிர்ஷ்டசாலிகளாக வாழப்போதுமானவை என்று இவ்வுலகில்ஒருவதந்தி அடிபடுகிறது.

கே: நாட்டின் நல்லொழுக்கத்திற்கும், இன மத ஒற்றுமைக்கும் பங்கம் விளைவித்து படங்கள், செய்திகளை வெளியிடும் தினசரிப் பத்திரிகைகள் உட்பட சகல பத்திரிகைகளையும் புதிய சட்டமியற்றி அவைகள் மூலம் கடுமையாகத் தண்டித்து ஒரு புதிய சகாப்தத்தையே தேசிய அரசு உருவாக்கினுல் என்ன?

ப: பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைத்தால் தேசிய அரசாங்கத்துக்கும் ஆபத்து ஏற்படலாம்.

ஃ

மணிமாறன்,
சென்லியோனுட்ஸ்

கே: தமிழகத்தின் எதிர் வரும் தேர்தல் பற்றி தங்கள் அபிப்பிராயம்?

ப: தமிழ் நாட்டில் காங்கிரசுக்குத் தோல்வி ஏற்பட்டால், காங்கிரஸ் ஜனநாயகப் பாதையில் முன்னேறுவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

ஃ

கு. ஆ. நா. தம்பிராசா,
வியாபாரிமூலை

கே: பண்டாரவளை இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஐ. தே. கட்சி சார்பில் தமிழரசுக் பிரமுகர்கள் இருவர் கலந்துகொண்டதை யிட்டு எனது நண்பர் ஒருவர் குறைகூறுகிருரே?

ப: குறை கூறுவது தவறு கும். தேசிய ஆட்சியின் கீழ் தான் தமிழ் பேசும் மக்கள் ஓரளவேனும் உரிமைகளைப் பெற முடிகிறது. ஆகவே இடைத் தேர்தல்களில் தேசிய அரசாங்கத்தின் முக்கிய பங்காளியான ஐ. தே. கட்சியை ஆதரித்தது சரி தானே!

ஏ ஆதம்லெவ்வை,
அக்கரைப்பற்று.

கே: தங்களிடம், கேள்விகளைத் தாங்கிவரும் தபால் அட்டைகளில் உங்கள் முகவரி பொறித்த சுதந்திரன பத்திரிகையிலிருந்து வெட்டி எடுத்த காகிதத் துண்டை ஏன் ஒட்ட வேண்டும்?

ப: கேள்வி கேட்பவர்கள் எனது முகவரியைப் பிழையாக எழுதிவிட்டால், அக் கேள்விகள் என்னிடம் வந்து சேராதல்லவா? அதற்காகவே இந்த ஏற்பாடு!

ஃ

லெட்சுமிநாதன்,
கண்டி

● கே: ஆண்டுதோறும் இலங்கையின் சனத் தொகை 2½ இலட்ச விதம் கூடுகிறதே! உங்களால் இதைத் தடுத்துநிறுத்த முடியாதா? அதற்கு உங்கள் திட்டமென்ன?

ப: முடியும். நான் சுகாதார மந்திரியானல் இலங்கை முழுவதும் விநியோகிக்கப்படும் கூப்பன் அரிசியில் கர்ப்பத் தடை மருந்தைக் கலந்துவிடுவதே எனது திட்டம். அப்படிச் செய்தால் உடனடியாகப் பிறப்பு நின்றுவிடும், இறப்பு மட்டுமே நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

ஃ

எம். ஐ. நாதன்,
முள்ளியவளை

கே: தமிழினத்தின் உரிமையை பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பம் தமிழ்க் காங்கிரசுக்கு கிடைத்திருக்கிறது என்று திரு. ஜி. ஜி. கூறியிருக்கிருரே அது ஏன்?

ப: என்றுதான் சந்தர்ப்பம் இல்லை! ஆனல் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காகத் தியாகங்கள் செய்யபின் வாங்குகிறதே காங்கிரஸ். அதற்கு எந்தச் சந்தர்ப்பம் கிடைத்தும் என்ன பிரயோசனம்?

எல். சதாசிவம்,
பதுளை

கே: தேயிலை விலைக்குறைவால் நமது வெளி நாட்டுச் செலாவணி குறைந்து வருகிறதாம். இதைக் கூட்டுவதற்கு நீங்கள் ஒரு வழி சொல்லக் கூடாதா?

ப: இன்று ஊர்கள் தோறும், வீடுகள் தோறும், ஆண், பெண் சிறுர் அனைவரும் தயாரிக்கும் பல்வேறு கவர்ச்சிப் பெயர்களைக் கொண்ட நமது கசிப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னிய செலாவணி மலைபோல உயர்ந்து விடும். கசிப்புக்கு ஏற்றுமதித் தீர்வைச் சலுகையும் அளிக்கப்படவேண்டும்.

ஃ

செல்வி............
நாரந்தனை

கே: அடக்கமாக பண்புடன் பழகிவரும் ஆண்மகனின் உறுதிமொழிகளை நம்பலாமா?

ப: நம்பாமலிருத்தல் நன்று. அடக்கம் பண்பு என்பதெல்லாம் வெறும் நடிப்பாக இருக்கலாம். இத்தகைய ஆண்களின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்த பெண்கள் ஆயிரக்கணக்கில் உண்டு.

ஃ

க. கந்தசாமி,
யாழ்ப்பாணம்

கே: படித்தவள் படிப்பற்ற ஆணைத் திருமணம் செய்து கொண்டால் அவள் நிலை எவ்வாறிருக்கும்?

ப: சமையல் வேலைக்கு ஆள் கிடைத்துவிடுமாதலின், எஜமானியின் நிலையை அடையலாம்.

ஃ

வி. பிரான்சிஸ் றெமின்,
மன்னர்-கோட்டை.

கே: வாழ்க்கையில் நாம் எதில் விழிப்பாக இருக்கவேண்டும்?

ப: ஏமாருமலிருப்பதில்-ஏனெனில் நம்மை ஏமாற்றவே பிறர் சதா முயற்சி செய்துகொண்டிருக்கிருர்கள்.

ஃ

வே. சண்முகநாதன்,
பாண்டிருப்பு.

கே: உங்களை நினைக்கும்போது எனக்கு அழுகை வருகிறது...

ப: அழுகை வரும்போது இறந்துபோனயாரையாவது நினைத்துக்கொள்ளுங்கள்-உடனே சிரிப்பு வந்துவிடும்!

கே: தொடர்கதை ஒன்று அனுப்பினேன். அதன் நிலையென்ன?

ப: எனக்குக் கிடைக்கவில்லையே. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களுக்கு மேற்பட்ட தொடர்கதைகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை. அதிலும் கடைசி வாக்கியம் ஒரு கேள்வியாக இருத்தல் வேண்டும்.

ஆர் பாலகிருஷ்ணன்,
மாத்தளை

கே: இவ்வுலகில் முயன்ருல் முடியாததுண்டோ?

ப: உண்டு...உண்டு. மனிதன் மீண்டும் குரங்காவதற்காக முயன்ருல்...

ஃ

ச. பாலச்சந்திரன்,
வியாபாரிமூலை

கே: தலைவர்கட்கு சிலை அமைப்பதைவிட அவர்கள் பெயரில் தொழிற்சாலைகளை நிறுவினுல் என்ன?

ப: சபாஷ்! சிறந்த யோசனை, ஆனல் தொழிற்சாலைகள் நிறுவப் பெருந்தொகையான பணம் வேண்டுமே.

ஃ

இம்மனுவல்,
யாழ்ப்பாணம்.

கே: கைலஞ்சம் கொடுப்பது குற்றமா? அதை வாங்குவது குற்றமா?

ப: இரண்டும் குற்றம். அது மட்டுமல்ல—கைலஞ்சமே ஒரு குற்றம்—மொத்தம் மூன்று குற்றம்;

கே: காதலிப்பது குற்றமா? காதலித்துக் கைவிடுவது குற்றமா?

ப: இரண்டும் குற்றமல்ல--கைவிடுவதற்காகக் காதலிப்பதுதான் குற்றம்.

திருவாளர்
குயுக்தியார்
கே/பா சுதந்திரன்
த. பெ. இல; 1188
கொழும்பு-18;

● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிருர்.



ஆர். ஜி.யும்
ஓநாயும்!

தமிழர் ராஜ்யம் உருவாகி வருகிறது.

—ஆர். ஜி.

—ஓநாய் ஓநாய் என்று விம்புக்குக் கத்திய இடைச்சிறுவன் கதையை ஆர். ஜிக்கு நினைவூட்டுவது நல்லதல்லவா?

காலன் போட்ட
தூண்டில்!

மீனுக்குத் தூண்டில் போட்டுக் கொண்டிருந்த ஒருவர், கடலில் விழுந்து இறந்தார்!

—செய்தி

—மீனுக்குத் தூண்டில் போட்டவர் காலன் போட்ட தூண்டிலில் சிக்கிவிட்டார் போலும்!

விலங்கு நிபுணர்கள்

உலக விலங்கு நிபுணர்கள் கொழும்பில் கூடுகிருர்கள்:

—செய்தித்தலைப்பு.

—ஏன் இங்குள்ள 'விலங்குகளை' அடக்குவது எப்படிஎன்று ஆராயப் போகிருர்களோ?

'நோயாளி' நாடு!

ஆஸ்பத்திரிகளில் கட்டில்களின் தொகை அதிகரிக்கும்;

—செய்தி

—இலங்கை ஒரு 'நோயாளி நாடு' ஆகிவிட்டதோ?

மாணவர் வலை வீச்சு

மீனவர்களுடன் சேர்ந்து மாணவர்கள் மீன் பிடிப்பர்.

—செய்தி

—மாணவிகளுக்கு காதல் வலை வீசும் அவர்களுக்கு மீனுக்கு வலை வீசுவது அப்படி யொன்றும் கஷ்டமில்லையே!

தன்வினை...

மாசே துங்கிற்கு எதிரான கிளர்ச்சியில் சீனச் செங்காவலர் இறங்கியுள்ளனர்.

—செய்தி

—'தன் வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்;



# தாய் மொழியே போதனா மொழி
# மனித உரிமைச் சாசனம் இதற்கு மாறல்ல

## முஸ்லிம்களின் தனித்தன்மையை தமிழரசுக் கட்சியே காப்பாற்றும்

போதனா மொழி பற்றிய சர்ச்சை இன்று பல வட்டாரங்களிலும் எழுந்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களும் தெரிவிக்கப்படுகிறது. தாய் மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று வாதிடுவோர் ஒரு புறமும் பிள்ளையின் போதனா மொழியைப் பெற்றோரே தெரிவு செய்ய வேண்டும் என்று கூறுவோர் மறுபுறமும் பலதரப்பட்ட கருத்துக்களை முன் வைக்கிறார்கள்.

போதனா மொழி பற்றிக் கருத்துக் கூறுபவர்களில் பலர் பிரச்சினையைப் புத்திபூர்வமாக அறிந்திருக்கவில்லை என்பது அவர்களின் வாதத்திலிருந்து தெள்ளவாகத் தெரிகிறது. இருட்டறையில் கறுப்புப் பூனையைத் தேடும் நிலையிலேயே இவர்களில் பலர் இருக்கிறார்கள்.

போதனா மொழி பற்றிய பிரச்சினையின் பிதாமகரான கல்வி அமைச்சர் கூட பல சந்தர்ப்பங்களில் இருட்டறையில் கறுப்புப் பூனை பிடிக்கும் விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. போதனா மொழி பற்றிய பிரச்சினையின் பூர்விக அடிமுடிச்சையும் அறியாது, இன்றைய அரசியல் பிரச்சினைகளையும் தெரிந்து கொள்ளாது இதனைத் தரிசிக்க முற்படுவது தவறாகும்.

### முரணான கூற்று

பிரச்சினையின் பிதாமகராக இன்று விளங்கும் கல்வி அமைச்சர் போதனா மொழி பற்றிய சரத்தை தனது வெள்ளை அறிக்கையில் முரண்பட மொழிந்துள்ளார்.

தாய் மொழியே பிள்ளையின் போதனா மொழி என தனது வெள்ளை அறிக்கையின் 40-வது பிரிவின் முதல் வரியில் மொழிந்த கல்வி அமைச்சர் மறுவரியில் 'பெற்றோர் விரும்பினால் தமிழ் அல்லது சிங்களத்தைப் பிள்ளையின் போதனா மொழியாகக் கொள்ளலாம்' என்றும் கூறியிருக்கிறார்.

கல்வி அமைச்சரின் முடிவையும் இன்றைய வாதப் பிரதிவாதங்களையும் ஆராய முன்னர் உண்மை நிலைமை என்ன என்பதை நாம் நேரடியாகத் தரிசிக்க வேண்டும். தமிழும் சிங்களமும் இந்நாட்டின் தேசிய மொழிகள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. இற்றைவரை தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழி தமிழாகவும், சிங்களப் பிள்ளைகளின் போதனா மொழி சிங்களமாகவும் இவ்விரண்டு மொழிகளையும் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களின் பிள்ளைகள் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டுள்ளனர். அதற்கான வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

### ஆங்கிலத்தின் நிலை

ஆங்கிலம் அன்னியமொழி என்பதனாலும், அம்மொழி மூலம் போதனை நடைபெற்றால் அது பிள்ளையின் விளக்க சக்தியை மழுங்கச் செய்துவிடும் என்ற காரணத்தினாலும் ஆங்கிலம் அகற்றப்படுவதுடன், நாட்டு மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை வளர்க்க வேண்டுமென்ற நோக்கமும், தாய் மொழி மூலம் போதனை பிள்ளையின் விளக்க சக்திவளர்ச்சிக்கு உதவும் என்ற காரணத்தினாலும் ஆங்கிலம் அகற்றப்பட்டு அவ்விடத்தில் சுதேசிய மொழிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

பூங்குன்றன்

ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் தாய் மொழியாகக் கொள்ளாத பிள்ளைகளும், கலப்புத்திருமணம் செய்து கொண்டவர்களினது பிள்ளைகளும் இந்நாட்டில் குறிப்பிடக் கூடிய தொகையினராக இருக்கின்றனர். இவர்களின் நலனையும், எதிர்காலத்தையும் நலநோக்குடன் அணுக வேண்டுமென்பதற்காகவே போதனா மொழியைப் பெற்றோர் தெரிவு செய்யலாம் என்ற வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை கல்வி வெள்ளை அறிக்கையின் பிதாமகரான கல்வி அமைச்சரால் கூட உணர்ந்து கொள்ள முடியவில்லை.

### போதனாமொழி

"தமிழையும், சிங்களத்தையும் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகள் அவரவர் தாய் மொழியையே போதனாமொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தாய் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்பது ஐ. நா. ஏற்றுக் கொண்ட உண்மை ஐ. நா. மனித உரிமைச் சாசனத்தின் ஒரு பகுதி பிள்ளைகளின் கல்வி பற்றிக் குறிப்பிடுகிறது. பிள்ளையின் கல்வியைப் பெற்றோரே பொறுப்பேற்க வேண்டும் என்பதே அது கல்வியைப் பொறுப்பேற்பது வேறு போதனா மொழியைத் தெரிவு செய்வது வேறு. இச்சிறு உண்மையைக் கூடப் பலர் தெரிந்து வைத்திருக்க மறுக்கிறார்கள்.

### முஸ்லிம்களின் நிலை என்ன?

முஸ்லிம் பிள்ளைகளின் போதனா மொழி என்ன என்ற கேள்வியும் இன்று எழுந்திருக்கிறது. முஸ்லிம்கள் சிறுபான்மையினர், அவர்களும் தமிழ் பேசும் மக்கள் தான். என்றாலும் அவர்கள் தனித்துவம் உடையவர்கள். நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து வாழ்பவர்கள். சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் அவர்கள் கலந்து வாழ்ந்து வருகிறார்கள் எனவே முஸ்லிம்கள் பிள்ளைகள் ஒருசேர தமிழ் மொழியையே போதனா மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுவது அவர்களின் எதிர்கால வளர்ச்சியை மழுங்கச் செய்வதாக அமையும். அதே போன்று முஸ்லிம் பிள்ளைகள் அனைவரும் சிங்கள மொழியையே போதனா மொழியாக ஏற்க வேண்டுமென்று வாதிடுவதும் தவறாகும்.

முஸ்லிம்களின் கல்வி மாநாடு முஸ்லிம் பிள்ளைகளின் போதனா மொழி தமிழே என்று கடந்த ஆண்டு முடிவு செய்திருக்கிறது. என்றாலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வி மாநாட்டின் முடிவையும் ஏற்க மறுக்கிறார்கள்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கட்சிக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவில்லை. அவர்கள் பல கட்சிகளிலும் இருக்கிறார்கள். மக்களின் மனோநிலையை இவர்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறார்களா என்பதும் கேள்விக்கு உரியது.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் முஸ்லிம்களின் பிரச்சினைகளையே முழுதாகத் தெரிந்திருக்கவில்லை தெரிந்திருக்கக்கூடிய சிலரும் முஸ்லிம் பெருங்குடி மக்களைத் தவறான வழியில் திசை திருப்ப முயற்சிக்கிறார்கள்.

### தமிழரசுக் கட்சியும் முஸ்லிம் மக்களும்

இலங்கைத் தமிழரசுக் கட்சி முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஓர் இயக்கம் என்ற ஒரு கருத்தை முஸ்லிம் பெருமக்கள் மத்தியில் பரப்ப சில முஸ்லிம்பிரதிநிதிகள் கடந்த வாரங்களில் முயன்றனர். அவர்களின் கருத்துக்கு முஸ்லிம் மக்கள் செவிசாய்க்கவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லிம்களின் தனித்தன்மையை ஏற்றுக்கொண்ட ஒரே அரசியல் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும். சமஷ்டி அரசமைப்பில் முஸ்லிம்களுக்கு தனியே இஸ்லாமிஸ்தான் அமைக்கப்படும் என்பதைத் தமிழரசுக்கட்சி தெளிவாக தனது அமைப்புத் திட்டத்திலெடுத்துக் கூறியிருக்கிறது. இதனை இந்நாட்டு முஸ்லிம் மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறாகள்.

முஸ்லிம் பெருமக்களுக்குப் பாதகமான சட்டங்கள் இயற்றப்படும் போதெல்லாம் முந்திக் குரல் கொடுத்தவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியினரே என்பதையும் எவரும்மறுக்கமுடியாது. இலங்கைப் பிரசா உரிமைச் சட்டம் பொதுவில் இந்நாட்டு சிறுபான்மை மக்களுக்கு தீங்கான சட்டம் என்பதைத் தமிழரசுக்கட்சி தனது ஆரம்ப நாளிலிருந்து கூறிவந்திருக்கிறது. ஆனால், ஒருசில ஆண்டுகளுக்கு முன்னரே இதனை முஸ்லிம் தலைவர்களும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் உணர்ந்திருக்கிறார்கள்.

### முஸ்லிம் பிரதேசம்

இன்று அம்பாறை மாவட்டம் தமக்கே சொந்தம் என்று மார்தட்டுகிறார்கள் முஸ்லிம் பெருமக்கள். ஆனால் இப்பகுதி சில ஆண்டுகளுக்கு முன்னர் முஸ்லிம்களிடமிருந்து பறிபோகவிருந்தது. அன்று அதனைக் காப்பாற்றியவர்கள் இன்று பெரிதாகக் குரல் எழுப்பும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களல்ல. தமிழரசுக் கட்சியினரின் எதிர்ப்பியக்கமே அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம் மக்களுக்குக் காப்பாற்றிக் கொடுத்தது. இதனை முஸ்லிம் பெருங்குடி மக்கள் அறிந்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு கட்சியை முஸ்லிம் மக்களுக்கு எதிரான இயக்கம் என்றும் தமிழரசுக்கட்சிக்கு முஸ்லிம் மக்களைப்பற்றிப் பேச தகுதி இல்லை என்றும் கூறுவது எத்தனை அபத்தமானது என்பதை ஏனோமுஸ்லிம்பாராளுமன்ற உறுப்பினர்கள் உணருகிறார்கள் இல்லை.

போதனாமொழிப் பிரச்சினையிலும், சிங்கள ஆசிரியர் பிரச்சினையிலும் தமிழரசுக்கட்சி முஸ்லிம்களின் ஜனநாயக உரிமைக்குப் புறம்பாகச் செல்லவில்லை. சில முஸ்லிம் தலைவர்களைப் போன்று தமிழரசுக்கட்சி எச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களின் உணர்ச்சிக்கு மாறாக எதிர்நீச்சல் அடிக்க விரும்பியதுமில்லை.

## எழுத்தாளர் கடமை என்ன?

### நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் முகம்மது விளக்கம்

'நல்ல சமுதாயத்தை உருவாக்குவது எழுத்தாளர் கடமை. எழுத்தாளர்கள் இறை நம்பிக்கையைப் பலப்படுத்தக் கூடிய முறையில் தங்கள் எழுத்தாற்றலைப் பயன்படுத்த வேண்டும். இறை நம்பிக்கை மிக்க ஒரு சமுதாயத்திலேயே அமைதியும், அன்பும் தவழும்' என்று தொழில் விடமைப்பு அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது அவர்கள் ஒட்டல் தப்ரபேனில் நடைபெற்ற பல்கலைக்கழக அரபு விரிவுரையாளர் ஜனாப் எம். ஏ. எம். சுக்கிரி அவர்களின் 'இறை தூதர் இன்றேல்...' என்னும் நூலின் விற்பனையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் கன்னி வெளியீடான இந் நூலின் வெளியீட்டு விழா முஸ்லிம் எழுத்தாளர் சங்க ஆதரவில் நடைபெற்றது. சங்கத் தலைவர் ஹாபிஸ் எம். கே. செய்யிது அகமது விழாவிற்கு தலைமை தாங்கினார். தலைவர் தமது தலைமையுரையில் கூறியதாவது!

'சீறாப்புராணம் தோன்றியதற்கு புலவர் உமரின் கவிதா மேதம் மட்டும் காரணம் அல்ல. வள்ளல் சீதக்காதி புலவர் உமருக்குக் கொடுத்த ஆதரவும் காரணம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதே போன்று இன்றைய எழுத்தாளர்களுக்கும் நமது வள்ளல்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்' என்றார்.

முஸ்லிம் எழுத்தாளர் சங்க துணைத் தலைவரும், நூலைப் பதிப்பித்த அரசு வெளியீட்டு நிர்வாகியுமான ஜனாப் எம். ஏ. ரஹ்மான் தமது உரையில் கூறியதாவது! சீறாப்புராணத்தை இன்றைய சந்ததியினர் பார்க்க முடியாதிருக்கிறது. பிறமதத்தினர் அந்த இலக்கியக் கருவூலத்தைக் கேட்டால் கொடுப்பதற்கு நம்மிடம் பிரதியில்லை. இன்று சீறாப்புராணத்தை புத்தகக் கடைகளில் பெற்றுவிட முடியாது. இந்த உயர்ந்த இலக்கியக் கருவூலம் மலிவு விலையில் வெளியாக வேண்டும். இதற்கு நமது வள்ளல்கள் ஒன்று கூடி ஒரு புத்தகச் சபையை

(9-ம் பக்கம் பார்க்க)





ரிஷி நேத்திர சஞ்சீவியின் புதிய விலை:

6 அவுன்ஸ் பாட்டல் 3-50

12 ,, ,, 6-50

# வட-கிழக்கில் நிர்வாக மொழி:

## நாயக்க தேரோவின் புகார்

## மாவட்டசபை பற்றிய பிரதமரின் கருத்தையும் மறுக்கிறார்

“மத்திய அரசாங்கம் சிங்களவர்களின் கையிலிருப்பதால் மாவட்டசபை நிறுவுவதாற் தீங்கு ஏற்படாது என்று பிரதமமந்திரி தமக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாரெனினும், மத்திய அரசாங்கத்தை, ஒரு பொம்மையாக்கி, திருமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் முதலிய பிரதேசங்களில் தமிழ் அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது என்று கிழக்கிலங்கை, தமன்கடுவ சங்கநாயக்காவும் சேருவில விகாராதிபதியுமான தம்பகஸ் ஆரே சுமேதங்கர தேரோ கூறினார்” இவ்வாறு ஒரு செய்தியைத் தவஸ (23-10-66) வெளியிட்டுள்ளது.

'நாயக்கதேரோ திரு. டட்லி சேனநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதத்திற் குறிப்பிட்டுள்ளதாவது:-தமிழரசு நிறுவுவதின் ஆரம்ப நடவடிக்கைதான் மாவட்டசபை அமைத்தல் என்றும் அதன் பின் வட, கிழக்கில் உத்தியோக மொழி தமிழ் என்றும் அமைச்சர் திருச்செல்வமும் கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. இரத்தினமும் கூறுகின்றனர். அப்படியானால் மாவட்டசபையால் தீங்கு ஏற்படாது என்று நீங்கள் கூறுவதின் அர்த்தமென்ன?

திரு. டி. எஸ். சேனநாயக்கா தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியதின் மூலமே நாட்டை ஐக்கியப்படுத்தினார். திருமலை, வவுனியா, அம்பாறை ஆகியவற்றைப் பார்த்தால் அவரது நோக்கம் நிறைவேறியிருப்பதைக் காணலாம்,

இனப்பற்று மிக்க தந்தையின் முகத்திலும் கரியைப் பூசி தந்தையின் பேருதவியைப் பெற்ற சிங்களப் பிரதேசங்களைத் தமிழர்களிடம் ஒப்படைத்துவிட்டு, அவர் குடியேற்றிய சிங்களவர்களை குடியிருக்க இடமின்றித் தவிக்க விடுவதற்காக நீங்கள் நடவடிக்கை எடுப்பது குறித்து வருந்துகின்றோம்.

இன்று வட,கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாகியுள்ளது. என்னுடைய அரிசிக் கூப்பனும் கூட சிங்களத்தில் இல்லை வவுனியா, முல்லைத்தீவு பிரதேசத்தில் ஒரு வீதிக்காவது ஒரு கிராமத்துக்காவது சிங்களப் பெயர் கிடையாது. மன்னார் வீதிகளின் பெயர்கள் சிங்களத்தில் பொறிக்கப்படவில்லை. சேருவிலையிலும் சுற்றுப் புறங்களிலுமுள்ள பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்ற சுற்று நிருபங்கள்கூட தமிழில் எழுதப்பட்டுள்ளன, திருமலையில் இலங்கை வங்கியின் அலுவல்கள் அனைத்தும் தமிழில் நடைபெறுகின்றன.

### தங்கவேலரின் இரகசிய பேச்சு

அடுத்து வரும் இந்தியப் பொதுத்தேர்தலில் தி. மு. க. தென்னிந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றுமென்றும், அதனால் இலங்கையிலுள்ள இந்தியர்கள் தங்களின் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ள முடியுமென்றும், அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தி. மு. க. தலைவர் திரு சி. என். அண்ணாத்துரை மார்ச்மாதத்தில் இங்கு வருவாரென்றும் இரத்தினபுரி வாடிவீட்டில் நடைபெற்ற தமிழ் தலைவர்களின் இரகசியப் பேச்சுவார்த்தையின் போது இலங்கைக்கு வந்துள்ள தி. மு. க. உபதலைவரான திரு. எம். தங்கவேலர் தெரிவித்தார்.

தென்னிந்தியாவில் பிரபல வகுப்புவாத ஸ்தாபனமான தி. மு. க. மீண்டும் இலங்கையில் தலைதூக்கி, மலைநாட்டுப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது' இவ்வாறு ஒரு செய்தியை 'தினபதி' நிறுவனத்தால்வெளியிடப்படும் தவஸ பத்திரிகை (22-10-66) வெளியிட்டுள்ளது.

### “நாம் தமிழர்களின் கையில் மலைநாடு”

'நாம் தமிழர் இயக்கம் மலைநாட்டைக் கைப்பற்ற இரகசிய பேச்சு' என்ற தலைப்பின் கீழ் 'தினபதி' நிறுவனத்தைச் சேர்ந்த 'சவஸ' கிழக்காணும் செய்தியை 22-10-66 ந் திகதி வெளியிட்டுள்ளது.

'மாண்டு மடிந்த நாம் தமிழர் இயக்கம் மீண்டும் ஒருமுறை மலை நாட்டுப்பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்கு ஆரம்பித்திருக்கிறதென்று தெரிகிறது.

கலைச் சங்கம் இலக்கியச் சங்கம் போன்ற பல்வேறு சங்கங்களின் பெயரால் தலைதூக்கியுள்ள நாம் தமிழர்கள் அந்தச் சங்கங்களின் மறைவில் தங்களின் பிரசார இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருப்பது பகிரங்க இரகசியமாகும். நாவலப்பிட்டி, கம்பளை, அட்டன், தலவாக்கொல்லை, மஸ்கெலியா, நோர்வூட் ஆப்கட் போன்ற மலைநாட்டு நகரங்கள் ஒவ்வொன்றிலும் இச் சங்கங்களின் கிளைகள் அமைக்கப்படுகின்றன. தமிழர்கள் பெருந்தொகையாக அவற்றிற் சேருகின்றனர்.

இந்தச் சங்கங்களின் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் இரகசியமாகவே நடைபெறுகின்றன. இந்த இரகசியச் சங்கங்கள் இப்பகுதிகளுக்குப் பெரிய பிரச்சினையாகியுள்ளது.

## சிங்கள இதழ்களில்...

## பதவியாவில் தமிழர் குடியேற்றமாம்!

'அனுராதபுரம், திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களிலும் சேர்ந்துள்ள பதவியா குடியேற்றத்திட்டம் இலங்கையிலுள்ள மிகப் பெரிய தனிச்சிங்கள விவசாயக் குடியேற்றத் திட்டமாகும்.

இதன் நிர்வாகம் அனுராதபுரம் கச்சேரியிடம் இருந்தாலும், இங்குள்ள காணிகளுக்குத் திருமலைக் கச்சேரியும் உரிமைகோரத் தொடங்கியுள்ளது! இங்கு குடியேற்றுவதற்காக 150 பேர்களைத் திருமலைக் கச்சேரி தெரிவு செய்திருப்பதால் நிலைமை நெருக்கடியாகியுள்ளது.

இதனை எதிர்க்கும் அங்குள்ள ஐ. தே. கட்சி கிளையின் தலைவர், தமிழர் சேட்பது போல புல்மோட்டையிலிருந்து தென்னைமர வாடி வரையுள்ள காணிகளை அவர்களுக்குக் கொடுத்தல் கிழக்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பாதை அமைத்துக் கொடுப்பதைப் போலாகும் என்று கூறினார்'

— தவஸ (23-10-66)

### சிங்கள ஆசிரியர்கள் திண்டாட்டம்

'கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுச் சென்ற சிங்கள ஆசிரியர்கள் தங்குவதற்கு யாரும் இடம் கொடுக்காததாலும், பலவித மிரட்டல்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாலும், பெரிய இடர்ப்பாடுகளுக்காளாகியுள்ளனர்' என்று தவஸ (23-10-66) வான லூச்சேனையிலிருந்து கிடைத்த ஒரு செய்தியை வெளியிட்டது.

### யாழ்தேவி உத்தரதேவி

'கோட்டையிலிருந்து புறப்படும் 'யாழ்தேவி' 'உத்தரதேவி' என்னும் இரு புகையிரதங்களும் கோட்டையிலிருந்து புறப்படாமல் வெள்ளவத்தையிலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று தமிழரசுக்கட்சியுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு ஸ்தாபனம் புகையிரத இலாகாவைக் கேட்டுக் கொண்டது.

ஆனால் புதிய நேரசூசிகையின்படி இவ்விரு புகையிரதங்களும் கோட்டையிலிருந்தே புறப்படுகின்றன. இதனால் அதிருப்தியடைந்த அந்த ஸ்தாபனம் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

### அகற்றுக!

அரசகருமமொழித்திணைக்களத்தின் ஆணையாளர் கலாநிதி நந்தத்தவ விஜேசேகராவை அந்தப் பதவியிலிருந்து உடனே அகற்றும்படி கோரி தமிழரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறாரென்றும், பிரதமர் இவ்விடயத்தைப் பரிசிலனை செய்கிறாரென்றும் அறியப்படுகிறது.

தமிழ் மொழி விசேட விதிகளை அமுல் நடத்தத் தவறியது குறித்து தமிழரசுக்கட்சி அரசகரும மொழித்திணைக்களத்தின் அதிபர் மீது சினங்கொண்டுள்ளது.

— எத்த (19-10-66)

### ஒருவர் கூட வரவில்லை

தமிழ் பாடசாலைகளுக்கு 1000 சிங்கள ஆசிரியர்களை அனுப்பியிருப்பதாக அமைச்சர் அசோகா கருணாரத்ன ஒரு கூட்டத்தில் கூறினார். ஆனால் இங்குள்ள ஒரு பாடசாலைக்குக்கூட சிங்கள ஆசிரியர்ஒருவர்தானும் அனுப்பப்படவில்லை.

மன்னார், காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்குச் சென்ற சிங்கள ஆசிரியர்கள் திரும்பிவந்து விட்டனர்' என்று 'தவஸ' வெளியிட்டுள்ள செய்தி மேலும் கூறுகிறது.




தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்

பயங்கரமான கிருமிகள் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கியிருந்து நோய்களைத்தொற்றவைத்துப் பரப்புகின்றன.

இந்தத்தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற உங்கள் வீட்டில் நம்பிக்கை வாய்ந்த ஒரு தொற்றுநாசினி தேவை.

டெற்றோல்—உலகின் அதி நம்பிக்கை வாய்ந்த தொற்று நாசினி—உங்கள் குடும்பத்தை எப்போதும் காப்பாற்றும்.

டெற்றோல்- வெட்டுக்காயம், கிறற்புண் முதலியனவற்றைத் தொற்றுக் கிருமிகளிலிருந்து காப்பாற்றும்.

டெற்றோல்- தொண்டைப்புண்ணைத் தடுக்கவும் குணமாக்கவும் உதவும்.

டெற்றோல்- மாதரின் பிரத்தியேக சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது; ஏனெனில் டெற்றோல் இதமூட்டி, சுத்தம் தருவதோடு, தொற்றுக் கிருமிகளிலிருந்தும் காப்பாற்றும்.

டெற்றோல்- கர்ப்ப காலத்திலும், பின்னரும் குழந்தையையும் தாயையும் காப்பாற்றுகிறது.

எப்போதும் வீட்டில் ஒரு போத்தல் டெற்றோல் வைத்திருங்கள்.

டெற்றோல் உபயோகிக்குமுன் எப்போதும் நீர் கலந்து கொள்ள வேண்டும்.

உலகின் அதி நம்பிக்கைவாய்ந்த தொற்று நாசினியான டெற்றோலை உலகெங்குமுள்ள டாக்டர்கள் உபயோகிக்கிறார்கள்.

டெற்றோல்

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு

## மலைநாட்டு மக்களை

# "நாடு கடத்தலை எதிர்ப்போம்"

'இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்படும்போது எவரும் பலவந்தமாக நாடு கடத்தப்படமாட்டார்கள் என்று தேசிய அரசாங்கம் தமிழரசுக்கட்சியிடம் உறுதி கூறியுள்ளது.

ஒப்பந்தம் அமுலாகும் போது இந்த உறுதிக்கு மாறுகக் காரியங்கள் நடக்குமாயின் தமிழரசுக்கட்சி அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்.

இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் போது ஏற்படக்கூடிய நிலைமை பற்றி இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் தூதுகோஷ்டியொன்று பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது.'

இ. தொ. கழகத்தின் தலைவர் திரு. வி. என்.நவரத்தினம் எம். பி. பன்வலை இ. தொ. க. மாவட்டக்குழுவின் விசேட கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டம் பன்விலை இ. தொ. கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைவர் திரு. நவரத்தினத்துக்குவரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் குத்து விளக்கேற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'கழகம்மலையகத்தில் ஆரம்பித்து சுமார் 3வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இந்த குறுகிய காலத்தில் கழகம் மிகவும் ஓங்கி வளர்ந்தமைக்கு காரணம் மலையகமக்களுக்கு தமிழரசுக் கட்சியிலுள்ள பூரண நம்பிக்கையே.

'அன்று கோப்பாய் கோமகன் அமரர் வன்னியசிங்கம் கண்ட கனவு இன்று நனவாகியுள்ளது. இன்று மலையகத்தில் எமது மூவர்ண கொடி தலையசைத்து வரவேற்கின்றது. தந்தை செல்வநாயகம் அன்று தொட்டு இன்றுவரை முழுமூச்சாக கழக வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகிறார். எமது கழகம் மற்றய தொழிற் சங்கங்களையும் பார்க்க கொள்கை, லட்சியத்தின் அடிப்படையில் இயங்கி வருகின்றது.

தொழிற் சங்கப் பிரச்சினை மட்டு மன்றி மற்றும் பொதுத் துறையிலும் மலையகமக்களுக்கு ஏற்படும் அன்றாட பிரச்சினைகளையும் கவனித்து வருகிறது. மலையகமக்களை இவ்வாண்டில் பலபிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன. இதற்கெல்லாம் அந்தந்த நேரத்தில் பரிகாரம் காணுவதற்கு கழகம் சில பலமுக்கிய திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

'மேற்படிப்புபடிக்க மலைநாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இதற்காக கட்சியும் கழகமும் போராடுகின்றன'

மாவட்டப்பிரதிநிதி திரு. எஸ். முத்தையா பேசுகையில் கூறியதாவது:-

'மலையகத்தில் பரம்பரையாக எத்தனையோ தொழிற் சங்கங்கள் இருக்கின்றன, ஆனால் இந்த மூன்றாண்டுக் காலத்தில் எமது கழகம் பல நன்மைகளைச் செய்துள்ளது. முதன்முறையாக எமது கழகம்தான் தோட்டத்தொழிலாளர்களை மரியாதையாக பேசவேண்டுமென்று ஓர் ஓர் அறிக்கையை தோட்டத் துரைமார்களுக்கும் துரைமார் சம்மேளனத்துக்கும் அறிவித்தது. இவ்வறிவித்தலைத்துரைமார்சம்மேளனம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

'1947ம்ஆண்டு மலைநாட்டு மக்களின் நன்மைக்காகவே தான் இலங்கை தமிழரசுக் கட்சி தந்தை செல்வாவின் தலைமையில் உருவாக்கப்பட்டது. அன்றுதொட்டு இன்றுவரை இ. த. அ. கட்சி மலைநாட்டான், மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான் என்ற வித்தியாசமில்லாமல் இயங்கி வருகிறது. எனவே எல்லோரும் எமதுமூவர்ணக் கொடியின் கீழ் ஒன்று திரள வேண்டும்.'

மாவட்டத்தலைவர் திரு. என் அங்கமுத்து நன்றியுரை நிகழ்த்தினர். மற்றும் அலுவலகப்பொறுப்பாளர் திரு. வெ.கருப்பையா, மாவட்டத் துணைத் தலைவர் திரு.வி.சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்கள்.

> **'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்**
>
> ஒரு வருடம் ரூபா 14-00
>
> ஆறு மாதம் ரூபா 7-
>
> நிர்வாகி
> சுதந்திரன்






பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

# கமலா பீடி

ஒரு முறைவாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தந்தி: தாமரை
தொலைபேசி 3597-6522


# மலையக எழுத்தாளர்கட்கு ஒரு வேண்டுகோள்

★ தோட்டமக்களின் இன்றைய வாழ்க்கைமுறை.

★ அவர்களிடையே தற்போது ஏற்பட்டுள்ள விழிப்பு.

★ அவர்கள் மத்தியில் தொழிற்சங்கங்கள் வளர்ந்த வரலாறு.

★ மலைநாட்டுமக்களின் தற்போதைய தொழிற்சங்கப் பிரச்சினைகள்.

★ தோட்டங்களுக்கு வெளியே மலையகத்தில் பரம்பரையாக வாழும் தமிழ்மக்களின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள்.

★ மலையகமக்களின் கல்விப்பிரச்சினை.

★ அன்றும் இன்றும் தோட்டமாதர்களின் நிலை.

★ பெரியகங்காணிமுறை வளர்ந்து, பிறந்து,தேய்ந்த கதை.

தமிழ்மக்கள் மலையகத்தில் குடியேறிய கதையும், காடுகள் தோட்டங்களாக மாறிய விந்தையும் (சரித்திர ஆதாரங்களுடன்).

தோட்ட 'லயன்' விடுகளைப்பற்றிய ஆராய்ச்சி (சுகாதாரக் கண்ணோட்டத்துடன்),

★ தோட்டங்களில் நடைபெறும் எழுச்சியூட்டும் விழா, கூத்து, விளையாட்டு, தெய்வழிபாடு மற்றும் கலைநிகழ்ச்சிகள்பற்றிய விபரங்களும் விளக்கமும்.

★ மலையகமக்களிடையே ஏற்பட்டுள்ள இலக்கிய வளர்ச்சி (அவர்கள் மத்தியில் தோன்றியுள்ள எழுத்தாளர்கள், கவிஞர்கள், அவர்களின் படைப்புகள்பற்றிய விபரங்கள்).

மலையகத் தமிழ்மக்களைப்பற்றிய இவைபோன்ற இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் உண்டு. அவற்றை ஆராய்ந்து இரத்தினச் சுருக்கமாகக் கட்டுரைகள் எழுதி அனுப்புங்கள் சுதந்திரனில் பிரசுரிப்பதற்காக! அத்துடன், மலையக மக்களைத் தட்டி யெழுப்பும்—அவர்களின் நிலையை எடுத்துக்காட்டும் உணர்ச்சிமிக்க கவிதைகளைப் புனைந்து 'மலைநாட்டுப் பகுதி'க்கு அனுப்புமாறு மலையகக் கவிஞர்களையும் வேண்டுகின்றோம்.

—ஆ—ர்.

# ஒரே கொடியின் கீழ் திரளும் தொழிலாளர்

[கரவைக் கிஷோர்]

வெள்ளைக்காரன் ஆட்சியிலே, தன் ஆட்சிக்குட்பட்ட நாடுகளைசிறிது செழிக்கச் செய்து நாட்டின் வளத்தைச் சூறையாடினான்.

இந்தக் கொள்ளைக்கூட்டத்தைக் கொழுக்கவைக்க கொடும்புலி வாழும் காடு எல்லாம் கழனியாக்கினார்கள். இரத்தம் வியர்வை வெள்ளமாகி நாட்டின் பொருளாதாரத்தைக் கொழுக்க வைத்தார்கள். மலைநாட்டு மக்கள் உயிரையே பணயம் வைத்து ஈழத்தைப் பொன் கொழிக்கும் நாடாக்கினர். காலபபோக்கில் ஈழமும் சுதந்திரம் பெற்றது. ஆட்சிப் பொறுப்பைப் பெற்றவர்கள் பதவிமோகத்தால் தமிழ்பேசும் பெருங்குடி மக்களை அடக்கி ஆள ஆசைப்பட்டார்கள். ஈழம் வாழ் தமிழ்மக்களின் மொழி நில குடியுரிமைகள் பறிக்கப்பட்டன.

மலைநாட்டுத் தொழிலாளிகள்ளத்தோணியானன். மலையகத்துத்தொழிற்சங்கத்தலைவர்கள்-ஆசியாவின் ஜோதியாம் மனித குல மாணிக்கம் முன்னை நாள் பாரதபிரதமர் நேரு மலையகத்து மக்களின் துயர் துடைப்பார் என்று தொழிலாளர் மத்தியில் வதந்திகளைப் பரப்பி, தமது பதவியைக்காப்பாற்றினார்கள்.

மலையகத்துத் தொழிலாளி மனிதனுகவே கணிக்கப்படவில்லை. எந்த மாமேதையானாலும் தாஞடாவிட்டாலும் தசை ஆறும் என்பார்களே சொந்தமும் பந்தமும் இருந்தால் அறை கூவல்கள் கேட்கலாமே ஒழிய; வேறொன்றுமில்லை.

காங்கிரஸ் தலைவர்கள் வாக்கை வலணியர்களாகக் கணிக்கப்பட்டுவிட்டார்கள். தொழிலாளியைக் கருவியாக்கி பதவிமவுசைப்பெறும் பண்புதான் மிகையாக உள்ளது. இக்கட்டத்தில் ஈழத்தின் இணையற்ற மக்கள் தலைவன் மலைநாட்டு மக்கள் மத்தியில்தன் நேர்கொண்டபார்வையைச் செலுத்தினன். மாறுபட்ட மனக்கோட்டங்களினுல் பாதிக்கப்பட்டவர்களும் வேறுபட்ட கொள்கை கொண்ட இனவேற்றுமையை உருவாக்கியவர்களும் தன்மானத் தந்தை மலைநாட்டில் புக முடியாது என்று வார்த்தை ஜாலம் செய்தனர். ஆனல் மலைநாட்டுத் தொழிலாளி தன்னிலை உணர்ந்தவன். தொழிலாளர் கழகம்தான் மலைநாட்டு மக்களின் ஒளிவிளக்கு என்று கருதி உற்ற உதவிகள் புரிந்தான்.

இந்த ஒரேகொடியின் கீழ் தான் மலைநாட்டுத் தொழிலாளியின் இன்னல்கள் இடர்பாடுகள், துயரங்கள் தொல்லைகள் அத்தனையும் தொலையும் என்று கருதி விட்டான் இந்த நம்பிக்கையை இழக்கவே மாட்டான். இழந்த உரிமைகளை பெற்றுத்தரத் தகுந்த ஒரே கொடியின் கீழ் திரளுவதுவிந்தையல்லவே. தொழிலாளர் கழகம் கண்ணியத்துடன் கடமை செய்யும் என்று இறுமாப்புடனிருக்கிறன் மலைநாட்டுத் தொழிலாளி;

# திருக்குணமலையும் பல்கலைக்கழகமும்

# திருக்கோணமலை என்பது திருக்குணமலையின் மரூஉ வழக்கே

திருகோணமலை என இன்று வழக்கிலிருக்கும் திருக்குணமலையின் வரலாற்றை ஆய்ந்துள்ள புலவர்கருணலய பாண்டியனார் இவ்விடம் உயர்ந்த பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு சிறந்த இடம் எனவும் இங்கு வலியுறுத்தியுள்ளார். பல்கலை பயிலிடம் நிறுவ பல ஆதாரங்களைக் காட்டிய புலவர் இதுவே பல்கலைக்கழகம் நிறுவ இலங்கையிலுள்ள தலைமைகால் இடமெனவும் ஆணித்தரமாக அடித்துக் கூறியுள்ளார். புலவர் கருணலய பாண்டியனார் இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பழம் பெரும் புலவர். தொல்காப்பியத்தைத் துறைபோகக் கற்றவர். முது பெரும் வயதிலும் தலைநகரில் தமிழ்ப்பணி செய்து கொண்டிருக்கிறார்.

இடையிடையே கடல் குறுக்கிட்டுத் தென்னகத்தையும் ஈழத்தையும் பிரிக்குமுன்பு தொடர்ந்து அகன்று நீண்டு கிடந்த பரந்த தமிழகத்துக் குக் குணக்கெல்லையாயிருந்த மலை குணமலையென வழங்கப்பட்டது. இது போலவே மற்றை மூன்றெல்லைகளும் வடமலை, குடமலை, தென்மலை என இருந்தன. குணக்கு—கிழக்கு. வடமலை திருவேங்கடம். குடமலை-குடகு அல்லது பொதியில். தென்மலை—குமரிமலை. இந் நாலெல்லைகளுந் தமிழகத்தின் அகப்பாட்டெல்லைகள் இதன் புறப்பாட்டெல்லைகளாவன குணகடலுந் தென்கடலுங் குடகடலும் வடுகப் பெருவழியுமென இவை.

குணமலைச் சாரலிற் கோயிலெடுத்த பொழுது குணமலை திருக்குணமலையாயிற்று; வேங்கடந் திருவேங்கடமாயினது போல.

திருக்குணமலை நாளடைவிற் பொது மக்கள் வழக்கிலே திருக்கொணமலை, திருக்கொணமலை, திருக்கோணமலை திருக்கோணமலை எனப்பலவாறு மருவி வழங்கலாயிற்று. அவ்வாறு மருவிக் கோணுதல் இயல்பாகுமென்பதனை மொழியியலாராய்ச்சியாளரறிவர்.

### ஆதாரம்

பல நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த ஆளுடைய பிள்ளையடிகளும் அவர்க்குப் பின் சில நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த அருணகிரிநாதரும் பொது மக்கள் வழக்குப் பற்றியே 'கோணமாமலை' எனவுந் 'திருக்கொணமலை' எனத் தேவாரத் திருப்பதிகத்திலுந் திருப்புகழ் மாலையிலும் பாடியருள்வாராயினர்.

சேரமான்களுடைய தலைப்பட்டினமாயிருந்த வஞ்சிக்களமென்பது திருவஞ்சிக்களமான பின்பு திருவஞ்சிக்களம் திருவஞ்சைக்களமென மருவி வழங்க, அது பற்றித் தேவார முதலிகள் அஞ்சைக்களமென்று பாடினார்களாயின் அஞ்சைக்களமென்பதே இயற்பெயராய்விடாது.

பெயர் வரலாற்றை நோக்கும் பொழுது வஞ்சிக் களமென்பதே விளக்கமான பொருள் படுவதாகவும் அஞ்சைக் களமென்பது அவ்வாறு பொருள்படாததாகவுந் தோன்றும்.

### இயைபின்மை

அது போலவே குணமலை கோணமலையாயிருக்கும் பொழுது அது வந்த வரலாறு சிறிதும் பொருத்தமாகத் தோன்றுவதில்லை. குணமலையென்பதன் பொருள் பொருத்தமாகத் தோன்றுதலைக் காணலாம்.

பிறர் குடியேற்ற முண்டாகு முன்பு தமிழர் கடல் கடந்துபுகுந்து காடுகெடுத்து நாடாக்கித் தென்னகத்தோடு ஈழத்தையிணைத்த பொழுது, பெருந் தமிழகத்தின் குணக்கெல்லையென்பது பற்றிக் குணமலை யென்னும் பெயர் உண்டாயிருக்கவுங் கூடும்.

நன்னூல் செய்த பவணந்தி முனிவர் காலத்திலே ஈழத்துக்குத் தென்னகத் தொடர்பு விட்டிருந்ததனாலே அவர் தமிழகத்துக்குக் குணக்கெல்லை குணகடலென்றார்.

பல்லாயிரம்யாண்டுக்கு முற்பட வாழ்ந்த தொல்காப்பியனார் காலத்திலே வேங்கடத்துக்கு வடக்கிலுங் குமரிக்குத் தெற்கிலும் வெற்றுப் புலங்கிடந்தமையினாலே தமிழகத்துக்கு வடவெல்லையுந் தென்னெல்லையுமே எடுத்தோதிக் குணமலைக்குக் குணபாலும்

### புலவர் கருணலய பாண்டியனார்

குடமலைக்கு குடபாலும் கடலல்லது நிலமில்லாமையானே குணக் கெல்லையுங் குடக்கெல்லையு மெடுத்தோதாராயினர் பாயிரங் கூறிய பனம்பாரனார். அவர் குணமலை, குடமலை யென்னும் வழக்குக்களே அவ்விரண்டெல்லைகளைக் குறித்து நிற்றலின் அவற்றையெடுத்தோதாமல் அவ்வாறு எல்லை குறித்து வழங்கும் பெயர்கள் அந்நாளையில் இன்மையின் வடவெல்லையுந் தென்னெல்லையுமே தெரிந்தோதினரெனவுங் கொள்ளலாம்.

### சூழல்

திருக்குணமலையை அடுத்துள்ள ஊர்ப் பெயர்பலவும் நிலாவெளி, குச்சவெளி, மூதூர் என்றாற்போலத் தனித் தமிழ்ச் சொல்லாயிருப்பதுந் தனித் தமிழ்ச் சொல்லாகிய திருக்குணமலையை வலியுறுத்துவதாம்.

மலை என்பதனைத் தனித் தமிழ்ச் சொலன்றென மறுப்பாரிலர். மலை என்பதனொடு சேர்ந்தன்றிக் கோணமென்று தனித்து வழங்கலாற்றாமையானுங் கோணமலை குணமலையேயாமென்பது பெறப்படும்.

கோணமென்பது வடசொல்வாகவோ வேற்றுமொழிச் சொல்லாகவோ இருக்குமாறால் மலைக்கு ஈடான வேறு சொல்லோடு கூடியும் வழங்கியிருக்கும்.

முது பெருந் தமிழகத்தின் குணக்கெல்லையா யிருந்தது குணமலை எனக் கொள்ள விருப்பமில்லாததாரும் ஈழத்தின் குணக்கெல்லை குணமலை யென்பதனை மறுக்க மாட்டார். குணமலையைத் தவிர ஈழத்தின் குணக்கெல்லையாவது வேறொன்றுமில்லை.

திருக்கோணமலையைச் சிலர் ஒலியியைபு பற்றித் திரிகோணமலையென மாற்றி வடசொல்லாக்கி முக்கோணமாயுள்ள மலையெனப் பொருள்விளக்கஞ் செய்தல் பண்டைக்காலத்தில் இல்லை. தேவார முதலிகளும் அருணகிரிநாதரும் அவ்வாறு கொண்டிலர். கல்வெட்டுக்களிலும் அவ்வாறு வழங்கியதில்லை.

அன்றியும் உலகிலுள்ள குன்றுகளெல்லாம் அடி பரந்து முடி கூரைமுகடு போலக் குவிந்திருப்பது பற்றி முக்கோணமாகத் தோன்றுவது இயல்பு. அதனால் ஒரு குன்றினையுந் தனித்து முக்கோணமலையென்று மக்கள் வழங்கார்.

திரிகோணமலை யென்பது திருக்கோணமலை யென்னுந் தமிழ்ச் சொற்கு ஈடாகவோ இச்சொல்லை அவ் வடசொற் கலப்பினின்றுந் தோன்றியதென்று காட்டுதற் பொருட்டாகவோ வடமொழியாளர் படைத்த படைப்பாதல் வேண்டும்.

அன்றேல் திருக்கோணமலையென்பது பொதுமக்களிடைச் சிதைந்து திரிகோணமலையென மருவி வழங்கியிருத்தல் வேண்டும். திருகோணமலை அல்லது திருக்கொணமலை என்பது திருக்குணமலை என்பதன் மரூஉ வழக்கேயாம்.

### பல்கலைக்கழகம்

இலங்கையின் கிழக்கெல்லையாயுந் தமிழ்ப் பகுதிக் கெல்லாம் நடுவாயும் விளங்குந் திருகுணமலைப் பட்டினம் அரசு வீற்றிருந்த தலைமையுந் தொன்மையுந் வரலாற்றுப் புகழுந் தெய்வத் தாய்மையும் வாய்க்கப் பெற்றுத் திகழுஞ் சிறப்புடையது.

இத்தகைய திருக்குணமலையிலே தமிழ்ப்பகுதிக்குரிய பல்கலைக்சழகம் அமைத்தற்குத் தமிழ்த் தலைவர் சிலர் முயன்று வருவது பாராட்டுதற்குரிய செயலாகும். பல்கலைக்கழகத்தினாலே திருக்குணமலையின் புகழுந் திருக்குணமலையினாலே பல்கலைக் கழகத்தின் புகழும் அவ்விரண்டினாலுந் தமிழ் மக்களுடைய புகழும் பன்மடங்கு பெருக்கமடையும்.

# பல்கலைக் கழகம் நிறுவ பல்வகையிலும் சிறந்தது திருக்குணமலையேயாம்

தமிழ்ப்பகுதியிலுள்ள பல்கலைக் கழகம் தமிழ் மொழியாலே பல்வேறு கல்விகளையும் பாதுகாத்து வளர்த்தற் பொருட்டுண்டாதலே இயல்பாதலால் அதனைத் தமிழ்ப் பல்கலைக்கழகமென்னுது உலகத்துப் பல்கலைக்கழகம் பலவும்போலத் திருக்குணமலைப் பல்கலைக் கழகமென ஊர்ப் பெயரோடு சேர்த்து வழங்கப்படுதலே மரபும் பொருத்தமுமாகும். பின்பு அங்ஙனமே வழக்கும் உண்டாகும்.

இலங்கையிலே சிங்களப் பகுதியுந் தமிழ்ப் பகுதியுந் தனித்தனி நாடுகளாதலாலே தமிழ் நாட்டுக்கென ஒரு பொதுப் பல்கலைக் கழகம் வேண்டுமென்பது மறுக்க முடியாதது. அதனால் இலங்கையரசு சிங்களப் பகுதியிலுள்ள பல்கலைக்கழகத்தைக் காட்டித் தமிழ்ப் பகுதிக்கு வேண்டிய பல்கலைக்கழகத்தைத் தட்டிக் கழிக்க முடியாது.

இதனாலே பல்கலைக்கழகம் பற்றாக் குறையினாலுண்டாகும் மாணவர் நெருக்கடியைத் தவிர்க்க வேண்டியதுமாகின்றது. திருக்குணமலைப் பல்கலைக் கழகம் மதவேற்றுமை, இனவேற்றுமையின்றித் தமிழாலே உயர்நிலைக் கல்வி பயில விரும்புமெல்லா மாணவர்க்கும் பொதுவாதலால் அது தனிப்பல்கலைக் கழகமெனக் கொள்ளப்படாது.

### தனிச்சிறப்பு

பல்கலைக்கழகம்அமைத்தற்குத் திருக்குணமலை போலப் பலவகையாலுஞ் சிறப்புடைய ஓரிடத்தினை இலங்கை முழுதினுங் காணக் கிடையாது.

மாணவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உவகைப் பெருக்குக்கும் உதவும் மலை, கடல், காடு, வயல், சுனை, குளம், யாறு, துறைமுகம், பரந்த வெளியிடம், என இவ்வியற்கைக் காட்சி வளப்பு முழுதுமொருங்கமையப் பெற்றது திருக்குணமலை.

(15-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழக கோரிக்கை தமிழர் குரலாக ஒலிக்கட்டும்

லீலா! லீலா!! லீலா!!!
1967
லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
லீலா டயறி
பல வர்ணங்களில்
தமிழ், சிங்களம், ஆங்கிலம்
ஆகிய மும் மொழிகளிலும்
துரிதமாய் தயாராகின்றன
வியாபார அன்பர்களே
லீலா விலைப்பட்டியலுக்குஎழுதுங்கள்
பலவிதமான புதுப் புது அம்சங்களுடன்
1967-ம் வருடத்துக்குரிய கலண்டர்
தயாராகின்றது
வேறு எந்தக் கலண்டர்களிலும் பார்க்க
சகல துறைகளிலும் முன்னிற்பது
லீலா தயாரிப்புகளே!
ஏகவிநியோகஸ்தர்கள்:
லீலா ஸ்டோர்ஸ்
249, நோரிஸ் வீதி, கொழும்பு-11

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 அக்டோபர் மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183


# தேர்தல் படிப்பினை

இடைத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றதன் விளைவு என்ன? தவருன வழியிற் செல்ல இவ்வெற்றியால் சுதந்திரக் கட்சி மென்மேலும் உந்தப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய வகுப்பு வாதக் கூச்சலுக்கு மக்கள் செவி சாய்ப்பார்கள் என்று கருதுவதற்குத் தேர்தல் முடிவுகள் இடமளிக்கவில்லையே!

இடைத்தேர்தலில் வகுப்புவாதப் பிரசாரத்தால் ஐ. தே. கட்சி தோல்வி அடையவோ, வகுப்புவாதப் பிரசாரத்தால் சுதந்திரக் கட்சி வெற்றியடையவோ இல்லை. தோல்விக்கு முக்கிய காரணம் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியேயன்றி வகுப்புவாதப் பிரசாரமன்று என்பதைச் "சுதந்திரன்" அரசியல் நிருபர் ஆதாரங்களுடன் நிரூபிக்கிருர்.

இத் தேர்தலில் ஐ. தே. கட்சியின் வாக்குகளின் தொகை கூடியிருக்கிறதேயன்றி, குறையவில்லை என்பதையும் நமது அரசியல் நிருபர் சுட்டிக் காட்டியுள்ளார். இம் மூன்று தொகுதிகளிலும் 1965 மார்ச்சின் போது ஐ. தே. கட்சி பெற்ற வாக்குகளின் தொகை 39,765—அதே மூன்று தொகுதிகளிலும் இடைத் தேர்தலில் அதே கட்சி பெற்ற வாக்குகளின் தொகை 49,674.

1965:ல் ஐ. தே. கட்சி எந்தத் திட்டத்தை இம் மூன்று தொகுதிகளின் மக்கள் முன் வைத்து 39 765 வாக்குகளைப் பெற்றதோ, இன்று அதே திட்டத்துக்கு அதைவிட அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கிறது. வேறு சொற்களிற் கூறின், இடைத் தேர்தலில் ஐ தே. கட்சியின் திட்டத்துக்கு ஆதரவு பெருகியிருக்கிறது—குறையவில்லை. ஆதலின் ஐ. தே கட்சி தனது திட்டத்தை எத்தகைய மாற்றமுமின்றி தொடர்ந்து இன்னும் 3½ ஆண்டுகளுக்கு அமுல் நடத்தலாம்.

கடந்த பொதுத்தேர்தலின்போது ஐ. தே. கட்சி மக்களுக்கு 21 வாக்குறுதிகளை அளித்ததென்றும், அவற்றில் "நான்கு போயா நாட்களுக்கும் விடுமுறை அளித்தல்" ஒன்றைத் தவிர, வேறு எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லையென்றும் இடைத்தேர்தலின்போது குற்றஞ்சாட்டப்பட்டது. 'கியூ' வரிசையை ஒழித்தல், விலைவாசிகளைக் குறைத்தல், சாமான்கள் தட்டுப்பாட்டை நீக்குதல், வேலையின்மையை அகற்றுதல் போன்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

வகுப்புவாதப் பிரச்சாரமும்தீவிரமாகச்செய்யப்பட்டதெனினும், அதையும் தூக்கிவிழுங்கிவிட்டு பொருளாதாரப்பிரச்சினைகள்தான் தேர்தல் களத்திற் பூதாகாரமாக மக்கள்முன் தலை தூக்கி நின்றன. இதை ஆட்சியாளர் சரியாக எடைபோட்டுக் கொள்ளவேண்டும்.

ஆட்சியாளர் செய்த சில தவறுகளும் ஐ. தே. கட்சியைப் பாதித்ததென்பதும் உண்மை. 200,000க்கு மேற்பட்ட மலைநாட்டுத் தமிழர்கள் ரூ 17-50 பஞ்சப்படிகோரி வேலைநிறுத்தம் செய்தபோது அரசாங்கம் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டிருந்த தவறு, பண்டாரவளையிலும் பலாங்கொடையிலும் இடைத்தேர்தலின்போது எதிரொலித்தது.

ஒரு சிக்கலான, தெளிவற்ற வர்த்தகக் கொள்கையைக் கையாண்டதின் விளைவாகக் கிராமப்புறச் சில்லறை வியாபாரிகள் பலரின் பகைமையையும் அரசாங்கம் தேடிக்கொண்டது. இதுவும் ஓரளவு தேர்தலில் பாதித்திருக்கலாம் என்றே அவ்வரசியல் அவதானிகள் கருதுகின்றனர். பதவிகள் வழங்கியதிலும், இடமாற்றம் செய்ததிலும், தண்டனை வழங்கியதிலும் ஊழியர்கள் கொண்ட அதிருப்தியும் ஓரளவு பரவலாகத் தேர்தல் தொகுதிகளில் எதிரொலித்தது.

எதிர்க்கட்சியினரின் வகுப்புவாதப் பிரசாரமே தோல்விக்குக் காரணம் என்று தவருன அடிப்படையில் அதனைக் கணிக்கக்கூடாது என்பதற்காகவே இக்காரணங்களை இங்கு எடுத்துக்காட்டினேம். தேர்தல் மேடைகளில் அமைச்சர்கள் உட்பட சில பொறுப்புள்ள ஐ. தே கட்சிப் பிரமுகர்களின் சில தவருன சொற்பிரயோகங்களும்வாக்காளர்களைஎதிர்த்திசையிற் திருப்புவதற்கு உதவின என்பதையும் நாம் கூருமலிருக்கமுடியாது.

ஐ தே. கட்சி தோல்வியடைந்தது இத்தகைய காரணங்களினலேயன்றி, அதன் திட்டத்தின் மீது மக்கள்கொண்ட அதிருப்தியினலன்று. தேர்தல் பிரச்சாரத்தின் போக்கு, வாக்காளரிடம் பொங்கிக் கொண்டிருந்த பிரச்சினைகள், வாக்களித்தவர்களின் எண்ணிக்கை, ஆகியவற்றை அவதானித்து நாம் கண்ட முடிவு தேர்தல் முடிவு சுதந்திரக்கட்சிக்கு வெற்றியேயன்றி அதன் வகுப்புவாதக் கொள்கைக்கு வெற்றியல்ல என்பதும், அது ஐ. தே. கட்சிக்குத் தோல்வியேயன்றி அதன் கொள்கைக்கோ திட்டத்துக்கோ தோல்வியல்ல என்பதுமே.

ஆதலின் ஐ தே. கட்சி தனது திட்டங்களை அமுல்நடத்துவதுடன் சிறுபான்மை மக்களின் பூரண ஒத்துழைப்பையும் பெற்று தேசிய ஐக்கியத்தை அசைக்க முடியாத கருங்கற்கோட்டையாக கட்டி யெழுப்புவதற்கு தீவிரமாக முனைய வேண்டும். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை என்றும் மறவாமல் அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பது ஐ தே. கட்சியின் கடமையாகும். இதுதான் இத்தேர்தலின் படிப்பினை.

# தேசிய ஒற்றுமைக்கு வெற்றி

# பொருளாதாரப் பிரச்சினையே ஐ. தே. க. தோல்விக்கு காரணம்

கூட்டிப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. மூன்றுதொகுதிகளிலும் சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கிருர்கள்; மேல் எழுந்த வாரியாக தேர்தல் முடிவுகளை நோக்குகையில் இது சுதந்திரக் கட்சிக்கு ஒரு பெரும் வெற்றி என்றே கூற வேண்டும். யதார்த்த நிலையில் தேர்தல் முடிவுகளைத் தரிசிக்கையில் பல சாதகமான உண்மைகள் இம் முடிவின் பின்னணியில் இருப்பதை நாம் உணரமுடிகிறது.

சுதந்திரக்கட்சி வேட்பாளர்களின் வெற்றிக்கு முக்கிய காரணம் அவர்களின் தொடர்ச்சியான—கட்டுப்பாடான பிரச்சாரம் என்பதை எவரும் மறுக்க முடியாது. சுதந்திரக் கட்சிப் பிரச்சாரப் பேச்சாளர்கள் துரும்பைத் தூணுக்கிக் காட்டுவதில் வல்லவர்கள். தேர்தலின்போது இதனை ஒழுங்காகவும், சிறப்பாகவும் செய்து முடித்துவிட்டார்கள்.

### ஐ. தே. க. பிரச்சாரம்

ஐ. தே. கட்சியின் பிரச்சார இயந்திரம் சரியான முறையில் முடுக்கிவிடப்படவில்லை என்பதை எவரும் மறுக்கமுடியாது. கடந்த பத்து ஆண்டுகளாக பதவியிலிருந்து இன்று எதிர்க்கட்சியாகத் திகழும் சுதந்திரக் கட்சி தனது பிரச்சாரத் திறமையால் நாட்டில் உள்ள பிரச்சினைகள் அனைத்திற்கும் ஐ. தே. கட்சியின் நிர்வாகத் திறமையின்மையே காரணம் என்று எடுத்துக்காட்டியுள்ளது.

குற்றங்களைச் சுமத்தும் அணியில் சுதந்திரக்கட்சி நின்றுகொண்டு பிரச்சாரத்தை படுவேகமாக முடுக்கிவிட்டது. ஐ. தே. கட்சியோ குற்றங்களுக்குப் பதில்சொல்லும் பொறுப்பை ஏற்று தனது பிரச்சாரத்தை உயிரற்றதாக்கிவிட்டது.

இன்று நாட்டில் எழுந்துள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கு ஐ தே. கட்சி நிர்வாகமா அல்லது பழைய சுதந்திரக்கட்சி நிர்வாகத்தின் எதிர் விளைவுகளா காரணம் என்பதை யாரும் ஆராயத் தேவையில்லை. ஓரளவு பொருளாதார அறிவு உடையவர்களும் இந்த உண்மையினைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

### பொருளாதார நெருக்கடி

பொறுப்பற்ற முறையில் திடீர் திட்டங்களையும் சட்டங்களையும் உருவாக்கிய சுதந்திரக் கட்சியின் நிர்வாகத் திறமையின்மையே இன்று நாட்டில் இருக்கும் சகல பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் காரணமாகும். சுதந்திர—கூட்டரசாங்கக்கட்சி நிர்வாகத்திடமிருந்து தேசிய அரசாங்கம் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் நேரத்தில் இந்நாட்டின் கஜான காலியாகவே இருந்தது.

ஒருவார காலத்திற்குத்தானும் உணவுப் பொருட்களை வேண்டுவதற்குப் பணமிருக்கவில்லை. தேசிய அரசாங்கம் தனது திறமையும்--அனுபவமும் மிக்க அமைச்சர்களைக்கொண்டு உடனுக்குடன் திட்டங்களைத் தீட்டி அந்நியநாட்டு உதவிகளைப் பெற்று நாட்டில் ஏற்படவிருந்த கடும்பஞ்சத்தை, உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்தது.

கோஷ்டிசேரா நடுநிலைக் கொள்கையே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை என்று கூறிக்கொண்டு சுதந்திரககட்சி அரசாங்கம் கம்யூனிஸ்ட் சீனவுடன் கொஞ்சிக் குலாவியது. இதனல் கம்யூனிஸ்ட் சீன தவிர்ந்த ஏனைய நாடுகளின் வெறுப்புக்கு இலங்கை இலக்காகியது. உரிய காலத்தில் தேசிய அரசாங்கம் பதவியை ஏற்று உண்மையான கோஷ்டி சேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தலைப்பட்டதனுலேயே இன்று உலகநாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்தன.

### பால்மாவு தட்டுப்பாடு

இந்த உண்மைகளை எல்லாம் உரியமுறையில் ஐ. தே. கட்சி பிரச்சாரகர்களால் எடுத்துக்கூற முடியவில்லை. இப்பிரச்சினைகள் அனைத்தும் சரியான முறையில் எடுத்துக்

சுதந்திரன்
அரசியல் நிருபர்

கூறப்பட்டிருந்தால் ஐ. தே. கட்சி கேள்விக் கணைகளைத் தொடுக்கும் அணியிலும் சுதந்திரக்கட்சி பதலளிக்கும் அணியிலும் தள்ளப்பட்டிருக்கும்.

இன்று பால் மாவு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் பழைய சுதந்திரக்கட்சி நிர்வாகமே என்பதை எவரும் மறுக்கமுடியாது. வேலையில்லாதோர் தொகை மலைபோல் ஏறியிருக்கிறது என்றால் அதற்கும் காரணம் சுதந்திரக்கட்சியின் பொறுப்பற்ற பத்து ஆண்டுக்கால நிர்வாகமே. இந்த உண்மைகள் எடுத்துக் கூறப்படவில்லை.

கடந்த பொதுத் தேர்தல் காலங்களில் இந்த உண்மைகளை திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தார். அன்று திரு. ஜே. ஆர். நடத்திய பிரச்சாரத்தை இன்று சுதந்திரக் கட்சியினர் நடத்தியுள்ளார்கள்.

தேர்தல் முடிவுகள் இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளைப் பின்னிப் பிணைந்தே அமைந்துள்ளன; உணவுப் பொருட்களின் பற்ருக்குறைகளுக்கு தேசிய அரசின் தவருன நிர்வாகமே காரணம் என்ற நம்பிக்கை பொதுமக்களின உள்ளங்களில் ஆழப் பதிந்துவிட்டது. சுதந்திரக்கட்சியினர் தமது திறமையான பிரச்சாரத்தினல் இதனைச் சாதித்துவிட்டார்கள்.

### தேசிய ஒற்றுமைக்கு பெரும் வெற்றி

தேர்தல் முடிவுகளைக் கொண்டு மக்கள் தேசிய அரசாங்கத்திற்கு மாருகத் தீர்ப்பளித்துவிட்டார்கள் என்று யாராவது கூறினல் அதுமுற்றிலும் தவருகும். அத்தகைய ஒரு முடிவு அரசியல் தெளிவின்மையின் பிறப்பிடமாகவே இருக்கமுடியும்.

உண்மையில் தேசிய அரசாங்கத்தைச் சிங்களப் பொதுமக்கள் ஆதரிக்கிருர்கள். தேசிய ஒற்றுமைக்குச் சிங்களப் பொதுமக்கள் மனப்பூர்வமாக சம்மதம் கொடுத்துவிட்டார்கள்.

ஐ. தே. கட்சிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையில் உள்ள உறவு நீடித்து நிலைக்க வேண்டுமென்பதை சிங்களப் பொதுமக்கள் மனப்பூர்வமாக விரும்புகிருர்கள் என்பதை இத் தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

### மக்கள் ஆதரவு

இடைத் தேர்தல் நடைபெற்ற பலாங்கொடை, பண்டாரவளை, பெந்தர-எல்பிட்டியா ஆகிய மூன்று தொகுதிகளிலும் கடந்த பொதுத் தேர்தலின்போது ஐ. தே. கட்சி வேட்பாளர்களுக்கு கிடைத்த மொத்த வாக்குகளையும், இன்று இடைத் தேர்தலின்போது கிடைத்த மொத்த வாக்குகளையும் எடுத்துப் பார்க்கும்பொழுது இந்த உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று தெளிவாகிறது.

1965 மார்ச் பொதுத்தேர்தலின்போது இம் மூன்று தொகுதிகளிலும் ஐ. தே. கட்சி வேட்பாளர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 39,765 ஆகும். இன்று இடைத்தேர்தலின் போது இத் தொகுதிகளில் போட்டியிட்ட ஐ. தே. கட்சி வேட்பாளர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 43,674 ஆகும். 3 904 அதிகப்படியான வாக்குகள் ஐ தே. கட்சிக்கு கிடைத்திருக்கிறது.

இம் மூன்று தொகுதிகளிலும் சுதந்திரக்கட்சி வேட்பாளர்களுக்கு 1965ம்ஆண்டு மார்ச்சில் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 43 499 ஆகும். இன்று கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 47,239 ஆகும். 3,740 அதிகப்படி வாக்குகள் இன்று சுதந்திரக்கட்சிக்குக் கிடைத்திருக்கிறது.

இன்று கிடைத்த அதிகப்படி வாக்குகளைக் கொண்டே நாம் கட்சிகளின் வளர்ச்சியையும் வெற்றி— தோல்வியையும் நிர்ணயிக்க முடியும்.

வளர்ச்சி என்ற நிலையில் பார்க்கும் பொழுது ஐ.தே கட்சி சுதந்திரக் கட்சியிலும் பார்க்க மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இவ்விடைக் காலத்தில் வளர்த்திருக்கிறது. என்பதை மறுக்க முடியாது;

ஐ. தே. கட்சி மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை வளர்த்துக் கொண்டமைக்கான காரண காரியங்களை நாம் ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். பத்து ஆண்டுகளுக்கு மேலாக நசிந்து போன தேசிய ஒற்றுமையை ஐ. தே. கட்சி கட்டி வளர்க்க உதவியதே இதற்குக் காரணமாகும்.

### பஞ்சப்படி போராட்டம்

இதே நேரத்தில் ஒவ்வொரு தொகுதிகளிலும் ஏற்பட்ட முடிவுகளையும் தனித்தனியே ஆராய்ந்து பார்க்க வேண்டியது நமது பொறுப்பாகும். பெந்தர — எல்பிட்டிய தொகுதி சிங்கள பௌத்த மக்களைக் கொண்ட ஓர் தொகுதி. இங்கு ஐ. தே. கட்சி வேட்பாளர் கடந்த

(9-ம் பக்கம் பார்க்க)

# சிங்களப் போதனை

# தமிழர்களுக்கு ஓர் இக்கட்டான காலம்

## தமிழரசுத் தந்தை விளக்கம்

'இலங்கை வாழ் தமிழ் மக்களும், இஸ்லாமிய மக்களும் இந் நாட்டில் கடந்த பல்னூறு ஆண்டுகளாக, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல, ஒன்றுபட்டு, தமிழ் பேசும் தேசிய இனமாக விளங்கி வந்திருக்கிறார்கள். இவ்வளவு காலமும் தமிழ் மக்களோடு மிக அன்னியோன்னியமாக சேர்ந்து வாழ்ந்து வந்த தமிழ் பேசும் இனத்தின் ஒரு பகுதியான முஸ்லிம் மக்கள் இப்பொழுது தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பிக்க வேண்டுமென்று பெரிய



சத்தம் போட்டு கேட்கிறார்கள். இதை தமிழர்கள் ஒரளவும் விரும்பவில்லை. இருந்தபோதிலும், முஸ்லிம் மக்களின் பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பிப்பதை நிற்பாட்டுவதற்கு வழி தெரியாமல் தவிக்கிறார்கள். சனநாயகத்தன்படி முஸ்லிம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமே!'

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார். மேலும் அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

'முஸ்லிம் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் படிப்பிப்பது தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் வருங்காலச் சந்ததியினருக்கும், தீமையைத்தான் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

'இலங்கை வாழ் தமிழருக்கு பெரிய இக்கட்டான காலம் ஒன்று வந்திருக்கிறது. இந்த நிலைபரத்திலிருந்து நாங்கள் தப்பிக் கொள்வது எப்படியென்பது ஓர் பெரிய பிரச்சினையாகத் தோன்றுகிறது.

## எழுத்தாளர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அனமக்க வேண்டும்' என்று கூறினார்.

நூல் ஆசிரியர் ஜனாப் எம். ஏ. எம். சுக்கிரி பேசுகையில் மொழிபெயர்ப்புக் கலையில் முன்னிற்பவர்கள் முஸ்லிம்கள். எட்டாம் நூற்றுண்டிலேயே நமது மூதாதையர்கள் பிறமொழிகளிலிருந்து உயர்ந்த தத்துவங்களை அரபு மொழியில் மொழிபெயர்த்திருக்கிருர்கள். அவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றியே நானும் எனது இந் நூலை மொழிபெயர்த்திருக்கிறேன்' என்றார்.

எழுத்தாளர் சங்கச் செயலாளர் ஜனாப் யு. எல். தாவூத் பேசுகையில் 'பிற நாடுகளிலிருந்து வரும் தரமற்ற இலக்கியங்களைத் தடை செய்தால் தான் இந்த நாட்டில் சுயம்புவாக தமிழ் இலக்கியம் வளரமுடியும்' என்றார்.

மாவட்ட நீதிபதிகள் ஜனாப்கள் எம். எம். அப்துல்காதர், ஏ.எம். அமீன் ஆகியோர் நூலை மதிப்பீடு செய்தனர். ஜனாப் எஸ். எம். கமால்தீன் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

## கொழும்பு மாநகரசபை வரிப்பகுதியில் தமிழ் துவேஷம்

கொழும்பு மாநகர சபையைச்சேர்ந்த வரிப்பகுதியில் தமிழில்எழுதப்படும்கடிதங்கள் சில எழுதுவினைஞர்களால் கவனிக்கப்படுவதில்லையென்றும், சில சமயங்களில் அவை கிழித்து வீசப்படுவதாகவும் அறியப்படுகிறது. இடதுசாரித் தொழிற்சங்கங்களுடன் தொடர்புடைய சிலர் வரிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னரே இந்தக் கைங்கரியம் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு மாநகர சபையின் வரியிறுப்பாளர்களில் அனேகர் தமிழ்பேசுவோராயிருந்தும், மாநகரசபையின் வரிப்பகுதியில் இப்பொழுது சில காலமாக தமிழ் துவேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்று தமிழ்பேசும் வரியிறுப்பாளரிடையே மனத்தாங்கல் ஏற்பட்டுள்ளது.

சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற கவிஞர் அப்துல் காதர் லெப்பைக்கும் இவ்விழாவின் போது பாராட்டுத் தெரிவிக்கப் பட்டது. அவரைப் பாராட்டி ஜனாப் ஏ. எம். ஏ. அசீஸ், ஜனாப் ஜே. எம். காசிம், ஜனாப் உவைஸ் ஜனாப் அஸ்வர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

மாநகரசபையின் வரிப்பகுதிக்கு தமிழில் எழுதப்படும் கடிதங்கள் கவனிக்கப்படுவதில்லையென்றும், தமிழில் எழுதி அனுப்பப்படும் காசோலைகள்கூட நிராகரிக்கப்படுகின்றன என்றும் பலத்த குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

இதற்குக் காரணம், தற்போது வரிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இடதுசாரித் தொழிற்சங்கங்களுடன்தொடர்புடைய சில எழுதுவினைஞர்களின் தமிழ்த் துவேஷ நடவடிக்கையேஎன்றும் சுட்டிக்காட்டப் படுகிறது.

## தேசிய ஒற்றுமைக்கு....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின் போது பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 22,085 ஆகும். இன்று கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 22,455 ஆகும்: எதிர்க் கட்சிகள் கூறுவது போன்று பௌத்த சிங்களப் பொது மக்கள் ஐ தே. கட்சியையும் தேசிய அரசாங்கத்தையும் விரும்பவில்லையென்றால் எங்ஙனம் ஐ. தே. கட்சி வேட்பாளருக்கு இத் தொகுதியில் வாக்குகள் கூடியிருக்கின்றன. இத் தொகுயின் தேர்தல் முடிவு பௌத்த சிங்கள மக்களும் தேசிய ஒற்றுமைக்கு முழு ஆதரவு கொடுக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

நிந்தகம் ஒழிப்பு மசோதாவை தேசிய அரசாங்கம் இறைவரையில் சட்டமாக்கியிருந்தால் நிச்சயம் பலாங்கொடைத் தொகுதியிலிருந்து சுதந்திரக்கட்சியை வேர் அறுத்திருக்க முடியும். பண்டாரவளைத் தொகுதியில் ஐ. தே. கட்சி வேட்பாளர்தோல்வியடைந்தமைக்கு தேசிய அரசாங்கத்தின் சில தவறான நடவடிக்கைகளே காரணமாகும். தோட்டத் தொழிலாளர்களின் குறைகளை நேரடியாக தெரிந்து கொள்ளாது இ. தொ. காங்கிரஸ் தரகா மூலம் தெரிந்து கொள்ள முயற்சிப்பதே அனைத்துக்கும் காரணமாகும்.

பஞ்சப்படிப் போராட்டத்தின் போது தேசிய அரசாங்கம் பாராமுகமாக இருந்தமையினால் பெரும்பகுதித் தொழிலாளர்கள் இம் முறை தமது வாக்குகளை யாருக்குமே கொடுக்க மறுத்து விட்டார்களாம். சுதந்திரக் கட்சியினர் வகுப்புவாதிகள் என்பதனால் அவர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் வாக்களிக்க விரும்பவில்லை.

வகுப்புவாதத்திற்கும், தனிச் சிங்களக் கோஷத்திற்கும் இடமில்லை என்பது தெளிவாகிவிட்டது. மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளே இன்று முக்கியத்துவம் பெறுகின்றன.

தேர்தல் முடிவுகள் மாவட்டசபை அமைப்பை பிற்போடலாம் என்ற பலமான வதந்தி பரப்பப் படுகிறது. வதந்தி உண்மையெனில் அது கோளைத்தனமான முயற்சியாகும். உண்மையில் தேசிய ஐக்கியம் வளர்ந்திருக்கிறது. தேசிய அரசாங்கத்திற்கு அன்று கிடைத்த ஆதரவு மேலும் வளர்ந்துள்ளது. எனவே மாவட்டசபைத் திட்டம் வெற்றியைத் தேடிக் கொடுக்கும் என்பதை நாம் நிச்சயமாக நம்பலாம்.

## தேர்தல் முடிவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடைத் தேர்தல் முடிவுகள் அரசாங்கக் கட்சியின் பெரும்பான்மையை எப்படியும் பாதிக்கவில்லை என்றும், பெரும்பான்மை பாதிக்கப்படாதிருப்பதினால் அரசாங்கம் இராஜினமாச் செய்யவேண்டிய அவசியமெதுவுமில்லை என்றும் எடுத்துக் கூறினார்.

தற்போது அரசாங்கக் கட்சியில் 98 உறுப்பினர்களும் எதிர்க் கட்சியில் 58 உறுப்பினர்களும் இருக்கிறார்கள் என்றும் 40 உறுப்பினர்களைக் கொண்ட அமோகமான பெரும்பான்மை இருக்கும் போது அரசாங்கம் இராஜினமா செய்ய வேண்டியதில்லை என்றும் கூறினார்.

எதிர்க் கட்சியினரின் வகுப்புவாதப் பிரச்சாரத் திட்டம் பற்றிக் கூறுகையில் இதில் ஆச்சரியப்படுவதற்கெதுவுமில்லை என்று கூறிய அவர் இடைத் தேர்தல் முடிவுகள் வாழ்க்கை செலவுப் பிரச்சினையை நாம் உடனடியாக சமாளிக்கத் தவறிவிட்டோம் என்பதையே காட்டுகிறது என்றும்கூறினார். அரசாங்கக்கட்சியினர் சர்வாதிகாரத்திற்குத் திட்டமிடுகின்றனர் என்ற பிரசாரத்தை மக்கள் என்றுமே நம்பமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

# மத்திய வங்கி தமிழ்ப் படிவங்கள்

## மக்கள் பார்வையிலிருந்து மறைக்கப்படலாம்

மத்திய வங்கியில் உள்ள படிவங்களை தமிழ்மொழி பெயர்க்கும் வேலை இப்பொழுது ஆரம்பமாகியிருக்கிறது. இம் மொழிபெயர்ப்பு குறித்த காலத்துள் முடிவுபெற்றாலும் படிவங்கள் மக்கள் பாவனைக்குக் கிடைக்கக் காலமாகலாம் என்று கூறப்படுகிறது.

மத்திய வங்கி சம்பந்தப்பட்ட படிவங்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்படும் வேலை துரிதமாகநடைபெறுவதாகத் தெரிகிறது. கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் அவர்களின் தொடர்ச்சியான முயற்சியின் காரணமாகவே இம் மொழிபெயர்ப்பு வேலைகள் இப்பொழுதுநடைபெறுவதாக அறியப்படுகிறது.

மொழிபெயர்ப்பு வேலைகளைஆரம்பித்திருக்கும்வங்கி நிர்வாகிகள் அப் படிவங்களை மக்கள் பாவனைக்குவிடுவதில் சில ஒழுங்கற்ற முறைகளை மேற்கொள்ள விருப்பதாக நமக்குச்செய்திகிடைத்திருக்கிறது. வழக்கிலிருக்கும் படிவங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே அச்சாகியுள்ளன. தமிழ்மொழிபெயர்ப்பு வேலைகள் முடிவடைந்ததும் தமிழ்ப்படிவங்கள் தனியாக தட்டெழுத்துப் பிரதிகளாகவே தயாரிக்கப் படுமாம். இங்ஙனம் தயாரிக்கப்படும் படிவங்களும் பொது விசாரணைப் பகுதியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படமாட்டாது என்றும், யாராவது விரும்பிக் கேட்டாலே அப்படிவங்கள் கொடுக்கப்படும் என்றும் இதற்கான ஒழுங்குகள் நடைபெற்றிருப்பதாகவும் அறியப்படுகிறது.

படிவங்களை மொழிபெயர்ப்பதில் அதிகாரிகள் அவசரங் காட்டினாலும், மொழிபெயர்ப்பு வேலைகள் ஆமை வேகத்திலேயே நடைபெறுகிறது. மத்திய வங்கியில் கடமையாற்றும் சகல தமிழ் ஊழியர்களையும் இம் மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபடுமாறு வங்கி நிர்வாகம் அவர்களைக் கேட்டபொழுது அவர்கள் மறுத்து விட்டார்கள் என்றும்' மொழி பெயர்ப்புப் பகுதிக்கு புதிய உத்தியோகஸ்தர்களையும் அதிகாரிகளையும் நியமிக்கும் வண்ணம் அவர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

வங்கி நிர்வாகிகள் தமிழ் மொழி பெயர்ப்புப் பகுதியை விஸ்தரிக்க விரும்பாது, இருக்கும் தமிழ் ஊழியர்களைப் பயன்படுத்தி அவர்களின் சக்திக்கும் அதிகமான வேலைகளைப் பெற முயற்சித்து வருகிறார்கள் என்று நம்பப்படுகிறது.

இப்படிவங்களை இப்பொழுது அவசரமாக மொழி பெயர்த்தாலும், அவற்றை வெளியிடுவதில் அதிக கால தாமதமாகலாம் என்றும் தெரிகிறது. வங்கி மொழிபெயர்ப்புப் பகுதியில் தகைமை வாய்ந்த தமிழ் மொழி பெயர்ப்பு அதிகாரி இல்லாமையால் இம் மொழி பெயர்ப்பு அனைத்தும் அரசகரும மொழித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அவர்கள் அங்கீகாரம் பெற்ற பின்னரே வெளியிடப்படுமாம்: தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை ஏற்கனவே நியமித்திருந்தால் இக்கால தாமதத்தைத் தடுத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

வங்கி அதிகாரி ஒருவர் இம் மொழி பெயர்ப்பு வேலைகள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் வேண்டுமென்றே இவ் வேலைகள் தாமதிக்கப்படுவதாகவும் வங்கி அதிகாரிகள் சிலர் ஏதாவது அரசியல் மாற்றம் ஏற்படுமா என்று ஆலோசித்து வருவதாகவும் கூறினார்.

# முள் வேலி

அந்தச் சிறையிலுள்ள நூற்றுக்கணக்கான சீவன்களுள் முத்தையா என்ற சீவனும் ஒன்று. அவனை அந்தச் சிறையில் எல்லோருக்கும் தெரியும் என்று சொல்லமுடியாது. அவனுக்கு அங்கு வந்தபின் தன் வயதில் ஒரு ஆண்டைக் கூட்டிக்கொண்டதால் ஏற்பட்ட தகுதியேயொழிய வேறு எந்தவிதமான தகுதியும் இல்லாததே இதற்குக் காரணம்.

அவனைப்பற்றிச் சொல்ல முன்னர் அந்தச் சிறையைப் பற்றிச் சொல்லவேண்டும்.

ஒரு சிறிய மைதானத்தில் சுற்றிலும் தகரத்தாலான சுவர் எழுப்பி நடுவில் திறந்த வெளி அரங்குகள் போன்ற இரண்டு மூன்று தகரக் கொட்டகைகள் கொண்டதுதான் அந்தச் சிறை. அங்குள்ளவர்களுக்கு அதாவது கைதிகளுக்கு வேளைக்குச் சாப்பாடு வேளைக்குத் தூக்கம். இப்படியாக எல்லாம் வேளாவேளைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதிசயமான சிறைதான்,

உணவு வரும்பின்னே மணியோசை வரும் முன்னே என்ற சிறை மொழிக்கிணங்க மணியொன்று அழுகிறது. உடனே நீண்டு வளைந்த 'கியூ' ஒன்று உருவாகிவிடுகிறது. அது அரசாங்க சேலைக்கடையில் நமது பெண்களின் அணிவகுப்புப்போல என்று சொல்லலாம். அதோ அந்தக் கியூவில், குப்பைத் தொட்டிக்கு அருகே உடல் நெருங்கச் சாரக்கட்டை அரையில் ஒரு கையால் இறுகப்பற்றியபடி நாக்கைச் சுழட்டிய வண்ணம் நிற்பது நான் முன்னர் அறிமுகப்படுத்திய முத்தையாதான். இவ்வளவுக்கும் மேலாக அவனைப் பற்றியோ அந்தச் சிறையைப்பற்றியோ எனக்கு ஒன்றும் தெரியாது.

அங்குள்ள அத்தனைபேரும் செய்த குற்றம் சட்ட மறுப்பு. அதாவது இந்தப் புண்ணிய பூமியில் அனுமதியின்றி நுழைந்தது. அதாவது கள்ளத்தோணிகள். எந்த நாட்டிலும் எவரும் சூட்டியிராத பெயர். முத்தையாவை நான் அறிமுகம் செய்துகொண்டது ஒரு சுவையான கதையல்ல. என்றாலும் அதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனால் அது ஒரு அவலச் சுவையாக மாத்திரம் இருக்கமாட்டாது. இதயம் பிழியப்படும் கதை.

மேற்படி சிறைக் கோட்டத்திற்கு வெளியே காலை மாலையும் கைதிகளின் அனுதாபிகளும் ஆதரவாளர்களும் (ஏன் இப்படித்தேர்தல் பாஷையில் கூறுகிறேனென்றால் அவர்களின் உறவும் இந்தத் தேர்தல் உறவு போலத்தான்) வந்து சேர்வார்கள். மாலையானால் ஐந்து மணிக்கெல்லாம் தகரச் சுவர்களில் உள்ள கம்பி வலை அடித்த யன்னல் கதவுகள் திறந்து விடப்படும். அவற்றினூடாக உள்ளே உள்ளவர்களும் வெளியே உள்ளவர்களும் சம்பிரதாயமாக சிலவற்றைத் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ள நல்ல வசதியாக இருக்கும். இதற்குச் சட்டமும் கொஞ்சம் கருணை காட்டியிருக்கிறது. இப்படியாக அவர்களைத் தேடி ஒரு சிலராவது வந்து போகாவிட்டால் அந்தப் பிறவிகளின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை அறிய உளநூல்படிக்கவேண்டிய தேவையில்லை.

ஆனல் பாவம் முத்தையாவுக்கு அப்படியாக வந்து போய் ஆறுதல் கூறுவதற்கு இதுவரை நானறிய எவரும் வரவில்லை. எப்படி வரமுடியும். அவன் தான் அனாதையாக ஆதரவற்றவனாக மடியிலே ஸாமட்டையும் இல்லாதவனாக நமது சுதந்திர இலங்கையின் வீதிகளில் அலைந்தவனாயிற்றே. அரசாங்கத்தின் கருணையினால்தான் இன்று இந்த நிலையிலாவது இருக்கிறான். அவனோடு அதே தோணியில் கடல் கடந்து வந்தவர்களில் ஒரு சிலர் அதிகாரிகளின் கண்ணில் காசைத் தூவி விட்டு வலுகலாதியாக இருக்கிறார்கள் என்பது அவன் கூறி எனக்குத் தெரிந்த பகிரங்க ரகசியம்.

வழக்கமாக எல்லாரும் 'வாகிங்' என்ற சொல்லால் வேலையில்லாத்தனத்தை நாகரீகமாக மறைப்பது போல நானும் ஒருநாள் தற்செயலாக அந்த யன்னல் பக்க வீதிவழியே வந்தேன். கொஞ்சநேரம் அந்தப் பிராந்தியத்தில் நிறைந்து வழிந்த கலகலப்பைக் கவனித்தபடி நின்றுகொண்டிருந்தேன். அப்போது அந்த நெருங்கிய கூட்டத்திற்குள்ளிருந்து, யன்னலின் உள்ளிருந்த வண்ணம் பரிதாபகரமான இரண்டு விழிகள் என்னை உற்று நோக்குவதைக் கண்டேன். ஒருவகையான ஏக்கம் குமைந்து கிடந்தது போன்ற அவ்விழிகளில் என்ன காந்த சக்தியோ எனக்குத் தெரியாது. என்னையறியாமல் அந்த யன்னலருகே சென்றேன்' சும்மா இருக்கமுடியாமல் 'எப்படிச் சௌக்கியமா?' என்று கொஞ்சம் இந்தியப் பாணியில் என்வாய் உளறிக் கொட்டியது. அதைக் கேட்டதும் அந்த விழிகளில் தோன்றிய உணர்ச்சி நன்றியா, மகிழ்ச்சியா— அது என்னவென்றே என்னல் கூறமுடியாது. ஆனல் அந்த உணர்விலிருந்து உள்ளத்தில் எத்தனையோ காலமாகக் குமைந்து கிடந்த ஏக்கம் ஒன்று திடீரென மறைந்து போனதை நன்றாக அறிய முடிந்தது என்பதை மாத்திரம் கூற முடியும். அவன் பதிலுக்கு ஏதோ ஒரு வகையைச் சேர்ந்த சிரிப்பு ஒன்றை உதிர்த்தான். ஏதோ இருக்கிறேம் என்று கூறுவதைப்போல, கூடவே நீங்கள் யாரைப்பார்க்க வேண்டும்' என்று கேட்டான். ஒருத்தரையும் இல்லை சும்மா அப்படிப்பார்த்தேன்' என்று மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பதில் கொடுத்தேன். உடனே 'அட இவ்வளவுதானு?' என்ற தோரணையில் அவன் முகம் சோர்ந்து விழுந்தது. முன்பிருந்த ஆவலை இப்போது அவன் முகத்தில் காணேம்!

தன்னைப்பார்க்கத் தான் என்று சொல்லக்கூடாதா என்ற அற்ப ஆசையும் அவன் இதயத்தில் ஒரு மூலையிலாவது உதித்திருக்குமென்பதை அந்தச் சோர்ந்த முகத்தில் நான் காணத் தவறவில்லை.

அந்தப் பரிதாபகரமான நிலையை அவனிடம் மேலும் வளர்க்கக் கூடாது என்ற பரந்த மனப்பான்மையுடன் சிறிது நேரம் அவனிடம் பேச்சுக் கொடுத்தேன். என்னைப்போன்ற போக்குகளும் இந்த உலகத்தில் உண்டு என்பதை அவன் அறியவில்லைப் போலும்... அதனல் அவன் முதலில் தயங்கினுன். அப்புறம் அவனை என் மீது நம்பிக்கை வக்கப் பண்ண நான் எடுத்த முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல. யாரிடமாவது தன் கதையைக் கூறவேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்தவனுக்கு என்னைப் போன்ற தினுசுகள் கிடைத்தால் விடுவானு? மடை திறந்து பெருகியது. அந்த வாழ்க்கை. ஒரு தனி வாழ்க்கை. இந்த உலகத்தில் அவனுக்கு வாழவேண்டுமென்று ஆசையாம். பைத்தியக்காரன். அந்த ஆசையின் உத்வேகம் தாங்காமல் கடல் கடக்கவும் அவன் தயங்கவில்லை. கடைசியில் கண்டதென்ன? 'அவன் ஒரு கள்ளத் தோணி!' அவன் கண்ணீர் தான் எனக்குக் கதை சொல்லிற்று. சோகத்திற்கும் இந்தக் கண்ணீருக்கும் ஏன் இவ்வளவு அந்தரங்கமான நட்பு.

எமது சிறுகதை

முதல் சந்திப்பே இப்படியான பரிதாபச்சுவையுடன் ஆரம்பமாகியது. அதற்குப் பிறகு, அவனிடம் அடிக்கடி போய்வரத்தொடங்கினேன். இதற்குக் காரணகாரணியங்களை ஆராயவேண்டிய தேவையில்லை. நான் சில வகைகளில் ஏழை. கொஞ்சம் பொருத்தம் ஏற்படத்தான் செய்யும். அத்தோடு, அரசாங்கத்தின் சிரஞ்சீவியப் பேச்சு வார்த்தைகளைப் போல எமக்குள்ளும் எந்தத்தலைப்பிலும் அடங்காத பேச்சுவார்த்தை வளர்ந்து கொண்டு வந்தது. இப்படியாக எனக்கும் அவனுக்குமிடையில் நம்பிக்கையான நட்பு ஒன்று உருவாகிவிட்டது. ஒரு ஆண்டுக்கு மேலாக அவன் அந்தச் சிறையில் அனுபவித்துவந்த தனிமையுணர்வு என்னுடைய நட்பால் ஓரளவாவது தீர்ந்தது என்று கொள்வதில் நான் பெருமைப்படத்தான் வேண்டும். ஏனென்றால், அவனிடம் இன்னொருவனுக்குச் சொன்னல் தான் ஆறும் என்ற நிலையிலிருந்த தாப உணர்வுகள் அத்தனையும் எனக்குக் கூறித் தீர்த்துவிட்டான். ஆனல் சாத்தான் தூங்குவதில்லையே.

நேற்று மாலை நான் அவனைக்காண வேண்டுமென்று சென்றபோது என்னுடைய மணிக்கூண்டின் பிரகாரம் கதவடைக்கும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. மைதானத்தில்கால்வைத்த போது கதவுகள் சாத்தப்பட்டு ஐந்தாறு நிமிடங்கள் ஆகிவிட்டன, என்பது தெரிந்தது. முகத்தில் ஏமாற்றம் வழியும் முன்னர், கலைந்து கொண்டிருந்த அனுதாபிகள் ஆதரவாளர்கள்மேல் என் கவனத்தைத்திருப்பினேன்.

கூட்டம் கலையவும் அதன் எதிர்புறமாக ஒருகையில் நிலத்தோடு உராய்ந்தபடி இழுபடும் ஒரு குழந்தையும், தோளில் இன்னெரு குழந்தையுமாக ஒரு பெண் என்னை நோக்கித் தயங்கித் தயங்கி வருவதைக் கண்டேன். அவளுக்கு இருபத்தைந்துக்கு மேல் இருக்காது. அவளுடைய மூக்கையும், முழியையும் காதுகள் பிய்ந்துபோகும்படியாகத் தொங்கிக்கொண்டிருந்த குண்டலங்களையும், அந்த மாலைவெயிலில் மினுங்கிக்கொண்டிருந்த மெல்லிய கரிய நிறத்தையும் கண்டவர்கள் உடனே அனுமானித்துவிடுவார்கள் 'பாவம்' 'இந்தப் பெண்'

அவள் எனக்குக்கிட்ட வந்ததும் எல்லா புறமும் ஒரு கண்ணேட்டம் செலுத்திவிட்டு தகரச்சுவரை நோக்கி மெல்ல நடந்தாள். கூடவே கையில் இருந்த குழந்தையையும் மூக்கில் வழியும் சீழைப் புறங்கையால் தேய்த்தபடி இழுபட்டுக் கொண்டு சென்றது. அப்போதுதான் தெரிய வந்தது அவள் என்னை நோக்கி எந்தத் தேவையுடனும் வரவில்லையென்பது. இது அங்கு எனக்கு கிடைத்த இரண்டாவது ஏமாற்றம். அதைச் சுலபமாகச் சமாளித்துக் கொண்டேன். ஏனென்ருல் அந்தச் சந்தர்ப்பத்தில் என்னை எவரும் கவனிக்கவில்லை.

என்னதான் நடக்கிறதென்று பார்ப்போமே என்ற ஆசையுடன் மெல்ல எதுவும் தெரியாதவன் நகர்ந்து சென்று தகரச்சுவரின்யன்னல் ஓரமாக நின்றுகொண்டிருந்த அந்த பெண்ணிற்குச் சிறிது தூரத்தில் நின்றுகொண்டேன்!

அவள் என்னைக் கவனியாதவள் போல் பூட்டிக்கிடந்த யன்னலின் இடைவெளியினூடே உள்ளே நோக்கிவிட்டு நிமிர்ந்தாள். 'நீங்கள் யாரைத் தேடுறீங்க?' என்று சும்மா ஏதாவது கேட்க வேண்டுமென்ற நோக்கத்தில் கேட்பதுபோல் கேட்டேன். அவள் கைக்குழந்தையைச் சுட்டிக் காட்டிச்சிறிது தயக்கத்தோடு 'தகப்பனைத் தேடுகிறேனுங்க' என்ருள். 'அப்படியா இப்போ பார்க்க முடியாதே! அவங்க பேரென்ன என்றேன். ஏதோ நான் எல்லாம் தெரிந்தவன் என்று அவள் எண்ணும்படியாக. அதற்கு அவள் பதில் சொல்லவில்லை. திரும்பவும் யன்னலின் இடைவெளியினூடே உள்ளே பார்த்துவிட்டு தகரத்தில் ஒரு தட்டுத்தட்டினுள்.

அவள் கதவைத் தட்டிவிட்டு நிமிர்ந்த சில விஞடிக்குள் உள்ளிருந்த இரண்டு கண்கள் அவளை நோக்கித் திருதிருவென்றுவிழிப்பதைக் கண்டேன். அந்தச்சோடிக் கண்கள் எனக்கு மிகவும் பழக்கமான கண்கள். சந்தேகமில்லை. அவை நண்பன் முத்தையாவினுடையது தான். 'அடபாவி இந்த நிலையிலும் இந்த மாதிரியெல்லாம் எண்ணம் ஓடுதே' என்று திடீரென நினைத்துக் கொண்டேன். நல்லவேளை அவள் நான் நிற்பதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. என்ன நடக்கிறது பார்ப்போம் என்ற ஆவலில் ஒன்றும் அறியாதவன்போல தகரச் சுவரில் சாய்ந்தபடி ஒரு வாரமாகச்சவரம் செய்யாத கன்னத்தைத்தடவிக்கொண்டிருந்தேன். அவள்தான் முதலில் பேசினுள். இத்தனைக்குள்ளும் அவள் முத்தையாவுடன் தான் பேசப்போகிருள் என்பது எனக்கு முன்னமே தெரிந்திருக்க நியாயமில்லை. பின்னர்தான் தெரிந்து தொலைந்தது. நான் அடபாவி என்று அவனைத் திட்டியது ஒருவகைக்குச் சரிதான். ஏனென்ருல் முன்பு இப்படியான பெண் பிரஜைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றி அவனை நான் கேட்ட போது தனக்கு எந்தப் பெண்ணையுமே தெரியாது என்று இல்லாத சத்தியமெல்லாம் பண்ணிவன்தான் இந்த முத்தையா. அவன் இப்போது என்னைப்பேயனுக்கி விட்டு ஒரு பெண்ணேடு உறவு பேசுகிருன். அதுவும் எந்த உறவு? எனைப்பொறுத்தவரையில் இந்த உலகத்தில் என்றுமே தேவையில்லாத மனைவி என்று உறவு.

அவளைக் கொஞ்சம் கவனியுங்கள். முன்பு விட்டுபோன பேச்சைத் தொடர்வது போல் அவளிடமிருந்து வார்த்தைகள் பிறக்கின்றன. 'நீஇப்பவும் இன்னு நினைச்சுக்கிட்டிருக்கே நீ உள்ளே போயி சொகமா இருக்கியே, நா இஞ்சே ரண்ணு கொளந்தைகளையும் வைச்சுக்கிட்டு யென்ன செஞ்சுக்கிறதுன்னு புரிஞ்சிக்காமே தவிக்கிறேன்' என்று அவள் கூறிய போதுகண்கள் நீர்க்குடமாகிவிட்டன.

'ஒனக்கென்ன இப்போ குறைஞ்சிபோச்சி. நா வர்றப்போ கையிலே சல்லி தந்துக்கிட்டுதானே வந்தேன். அதை வைச்சுக்கிட்டு காம்ருவுக்குள்ளே அடைஞ்சு கிடக்கிறது. யேன்இங்கேயும்வந்து ரெம்பதொந்தரவு பண்றே.'

'ஆமா! நீ லட்சம் லட்சமாய் சல்லியைக் கொட்டிட்டுப் போயிட்டே. நா அதை செலவு பண்ணத் தெரியாமேத் தவிக்கிறேன் அப்படித்தானே! மூதேவிப் பொணமே! நீ இப்படியெல்லாம் பேசிறியே ஒனக்கு நாக்கிலே நரம்பு இருக்கா? இருந்திருச்சானு இப்படி பேசுவியா? ஒம்மேலே நம்பிக்கை வைச்சதுக்கு இப்படியெல்லாம் செய்துபுட்டு நீ குஷியா ஊருக்குப் போறே. நா இஞ்ச யாருடைய ஒதவியை வைச்சுக்கிட்டு சீவிக்கிறது. என்ன பேசாமே இருக்கே!' அவள் குரல் படிப்படியாக அதிகரித்துக் கீச்சுக் குரலாக மாறி கடைசியாக அழுகையாக பரிணமித்து வெடித்தது.

'எதுக்காக நீ இஞ்சே சாயந்திரமெல்லாம் வந்துக்கிட்டு மூஞ்சியைமுஞ்சியைக் கசக்கி அழவுறே. நீ அழுதா என்னை வெளியே விட்டுப்புடுவாங்களா. விருப்பமானு சர்க்காரு முன்னலே போயி அழு.'

,ஆமா இவ்வளவு பேச மாத்திரம் தெரிஞ்சிகிட்டிருக்கே கையிலே கொளந்தை ரண்டைத்தந்திட்டு இப்படிப் பேசினு ஆவுமா? என்னை இந்தக்கோலத்தில்விட்டிட்டு நீ ஊருக்குப்போயி நன்னு இருப்பியா? உனக்கேன்இனி பொண்டாட்டியும் புள்ளையும்.'

'எடி கய்தை. சொன்னல் கேட்கமாட்டே. அதெல்லாம் பிறகு பார்த்துக்கலாம் நீ முதல்லே இங்கிட்டிருந்து போயி தொலை.' அவனுடைய குரல் தீர்க்கமாக ஒலித்து ஓய்ந்தது. அதற்குப்பிறகு அவனுடைய பேச்சையே காணேம். அவன் அப்புறம் போயே விட்டான். அவள் தனியாளாக அழுது கொண்டிருந்தாள். நான் செய்வதறியாது நடக்கஆரம்பித்தேன். இதற்குப்பிறகு முத்தையாவுடன் எனக்கு என்ன பேச வேண்டிக்கிடக்கு: மனந்தாளாமல் திரும்பிப் பார்த்தேன். அவள் அழுது கொண்டே இருந்தாள். தோளில் ஒரு குழந்தை...... கையில் ஒரு குழந்தை........

எஸ். இராஜகோபாலன்

# முப்பெரும் தலைவர்களின் மூன்றாவது சந்திப்பு

## இந்திய நாட்டின் புகழ் மீண்டும் வளர்கிறது

உலக நாடுகள் மூன்று பெரும் முகாம்களாக பிரிந்து நிற்கின்றன. அவையாவன கம்யூனிச முகாம், முதலாளித்துவ முகாம், கோஷ்டி சேரா நடுநிலை நாடுகள் அணி. கம்யூனிச அணி சில ஆண்டுகளாக இரண்டு பட்டு நிற்கின்றது. சீனு ஒரு அணியின் தலைமையையும், ரஷயா மறு அணியின் தலைமையையும் ஏற்றுள்ளது.

ரஷ்யாவின் அணியில் உள்ள நாடுகள் இவ்வாரம் மாஸ்கோவில் கூடியுள்ளன. மாஸ்கோவில் நடைபெற்ற இந்த உச்சி மாநாட்டில் போலந்து, கங்கேரி, செக்கோஸ்லவியா, பல்கேரியா, கிழக்குஜேர்மனி, ருமேனியா போன்ற நாடுகளின் அரசியல் தலைவர்கள் கம்யூனிச நாடுகள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளையும், வியட்னும் யுத்தம் பற்றிய நிலைமையையும் ஆராய்ந்துள்ளனர். மேலும் கம்யூனிஸ்ட் சீனவைத் தனித்து ஒதுக்குவது பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்பட்டிருக்கின்றது.

கம்யூனிச முகாம்களின் மாநாடு மாஸ்கோவில் நடைபெற்ற நேரத்தில் முதலாளித்துவ முகாமைச் சேர்ந்த சில நாடுகள் மணிலாவில் கூடி வியட்னும் பிரச்சினையையிட்டு ஆராய்ந்தன. இம்மாநாட்டில் அமெரிக்க ஜனதிபதி திரு. லிண்டன் பி. ஜோன்சன் கலந்து கொண்டது ஓர் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

அவர் ஜனதிபதியான பின்னர் ஈடுபட்ட முதல் வெளிநாட்டுச் சுற்றுலா இதுவாகும். இம்மாநாட்டில் ஏழு நாடுகள் கலந்துகொண்டன.

### தில்லி மாநாடு

கம்யூனிச அணியின் உச்சி மாநாடு மாஸ்கோவிலும், முதலாளித்துவ அணியின் உச்சி மாநாடு மணிலாவிலும் நடைபெற்ற நேரத்தில் நடுநிலை நாடுகளின் உச்சி மாநாடு ஒன்று நமது அண்டைநாடான இந்தியாவின் தலைநகரில் நடைபெற்றுள்ளது. இம்மாநாடு எம்மைப்பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மாநாடு நடைபெறும் அரங்கு நமது அண்டை நாடு என்பதால்மட்டுமன்றி இலங்கையும் கோஷ்டி சேரா நாடுகளின் முக்கிய பங்காளன் என்றமுறையில் இம்மாநாட்டின் முடிவுகளையும் ஆராயப்பட்ட பிரச்சினைகளையும் நாம் உன்னிப்பாக ஆராயக் கடமைப்பட்டுள்ளோம்.

கோஷ்டி சேரா நாடுகளின் அணி பெரிதாகும். ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகள் இந்த அணியில் உள்ளன. இதனை உச்சி மாநாடு என்று அழைத்தால் அது நடுநிலை நாடுகள் மத்தியில் பெரும் பிளவை ஏற்படுத்தும்.

ஏற்கனவே பிரதமர் இந்திரா கெய்ரோ, பெல்கிரேட் மாஸ்கோ ஆகிய தலைநகரங்களுக்கு மேற்கொண்ட விஜயம் இந்த நாடுகள் மத்தியில் சிறு சலசலப்பை ஏற்படுத்தி இந்தியாவையும் இந்திராவையும் சந்தேகக் கண்ணுடன் நோக்க வைத்துள்ளன. எனவேதான் பத்திரிகைகள் இம்மாநாட்டை நடுநிலை நாடுகளின் உச்சி மாநாடு என்று அழைத்த போதெல்லாம் இந்தியப் பிரதமர் அப்படி வர்ணிக்க வேண்டாம் என்று வேண்டினர்.

### மூவரினதும் மூன்றாவது சந்திப்பு

உள்நாட்டுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இந்தியாவின் நிலை ஏனைய இரு நாடுகளையும் விட மோசமானதாகும். இப்பொழுது நடைபெற்ற சந்திப்பில் இப் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

கடந்த பத்து ஆண்டுகளுக்கிடையில் இம் மூன்று நாடுகளும் மூன்றுமுறை சந்தித்துள்ளன. அச் சந்திப்

### உலகவலம்

பின் பேர்து எல்லாம் அவ்வவ் நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டது கிடையாது.

இம் மூன்று நாடுகளின் முதல்வர்களும் முதலில் 1956 ம் ஆண்டு யூலை மாதம் யுகோஸ்லோவிலுள்ள விஹுனி என்னும் இடத்தில் சந்தித்து ஓர் உச்சி மாநாட்டை நடத்தினர்கள். அம் மாநாட்டில் ஜனதிபதி டிட்டோ, ஜனதிபதி நாசர், பிரதமர் நேரு ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இச் சந்திப்பின் முடிவில் அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் உலகப் பிரச்சினைகளே அடங்கியிருந்தன.

இச் சந்திப்பிற்கு ஓர் ஆண்டுக்கு முன்னர் இந்தோனேசியாவில் நடைபெற்ற பாண்டுங் மாநாடு பற்றியும், அம் மாநாட்டு முடிவுகள் பற்றியும், மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகள் பற்றியுமே அன்று வெளியாகிய கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

இம் மூன்று தலைவர்களினதும் இரண்டாவது சந்திப்பு 1961ம் ஆண்டு நவம்பர் 18, 19ம் திகதிகளில் எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் நடைபெற்றது.

சந்திப்பின் முடிவில் அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் ஆயுத ஒழிப்புப் பற்றியும், உலக சமாதானம் பற்றியும், கோஷ்டிசேரா நடுநிலைநாடுகளின் உறவு பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தது.

### இந்தியாவின் சக்தி

இப்பொழுது மூன்றாவது முறையாக இம் மூன்று நாடுகளினதும் தலைவர்கள் ஒரு பரபரப்பான சூழ் நிலையில் சந்தித்து உலகப் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். இம் மாநாடு தில்லியில் கூடிய காரணத்தினால் இந்தியாவின் சக்தி மீண்டும் உலக அரங்கில் உயர்ந்து நிற்கிறது. மேலும் இந்தியா தன்னுடன் பிரச்சினையில் ஈடுபட்டுள்ள அண்டை நாடுகளுக்கு தனது அரசியல் செல்வாக்கை காட்டிக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பமாகவும் அமைந்திருக்கிறது.

'இந்தியா, தாஷ்கண்ட் உடன்படிக்கையை இதயசுத்தியுடன் அமுல் நடாத்தி வருகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்படக் கூடிய எந்தப் பிரச்சினையையிட்டும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியா ஆயத்தமாக இருக்கிறது. அதோடு பாகிஸ்தானிடமிருந்து இவ்விடயமாக ஆக்கபூர்வமான ஆதரவு பெறுவதற்காக இந்தியா காத்திருக்கிறது.' என்று பிரதமர் இந்திரா கூறியிருப்பதும் ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.

## முஸ்லிம் கலாசார அபிவிருத்திக்குத் திட்டம்

—o—

## பெரியார்களிடமிருந்து ஆலோசனை கோரப்படுகிறது

இலங்கை கலா மண்டலத்தின் இஸ்லாமிய உபசபை இஸ்லாமிய நுண்கலை அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற் கொள்வது குறித்து மிகத்தீவிரமாகச் செயல்பட இருக்கின்றது. அண்மையில் சபைத் தலைவர் அல் ஹாஜ் எஸ். எம் ஏ. ரஷீது ஜே. பி தலைமையில் நடைபெற்ற இச் சபைக் கூட்டமொன்றில் இஸ்லாமிய நுண்கலை, கலாச்சாரம் அபிவிருத்திக்காக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி முஸ்லிம் அறிஞர்கள் ஸ்தாபனங்கள், பொதுமக்கள், ஆகியோரிடமிருந்து அபிப்பிராயங்களும், ஆலோசனைகளும் பெறப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி முடிவெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து சபை அதன் அங்கத்தினர்கள் ஒருவரான ஏம். ரீ எம். அனூஹார்தீன் அவர்களை அதற்குப் பொறுப்பாக நியமித்தது.

மறைந்து கிடக்கும் இஸ்லாமிய நுண்கலைகளையும், திறன்களையும் வெளிக்கொணர்தல் இஸ்லாமிய கலை, கலாசாரத்தின் அபிவிருத்திக்காக ஒவ்வொரு முஸ்லிமும் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்தல், முஸ்லிம் கலாசார ஸ்தாபனங்களும் மற்றும் தனி நபர்களும் இஸ்லாமிய நுண்கலை, கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தூண்டுதல், இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாமிய நுண்கலை, கலாச்சாரம் குறித்து எவ்வளவு தூரம் ஆர்வம்காட்டுகின்றனர் என்பதை மதிப்பிடல் போன்றவைகள் குறித்து இத்தனிநபர் கமிட்டி விசாரணை செய்யும்.

முஸ்லிம் ஸ்தாபனங்களினதும் அறிஞர்களினதும் கருத்துக்களைப் பெற்றும் இவ்வருட முடிவுக்குள் சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும். அவ்வறிக்கையில் கூறப்படும் ஆலோசனைகளை அமுல் நடத்துவது குறித்து சபை ஆராயும்.

இவ் விடயங்கள் குறித்து நடைபெறும் சகல விசாரணைகளும், கொழும்பு தர்மபால மாவத்தை 135ம் இலக்கக் கட்டிடத்திலுள்ள இலங்கை அரசாங்க கலாசார இலாகாக் காரியாலயத்திலேயே நடைபெறும்.

இது சம்பந்தமாக நேர்முகமாக ஆலோசனைகள் கூற விரும்புவோர் தங்களின் அவ்விருப்பத்தை நவம்பர் 30ம் திகதிக்கு முன்னராக எழுதித் மூலம் அறிவிக்கவேண்டும் என்றும் கடிதமூலம் ஆலோசனைகள் கூற விரும்புவோர்களும் தங்களது ஆலோசனைகளையும் மேற்குறித்த திகதிக்கு முன்னதாக அறிவிக்குமாறும் ஜனப் அனூஹார்தீன் ஒரு அறிக்கையில் கேட்டுள்ளார்.

## சங்கப் பலகை

## இலக்கிய உலகம்

ஆசிரியர்: வி. கந்தவனம், பி. ஏ.
விலை: 1/40.
வெளியீடு: அரசு வெளியீடு, 231, ஆதிருப் பள்ளித் தெரு, கொழும்பு 13.
விமர்சகர்: செம்பியன் செல்வன்.

'சிறந்த கவிதையில் என்னற்ற ஊட்டல்கள் எப்போதும் காணப்படும்.' என்கிறான் பிரபல மேனுட்டு விமர்சகனை ஏ. சி. பிராட்லி. ஆனல் கவிஞர் கந்தவனத்தின் 'இலக்கிய உலகம்' என்ற இக் கவிக்கோவையோ ஊட்டல்களின் தொகுப்பாக உள்ளது. இதனல் இந் நூல் ஏனைய கவிதை நூல்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது.

'இலக்கிய உலகம்' என்ற தொகுப்பிலே கவிதைகள் உணர்ச்சி அனுபவங்களுடன் கூடியவைகளாக விளங்காது, இலக்கிய போதங்களாகவே விளங்குகின்றன. இதன் காரணத்தால் கவிதானுபவம் பெற ஏற்றதல்லாதநாக மாறிவிடுகின்றது. சில இலக்கிய நோக்குகளை, திருட்டாந்தங்களை இரசிகர்களிடையே மட்டுமல்லாமல் எழுத்தாள நண்பர்களிடையேயும் அழுத்திச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தால் இந் நூல் எழுந்திருக்கிறது என்பதனை இதன ஒவ்வொரு பக்கமும் உணர்த்தி நிற்கிறது. சில இடங்களில் இலக்கிய இலக்கண நூலாகவும் மாறிவிடுகிறது.

ஆயினும், இதற்காக கவிஞன் மேல் பழி போட முடியாது. ஏனெனில் இந் நூல் காலத்தின் தேவையை அப்படியே பிரதிபலிக்கிறது.

சமூகத்திலிருந்தும், அதன் தேவைகளிலிருந்தும் கலைஞன் நிர்ப்பந்திக்கப்படுவதாலேயே அவன் ஆக்க இலக்கியங்களின் தன்மை, போக்கு, செறிவு என்பன அமைகின்றன என்பதற்கு கந்தவனத்தின் இந் நூல் சிறந்த எடுத்துக்காட்டு.

சிறந்த உணர்ச்சி அனுபவங்களை கருத்துச் செறிவுடன் அழகாக வெளியிடும் ஆற்றல் கொண்ட இக் கவிஞர் ஏன் இந் நூலை இயற்றினர் என்பதனை ஒரு கணம் சிந்திக்கும்போது-அச் சிந்தனை ஈழ இலக்கிய வரலாற்றின் சிந்தனையாகவே மாறிவிடுகின்றது. ஈழத்து இலக்கிய உலகு விட்ட ஆக்ஞையைத்தான் இக் கவிஞர் நிறைவேற்றியிருக்கிறார் என்று கூறல் வேண்டும். சங்கமருவியகால அற நூல்களுக்குப், விஜய நகர மன்னர்கால மத, தத்துவச் சார்பு நூல்களுக்கும் எங்ஙனம் காலத்தின் கட்டளை காரணமாகி இருந்ததோ அதே போன்ற ஒரு கட்டளையையே கவிஞர் இங்கும் நிறைவேற்றியிருக்கிறார்.

ஆசிரியர் இப்பணியின் மூலம் தனது நோக்கையும் மறைமுகமாக புலப்படுத்தி இருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இலங்கையெழுத்தாளர் அனைவரும் ஒன்றுபட்டுத் தமிழ் மரபு பிறழாதவாறு இலக்கியங்கள் பலவற்றை இயற்றித் தமிழையும் தமிழிலக்கியத்தையும் இலங்கையில் விளங்கச்செய்தல் வேண்டும் என்னும் நோக்கம் பெரிதுமுடையவர் ஆசிரியர் என்பது அவரியற்றிய செய்யுட்களால் தெரிகின்றது' என்ற திரு. வி. செ. வின் கூற்று முற்றிலும் பொருந்துகின்றது.

இன்று ஈழத்திலே இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதாகப் பேசப்படினும், இலக்கியத்தை பூரணமாக அறிந்துகொண்டவர் மிகச் சிலராகவே காணப்படுகின்றனர். இவர்களில் இக் கவிஞரும் ஒருவர் எனலாம். அவர் தாம் அறிந்துகொண்டதுடன் நில்லாது மற்றவர்களுக்கும் அதனைத் தெரிவிக்க முற்படுகின்றார்.

கவிஞரின் இந்நூலை கவிதை இலக்கணம்போன்ற நிலையிலமைத்துள்ளதலும், படிக்குந்தோறும் நயம் பயக்கும் வண்ணம் அமைத்துள்ளார். ஆகவே கவிஞரின் கருத்துடன் முரண்படுபவர்கள்கூட அவர் என்ன சொல்கிறார் என்பதனை அறிவதற்காகப் படிக்கலாம். மொத்தத்தில்—தற்காலத்திய இலக்கியப் போக்கிற்கு சிறிய ஒளியையாவது இந்நூல் தராமல் போகவில்லை என்ற மன நிறைவு எமக்குக் கிட்டவே செய்கிறது.


ஜீ. சீ. ஈ. (சா. த) 1966

மேற்படி பரீட்சைக்கான புதிய/பழைய பாடத்திட்டத்திற்கமைந்த

பயிற்சிக் கோவைகள்

| | |
|---|---|
| ★ எண் கணிதம் | ரூ. 5/- |
| ★ குடியியல் | ரூ. 5/- |
| ★ சரித்திரம் | ரூ. 5/- |
| ★ சுகாதாரவியல் | ரூ. 5/- |
| ★ இஸ்லாம் | ரூ. 5/- |
| ★ தமிழ்ப்பாஷை | ரூ. 5/- |
| ★ புவியியல் | ரூ. 5/- |
| ★ 101கட்டுரைகள் | ரூ. 7-50 |

தபாற் செலவு -/50

போஸ்டல் ஓடர் அனுப்பவும்

சர்வகலாசாலை போதனு கழகம் (UTI)
540, மருதானை வீதி,
த. பெ. இல. 1079
கொழும்பு

# "டாக்சி டிரைவர்" முடிவடைந்தது

## டிசம்பர் நடுப்பகுதியில் திரையிடப்படும்

இலங்கையில் தயாரிக்கப்பட்டு வந்த 'டாக்சிடிரைவர்'என்ற திரைப்படம் படம் முடிவடைந்துவிட்டதென்றும் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

கடந்த பல மாதங்களாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு வந்த திரைச் சித்திரமான 'டாக்சி டிரைவர்' படப்பிடிப்பு வேலைகள் முடிவடைந்து விட்டதென்றும், விரைவில் சிலோன் தியேட்டேஸ் திரைகளில் திரையிடப்படும் என்றும் அறியப்படுகிறது.

இதில் நடித்த நடிகர்களுக்கு கடந்த வாரம் இப்படம் போட்டுக்காட்டப்பட்டதென்றும் தெரிகிறது இப்படம் சுமார் 2 மணி 45 நிமிடத்துக்கு காட்டப்படக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தில் இலங்கை வானொலிக் கலைஞர்களான சானு, ரொசாரியோ பீரிஸ், இராசேஸ்வரன், தேவன் அழகக்கோன், திருமதி. யோகா தில்லைநாதன், ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படம் சென்ற மாதமே திரையிடப்படவிருந்ததென்றும், காலஞ்சென்ற பி.எம். வேதநாயகத்தின் 'கடமையின் எல்லை' திரையிடப்படவிருந்ததால், திரையிடுவது பிற்போடப்பட்டதென்றும், எப்படியும் டிசம்பர் மாத நடுப்பகுதியில் இப்படம் திரைக்கு வந்துவிடும் என்றும், படத்துடன் சம்பந்தப்பட்ட ஒருவர் நமது நிருபரிடம் கூறியிருக்கிறார். இலங்கையில் தயாரிக்கப்பட்ட 4வது படம் என்ற பெருமையை 'டாக்சி டிரைவர்' பெறுகிறது.

## பழனிக்குச் சென்றேன் காவடி தூக்கினேன்

### கே. ஆர். விஜயா சொல்கிறார்

நடிகை கே. ஆர். விஜயா பழனியிலிருக்கும் முருகன் மீது அளவிடமுடியாத பக்தி கொண்டவர். சமீபத்தில் பழனிக்குச் சென்று காவடி தூக்கி முருகனை வணங்கி விட்டு வந்தார். பழனி அனுபவங்களை அவர் இங்கே சொல்கிறார்.

"என்னால் முடிந்த பொழுதெல்லாம் பழனிக்குச்சென்று பழனி ஆண்டவனுக்கு காவடி தூக்கி வணங்கி வருகிறேன்.

"காவடி தூக்கி பழனியப்பனை வணங்குவதற்காக சமீபத்தில் பழனிக்குச் சென்றிருந்தேன். என்னைப்போன்ற சினிமா நடிகை ஒருத்தி தோள் மீது காவடி சுமந்து செல்வதைப் பொது மக்கள் பார்த்தால் சும்மாயிருப்பார்களா? எப்படியோ செய்தி எட்டி, பெருங் கூட்டம் கூடிவிட்டது.



"இதுவரைக்கும் நான் பழனிக்குப் புதியவள் அல்ல. சிறு வயதில் சில ஆண்டுகள் அங்கு தங்கியிருந்திருக்கிறேன் என்னுடைய சொந்த நாடகக் கம்பெனி அங்குதான் இருந்து வந்தது. அப்படியிருந்தும் ஏதோ புதிய சினிமா நடிகையைப் பார்ப்பது போலப்பெருங் கூட்டத்தினர் சேர்ந்து விட்டனர்.

"கடந்த ஆண்டு நான் பழனிக்கு காவடி எடுப்பதற்காக சென்றிருந்த போது எனக்கு காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. அந்நோடு கஷ்டப்பட்டு மலை மீது ஏறிச் சந்நிதிக்கு நடந்தே சென்றேன். என் மாமா போன்றவர்கள் எவ்வளவோ தடுத்தும் நான் கேட்கவில்லை. பழனி ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு மலைக்கு நடந்தே சென்றேன். திரும்பி வர இயலாதபடிக்கு காய்ச்சல் இன்னும் அதிகமாகி விட்டது. என்னை மலை மீதிருந்து சிலர் தூக்கிவந்து கீழே விட்டதாக பிறகு கேள்விப்பட்டேன். அந்த அளவுக்கு நினைவு இழந்தவளாகி விட்டேன்.

"அப்படியெல்லாம் இந்த ஆண்டு ஆகாமல் நல்ல விதமாகப் பழனிக்குச் சென்று வந்தேன். காவடி சுமந்தேன். மனநிறைவு பெற்றேன். என்னைச் சுற்றிநின்ற பெருங்கூட்டத்தை விலக்க 'பொலிஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யட்டுமா' என்று ஆலய நிர்வாகிகள் கேட்டார்கள்.

'வேண்டாம், பழனி எனக்குப் பழக்கமான ஊர். மக்களில் பலர் அறிமுகமானவர்கள். அவர்களுடைய ஆர்வத்துக்கு தடை போட வேண்டாம் என்று சொல்லி விட்டேன்.

'சினிமா உலகில் பிரபலமான பிறகு காவடி தூக்குவது போன்ற செயல்களில் இன்னமும் உங்கள் மனம் ஈடுபடுவது ஆச்சரியந்தான்!" என்று சிலர் என்னிடம் தெரிவித்தார்கள். என்னைப் பொறுத்தவரையில், பழனி ஆண்டவருக்கு முன்னால் நான் ஒரு சினிமா நடிகை என்ற எண்ணமே எனக்கு ஏற்படுவதில்லை. இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன? பழனியை நான் மறப்பேனா?"

சௌகார் ஜானகிக்குப் பிடிக்காதவைகளில் ஆகஸ்ட் மாதமும் ஒன்று. இந்த மாதத்தில் அவர் பெரும்பாலும் புதிய படங்களுக்கு ஒப்பந்தம் செய்துகொள்வதில்லை. அவரைப் பொறுத்தவரை ராசி இல்லாத மாதம் இது.

நாடக விழா:

## கலைக் கழகத்தின் திருக் கூத்து

கலைக்கழகம் நடாத்திய பாடசாலைகளுக்கான 'நாடகப் போட்டி' அமர்க்களமாக நடந்தேறிவிட்டது.

நாடகங்கள் மூன்று நாட்களாக பரமேஸ்வராக் கல்லூரியின் மேல் மாடியில் நடந்தன. மேல் மாடியிலேயே அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. பரமேஸ்வராக் கலூரியின் மேல் மாடித்தளம் முற்றிலும் மரப்பலகையினால் ஆனது. ஆகவே, அங்கு இயல்பாகவே நடமாடும் சப்தம் பயங்கரமாக ஒலிக்கும். நாடகம் பார்க்க வந்தவர்களில் பெரும்பாலோர்—ஏன் 75 வீதத்தினர் பாடசாலைச் சிறுவர்களாகும். அவர்கள் தாறுமாறாக நடந்து அரங்க அமைதியை குலைத்து விட்டனர். இதனால் முதல் நாள் நிகழ்ச்சிகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. ஏனெனில் அரங்கில் ஒலிபெருக்கி தடைசெய்யப்பட்டிருந்தமையால், சிறுவர்களின் சலசலப்பையும், அவர்கள் நடப்பதால் எழும் தளத்து ஒலிகளும் மீறி முதல்நாள் நாடக நிகழ்ச்சிகளை மாணவர்கள் நடிக்கவேண்டி வந்தது. இதனால் முதல் நாள் நாடக நடிப்புகள் சோபிக்கமுடியாமல் போனதில் வியப்பில்லை.

ஒலிபெருக்கி அமைக்கக் கூடாது என்பது விதியானால்—அதற்கேற்ற மேடையை கலைக்கழகம் தயார் செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கான பார்வையாளர்களை (வயது வந்தவர்களை) மட்டும் அனுமதித்திருக்க வேண்டும். இவ்விரண்டினையும் செய்ய கலைக்கழகம் தவறிவிட்டது.

ஆகவே— கலைக்கழக நாடகப் போட்டியின் முதல் முயற்சியே 'முதல் கோணல் முற்றிலும் கோணல்'— என்றபடியாகி விட்டது.

அடுத்தது — நடுவர்களின் தெரிவு. இந்த நடுவர்களும் அக்கறை பூர்வமாக தெரிவு செய்யப்படவில்லை. ஒரு சில நடுவர்கள் நாடகம் நடக்க ஒரு சில விநாடிகள் முன்பாகவே தெரிவு செய்யப்பட்டனர். நடுவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் நாடகத்தைப் பற்றி எதுவும் தெரியாதவர்கள்.

நாடகப் போட்டிக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் ஒரு மணி நேரமே. அதற்கு மேல் நீளுகின்ற நாடகம் தோல்வி நாடகமாகவே கருதப்பட வேண்டும். ஆனால்— பலடத்தர்ப்பு பெண்கள் நடித்த நாடகமோ ஒன்றரை மணித்தியாலயத்திற்கும் அப்பாலும் நீண்டது. இதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும்.

அழகான கன்னிப் பெண்கள், எழிலான உடையில் தோன்றியதால் நேரத்தை மறந்த நடுவர்கள் இருந்தது தான்.

இந்த நாடகம் இரண்டு முக்கியமான குறைகளைக் கொண்டிருந்தது. ஒன்று கொடுக்கப்பட்ட நேர விதியை மீறியது. மற்றது கலைக் கழக விதியான ஒலிபெருக்கி வைக்கக் கூடாது என்ற விதியையும் மீறியது —இவ்வாறு கலைக் கழகத்தின் அடிப்படை விதிகள் இரண்டினையும் மீறிய ஒரு நாடகத்துக்கு இரண்டாம் பரிசை வழங்கினர். இது ஆச்சரியமானதல்லவா?

'இரத்தத் துளிகள்!" — என்ற நாடகத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள்—குறிப்பிட்ட நேரத்திற்குள்ளும், கலைக்கழக விதிகளுக்கு உட்படவும் நடித்துக் காட்டினர். அதில் விலலவன், மகாதேவி ஆகியோர் நடிப்பு அற்புதமாக இருந்ததுடன். இந்த நாடகம் செகப்பிரியாரின் 'மக்பெத்'தின் அழகிய தழுவலாகவும் விளங்கியது. ஆனால் இதற்கு மூன்றும் பரிசு வழங்கியுள்ளது கலைக்கழகம். ஏனெனில் இது ஒரு தழுவலாம் அப்படியானால் மகாபாரதத் தழுவலான 'ஜீவமணி', என்ற நாடகம் எப்படிப் பரிசு பெற்றது?

பொதுவாக இந் நாடக முடிவுகளை அவதானிக்கும் போது அவையாவும் கலைக் கழகத் தலைவரின் முன்னுரைப் பேச்சோடு நெருங்கிய தொடர்புள்ளதாகவே இருந்தன. நாடகப் பரிசில்களை பல துறைகளாக வரலாறு, தழுவல், கூத்து, சமயம், சமூகம் எனப் பிரித்து வழங்கியுள்ளனர்.

ஹாஸ்ய நாடகம் ஒன்றை அரங்கேற்றியிருந்தால் அதனையும் ஒரு துறையாகப் பிரித்து பரிசில் வழங்கியிருப்பார்களோ? நாடகம் என்பது ஒன்றுதான். அது எப்பொருளைக் கொண்டிருந்தாலும் அது நாடகம் என்ற பிரிவிலடங்க வேண்டியது என்பது நடுவர்களுக்கோ, கழகத் தலைவருக்கோ ஏன் புரியவில்லை.

—அருபன்.

திரை விமர்சனம்:

## வல்லவனுக்கு வல்லவன்



நல்லவனான ரமேஷ், விதி செய்த சதியால் கொள்ளைக்காரனாகக் கருதப்படுகிறான். அவன் உயிருடன் இருந்தால் தங்களுக்கு ஆபத்து என்றுணர்ந்த கொள்ளைக் கூட்டத்தினர், ரமேஷைத் தீர்த்துக்கட்ட, பிச்சுவாபக்கிரி என்ற ரௌடியை அனுப்புகிறார்கள். ஈவிரக்கமற்ற கொடியவனான பக்கிரி, ரமேஷின் காதலியான கீதாவின் சகோதரபாசத்துக்குக் கட்டுப்பட்டு மனம் மாறுகிறான். ரமேஷின் நண்பனாகி, கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடிக்க உதவுகிறான். ரமேஷ் பக்கிரி இருவரையும் பிரகாஷ் என்ற மூன்றாவது மனிதன் கண்காணிக்கிறான். நல்லவன் போலக் காணப்பட்ட அவன், பக்கிரி பற்றி ரமேஷிடம் விஷ விதைகளைத் தூவுகிறான். முடிவில் யார் நல்லவன், யார் கெட்டவன் என்பது வெளியாகிறது.

பிச்சுவாப்பக்கிரி என்ற வேடத்திலிருந்தவர் தான் உண்மையான பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்ற முடிவு நம்ப முடியாத முடிவாக உள்ளது.

ரமேஷாக அசோகன் வருகிறார். அவரது நடிப்பில் ஆகா என்று புகழக்கூடிய அம்சம் எதுவுமில்லை என்றாலும் சோடை போகவில்லை. அவரது காதலியாக வரும் மணிமாலா தன்னாலியன்றவரை நடிக்க முயற்சித்திருக்கிறார்.

பிச்சுவா பக்கிரியாக தோன்றும் மனோகர் அசல் ரௌடிதான். அவருக்குப் பழக்கப்பட்ட பாத்திரமல்லவா? ஜமாய்த்திருக்கிறார்.

பிரகாஷாக வரும் ஜெமினி கணேசன், படத்தில் மிகவும் குறைவாகவே வந்தாலும் அவரிடத்தில் இயற்கையான நடிப்பைக் காணுகிறோம். தனது முத்திரையைப் பொறித்து விடுகிறார்.

கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணாக வரும் மனோரமாவின் நடிப்பில் மெருகேறி உள்ளது. பாராட்டும்படி நடித்திருக்கிறார் நடிகையர் திலகமும் கௌரவ நடிகையாக வந்து போகிறார்.

கருத்துள்ள நகைச்சுவைகளை அள்ளித்தர இருக்கவே இருக்கிறார் தங்கவேலு. நீண்ட காலத்தின் பின் வாத்தியாரின் ஹாஸ்யவெடிகளை நிறையக்கேட்கிறோம்.

அடிபிடிக் காட்சிகளுக்கும் குறைவில்லை. மொத்தம் ஏழு பாட்டுக்கள் இருந்தும் 'மனம் என்னும் தோணி மேலே' என்ற பாட்டுத்தான் மனதில் நிற்கின்றது. சுந்தரம் டைரக்ஷனைக் கவனித்திருக்கிறார்.

விரைவில் சினிமாஸ் திரைகளில் திரையிடப்படவிருக்கும் மொடர்ன் தியேட்டர்சாரின் நூறாவது தயாரிப்பான இப்படத்தைப் பொழுது போக்குக்காக அனைவரும் பார்க்கலாம்.

— மகேஸ்.

# “புதுமுகங்கள் நட்சத்திரங்களாக வேண்டும்”

## அதுவே தனது ஆசை என்கிறார் டைரக்டர் ஸ்ரீதர்

‘நான் தயாரிக்கும் படங்களில் புதுமைகள் இருக்கவேண்டும். தவிர, திரையுலகில் புதுப்புது முகங்கள் தோன்ற வேண்டும் என்பதே எனது ஆசை. அதனால்தான் எனது படங்களில் புதுமுகங்களை அறிமுகப்படுத்துகிறேன். இன்றைய புதுமுகங்கள் நாளைய திரையுலகில் பிரகாசிக்கும் பெரிய நட்சத்திரங்களாக விளங்க வேண்டும் என்பதே எனது எண்ணம்’ இவ்வாறு தமிழகத்திரையுலகின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான டைரக்டர் ஸ்ரீதர் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

திரைப்படத் துறையில் புதியபுதிய அம்சங்களைபுகுத்த வேண்டும் என்ற ஆர்வமும் எண்ணத் துடிப்பும் மிக்க இளைஞரான டைரக்டர் ஸ்ரீதர் மேலும் அளித்த பதில்கள் கீழே கொடுக்கப்படுகிறது.

கே: திரையுலகில் உங்களது இலட்சியம் என்ன?

ப: திரைப்படம் என்பது ஒரு பொழுது போக்கு. மக்களுக்கும் புரியும் வகையில், உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு எளியமுறையில் படங்களை தயாரிக்க வேண்டும். அதை மக்கள் ரசிக்க வேண்டும். மக்களின் சிந்தனை சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களை அளிப்பது மிகத் தவறு. எனது சித்ராலயா கலைக் கடலில் சிறிய தோணி. ஆனால் அத்தோணி மூலம் என்னால் இயன்ற நல்ல பணியை செய்ய விரும்புகின்றேன்.



தனிக்கை செய்து நம்பாணிக்கு மாற்றிக் கொள்ள

புதுமையை விரும்புபவன் நான் புதுமைக்கருத்துக்களை வழங்கத் துடிப்பவன். துணிச்சலுடன் அதனைச் சாதிப்பதே எனது லட்சியம்.

கே: மிகக்குறுகிய காலத்தில் தயாரித்த ‘நெஞ்சில் ஓர் ஆலயம்’ போல வேறு படம் ஏதாவது தயாரிக்கிறீர்களா?

ப: நெஞ்சில் ஓர் ஆலயம், அதிக காட்சிகள் அல்லாமல் இரண்டு மூன்று ‘செட்டிங்கில்’ முக்கிய கதாபாத்திரங்களை வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்டது. கதையும், அதில் நடித்தவர்களும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அமைந்து விட்டது. ஆனால் அது போன்ற படம் எடுக்க இப்போது யோசனை இல்லை.

கே: புராணப் படங்கள் தயாரிக்கும் யோசனை இல்லையா?

ப: எனக்குக் கடவுள்மீது நம்பிக்கையுண்டு. ஆனால் இறைவன் பெயரை வைத்துக்கொண்டு நாம் காணாத சோடனையில் பாத்திரங்களைச் சிருஷ்டிக்க விரும்பவில்லை. புரிந்தும் புரியாத நிலையிலுள்ள இன்றைய நிலையில் புராணம், பக்திப் படங்களில் எனக்கு நாட்டமில்லை.

கே: தமிழக எழுத்தாளர்களின் கதைகளை திரைப்படமாக தயாரிக்காமல் தயாரிப்பாளர்கள் ஏன் பிறமொழிக் கதைகளை படமாக்குகிறார்கள்?

ப: தமிழகத்தில் நல்ல கதாசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களின் கதைகளை நான் பத்திரிகைகளில் அவ்வப்போது படித்தும் வருகிறேன். அவர்கள் சினிமா பாணிக்கு ஏற்ற விதமாக கதைகள் எழுதவில்லை. இந்தக் கதைகளை நாம் வேண்டும். ஆனால் எல்லாக் கதைகளையும் திரைப் படங்களுக்காக மாற்றி அமைத்து விட முடியாது. இதனால் அன்னிய மொழிகளில் வரும் நல்ல கதைகளைத் திரைப் படமாக்குவதில் தவறில்லை.

கே: குழந்தைகளுக்காக, ‘கார்ட்டூன்’ சித்திரங்களைத் தயாரிக்கும் நோக்கமுண்டா?

ப: சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு கார்ட்டூன் சித்திரம் உருவாக்கத் திட்டமிட்டேன். ஒரு ‘கார்ட்டூன்’ சித்திரம் எடுப்பதைவிட, நான்கு சலனப் படங்களைத் தயாரித்து விடலாம். கார்ட்டூன் சித்திரங்களை எடுக்க மிக்க பொறுமை வேண்டும். இன்றைய காலம் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கையில் பொறுமையுடன், நிதானத்துடன், கார்ட்டூன் சித்திரங்களை எப்படித்தயாரிக்க முடியும்? இருப்பினும் எண்ணத்தை இன்னும் கைவிடவில்லை. சந்தர்ப்பம் நேரும்போது தவறாமல் குழந்தைகளுக்கான படம் தயாரிப்பேன்.



விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் தேவர் பிலிம்ஸ் முகராசி படத்தில் ஜெயலலிதாவின் எழிலார்ந்த தோற்றம்



இது என்ன? வானத்து வெண்ணிலவு வையகத்துக்கு எப்படி வந்தது என்று ஜெயலலிதாவைப் பார்த்து அதிசயிக்கிறாரோ! எம். ஜி ஆர்.? படம்: சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் நவம்பர் 2 முதல் காட்சி தரவிருக்கும் ‘கன்னித்தாய்’

# ‘பரவாயில்லை, கிளிசரின் இருக்கிறது’

## அஞ்சலியின் நகைச்சுவை

வாஹினி ஸ்டுடியோவில் ‘ரங்கு ராட்டினம்’ என்ற படத்திற்கான காட்சிகள் படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. தலை நரைத்த அன்னையாக அஞ்சலிதேவி கண்ணீர் பெருக்கி நடிக்க வேண்டிய காட்சி அவற்றிலொன்று.



உணர்ச்சியும் உருக்கமும் நிறைந்த உரையாடல்களை அஞ்சலிதேவி ஒத்திகையின் போது பேசிவிட்டு ‘டேக்கிற்கு’ தயாராக இருந்தார். அப்பொழுது படத்தின் டைரக்டர் பி என். ரெட்டி ‘கண்களில் கிளிசெரின் தடவிக் கொள்ளுங்கள்’ என்றார்.

‘கிளி செரின்’ புட்டி வந்தது. அதில் ஒரு துளியை தன் கண்களில் தடவிக் கொண்டார் அஞ்சலிதேவி. அதன் உதவியினால் கண்களில் கண்ணீர் பெருக நடித்தார் அவர்.

திரும்பவும் அதே காட்சியைப் படமாக்க வேண்டி நேரிட்டது. மீண்டும் கிளிசரின் அஞ்சலிதேவியிடம் நீட்டப்பட்டது உடனே அவர், ‘கிளிசரின்’ வேண்டாம் என்றே எண்ணுகிறேன். நானே எப்படியாவது அழுதுவிடுகிறேன்.’ என்றார் டைரக்டரிடம்.

‘ஏன், ‘கிளிசரினை’ எடுத்து கண்களில் தடவிக் கொள்வது சிரமமாக இருக்கிறதா? சோகநடிகை என்று பெரும் புகழ் பெற்ற கண்ணாம்பாவுக்கு இப்படிப்பட்ட காட்சிகளுக்கு ஒரு புட்டி போதாது. பல புட்டிகள் தேவைப்படும்’ என்று சொல்லி விட்டு சிரித்தார் பி என். ரெட்டி. அழ வேண்டிய அஞ்சலி தவிக்கு சிரிப்பு வந்து விட்டது.

‘அடடே, சிரிப்புக் காட்டி, உங்கள் ‘மூடை’க் கெடுத்து விட்டேனே’ என்றார் டைரக்டர்.

‘பரவாயில்லை; கிளிசரின் இருக்கவே இருக்கிறது’ என்றார் அஞ்சலி.

# “மணி மகுடம்” படப்பிடிப்பில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள்

வரி கொடுக்காத சிலரின் வீட்டுக்குள் அரண்மனை வீரர்கள் புகுந்து மக்களை வதைக்கும் காட்சியொன்று எஸ். எஸ். ஆர். பிக்சர்சாரின் ‘மணிமகுடம்’ படத்துக்காக சமீபத்தில் சாரதா ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டு வந்தது. ஒரு குடிசைக்குள் அரண்மனை வீரன் புகுந்து அங்கு இருந்தவர்களைப் பிடித்து வெளியே தள்ளினான். இக்காட்சியில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவனும் நடித்தான்.

அந்தக்காட்சி திருப்தியாக அமையாததால் மீண்டும் மீண்டும் படமாக்கப்பட்டது. சிறுவனுக்கோ தரையில் விழுந்து விழுந்து, அடிபலமாகப்பட்டு விட்டது.

வலி தாங்கமுடியாத சிறுவன், இனி நடிக்க முடியாது என்று அடம்பிடித்து அழ ஆரம்பித்தான். அவனை தடவிக்கொடுத்த டைரக்டர் எஸ். எஸ். ஆர். தந்திரமாகப் பையனிடம் பேசி மீண்டும் அவனை நடிக்க வைத்தார்.

அருகில் இருந்த ஒருவர், ‘இந்தப் பையன்தான் நடிகர் கே. கே. பெருமாளின் தம்பியின் மகன்’ என்றதும் ‘ஓகோ’ நடிகர் பரம்பரையா?’ என்று சேட்ட எஸ். எஸ். ஆர். மீண்டும் மீண்டும் அவனுக்கு முத்தம் கொடுத்தார்.



அடுத்த காட்சி ஆரம்பமாயிற்று. குடிசையில் குடியிருக்கும் ஒருவனை வெளியே இழுத்து வந்து வீரர்கள் அறைந்தனர். அக்காட்சியை ஐந்தாறு முறை படமாக்கினார் எஸ். எஸ். ஆர். அப்படி அடிவாங்கிய துணை நடிகர் ஒருவர் கொஞ்ச நேரங் கழித்து வந்து ‘அண்ணே’ என்று சொல்லியபடியே தன் கன்னத்தைக் காட்டினார். அவருடைய இடது கன்னம் வீங்கிப் போயிருந்தது. அதைப்பார்த்துப் பதறிப் போன எஸ். எஸ். ஆர், உடனே அவரை டாக்டரிடம் அனுப்பிவைத்தார்.

இன்னொரு காட்சியில் வீரர்கள் வீட்டிற்குள் புகுந்து பொருட்களை எடுத்து வெளியே வீச, அந்த வீட்டிலிருந்த குழந்தை தன் பொம்மையைப் போய் எடுக்கிறது. அதைப் பார்த்த அந்த வீரன, அக் குழந்தையை எட்டி உதைக்கிறான். பெண் குழந்தையான அதைப் பலமுறை உதைத்ததும், அது மூர்ச்சித்து மயக்கம் போட்டு விழுந்து விட்டது. சிறிது நேரம் வரை எழுந்திருக்கவில்லை.

‘காட்சிகளை தத்ரூபமாக படம் பார்க்கும்போது இப்படியான பயங்கரங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று கூறிய எஸ். எஸ். ஆர், அந்தப்பெண் குழந்தைக்கு ஐஸ்கிரீமைக் கொடுத்து, அது சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்தார்.

# யாழ்ப்பாணத்தில் கண்டி அரசன்

கொழும்பு சிவசக்தி கலை அரங்கினரின் ‘ஸ்ரீ விக்ரமராஜசிங்கன்’ (கடைசிக் கண்டி அரசன்) நாடகம் 27ம் திகதியன்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபேசேகரா தலைமையில் நடைபெறும் இந் நாடகம் அதிக பொருட் செலவுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

தயாரிப்பாளர் திரு. ஆர். செகசோதி அவர்களே இந் நாடகத்தின் கதை, வசனம், பாடல்கள் அனைத்தையும் இயற்றியதுடன் நாடகத்தை நெறிப்படுத்தியுமுள்ளார். உண்மையான வரலாற்றைத் தழுவி நாடகக் கதை அமையவேண்டுமென்ற ஆவலின் காரணமாக அவர் பல ஆராய்ச்சிகளையும் மேற் கொண்டுள்ளார்.

இந் நாடகம் சிவசக்திக் கலை அரங்கினரின் ஐந்தாவது தயாரிப்பாகும்.

டாக்டர் என் கந்தையா

# காதுவியாதியும் பரிகார முறைகளும்

அடிக்கடி காதில் குச்சிகளை விட்டு குடைவது தவிர்க்கப்படல் வேண்டும். இதன் காரணமாக சிறு காயங்கள் ஏற்பட்டு அதனால் காதிலிருந்து இரத்தம், சீழ், வர ஏதுவாகும். பொடுகு காரணமாக தலையைச் சொறிவதனாலும் சொறிந்த விரலால் காதைக் குடைவதினாலும், அவை காதில் சென்று ஒட்டி

சாற்றில் சில துளிகள் விட்டு வரின் சுகம் கிடைக்கும்.

கவனக்குறைவினால் காதில் குச்சிகள் விட்டுத் தாபிதப் படுத்தி, சீழ் இரத்தம் வெளி வருமானால் பெருங்காயம், தம்பைப்பூ இவற்றை கடுகெண்ணெயில் காய்ச்சி பக்குவம் செய்து சில துளிகள் விட்டு வரச் சுகமுண்டாகும்.

## வியாதியின் தோற்றத்திற்கு கைகளே காரணம்

மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் பஞ்ச இந்திரியங்கள், காலத்துக்குப், நேரத்துக்கும் தக்கமாதிரி தோஷங்கள் அடைகின்றன. சிறுவர்முதல் பெரியோர் வரை யாவரும் ஆண் பெண் பாகுபாடின்றி காது வியாதியால் பிடிக்கப்பட்டு வருகின்றனர். சிறப்பாக இளஞ் சிறுர்களுக்கு காது வியாதியை சர்வசாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் காணலாம்.

### காதின் அமைப்பு

காது வெகு நுட்பமான உறுப்பு. இதற்கும் மூளைக்கும் நேரடித் தொடர்புண்டு. காதை உட்காது எனவும், வெளிக்காது எனவும் இரண்டாகப்பிரித்துள்ளனர் உடற்கூறு சாஸ்திர வல்லோர். உட் காதில்இருக்கும் செவிப்பறை (EAR DRUM) மிகமிக மெல்லிய சவ்வினால் ஆனது. கேட்கும் ஒலிகள் அதன் தன்மைக் கேற்ப இச் செவிப்பறையில் நரம்புகள் மூலமாக மூளையின் நேரடி மேற்பார்வையில்இயங்குகின்றன.

விலங்குகளுக்கும், மனிதர்களுக்குமுள்ள வித்தியாசம் வெளிக்காதில் மாத்திரமேயுண்டு. மனிதனின் வெளிக்காது ஒலியை கிரகிப்பதற்கு அசைக்க முடியாத நிலையில் பக்கவாட்டில் ஒரு பக்கம் சாய்வாக அமைந்திருப்பதை அறியலாம். விலங்குகளின் காதுகள் எப்பக்கத்துக்கும் அசைக்கக்கூடியதாக இருப்பதை நாம் அறிய முடிகின்றது இவை மிகமிக நுண்ணிய ஒலியையும் கிரகித்துத் தனக்கு பாதுகாப்புத்தேடிக் கொள்கின்றது.

### தாபிதமடைதல்

பலவித காரணங்களினால் காது தாபிதமடைகின்றது. உஷ்ணமான இடத்திலிருந்து குளிர்ந்த பிரதேசத்துக்கு புகைவண்டியில் அல்லது மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்வதனால் குளிர் காரணமாக அழற்சியுண்டாகின்றது. உட்காதில் இயற்கையாகவே ஒருவித கசிவு உண்டாகின்றது. இது ஒரு மாபெரும் தடைச்சக்தி. ஈ, எறும்புகள், சிறுவண்டுகள் வராமலும் உட்செல்ல முடியாமலும் தடுக்கும் தன்மை வாய்ந்தது. ஆனால் இது அதிகம் சுரந்து கட்டிபடுவதனாலும், குடைவதினாலும், காது வலி, இரைச்சல், தலைசுற்றல், சப்தம் கேளாமை என்பன ஏற்படும்.

சிறுபிள்ளைகள் விளையாடும் போது சிறுகடலை, புளியங் கொட்டை, கற்கள் முதலியவற்றை காதில் செலுத்துவதன் காரணமாக காது அடைபட்டு, கவனிக்கா விட்டால் சில நாட் செல்ல அழுக்கு முதலியவைசேர்ந்து சீழ், இரத்தம், துர் நீர் முதலியவை ஏற்பட ஏதுவாகும்.

மண்டையில் அடிபடுதல், கன்னத்தில் அடிபடுதல் காரணமாக செவிப்பறை உடைந்து காதுகேளாமை ஏற்படும்.

சிறுவர்களுக்கு பால் புகட்டும்போது கடவாய்மூலமாக பால் வழிந்து காதில்சேர்ந்து விடுவதாலும், காலப்போக்கில் தாபிதமடைந்து நீர் வடிந்து பின் சீழ் வடிய ஏதுவாகும். இத்துடன் வலியும், வேதனையும் ஏற்பட்டு குழந்தை அடிக்கடி காதைக் குடைந்து அழ ஆரம்பிக்கும்.

தொண்டை அழற்சி காரணமாக நடுச் செவிக்குழலில் அடைப்பு ஏற்படும். இதனால் காது கேட்பது மந்தமாக இருப்பதோடு தாபிதமேற்பட்டு சீழ்வடியத் தொடங்கும். இவ்விதமான சீழ்செவிப்பறையையும் பிரித்துக்கொண்டு வெளிக்காது மூலமாக வெளி வரலாம். இதனால் காதுகேட்காமல் செவிட்டுத் தன்மை ஏற்படும். செவிப்பறையில் துவாரம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதை அறிவதற்கு நோயாளியின் வாயையும், மூக்கையும் பொத்திக் கொண்டு மூச்சைவெளிவிடும்படி சொன்னால் இக்காற்று செவிப்பறை வழியாக வருவதை அறியலாம். இதை அறிய காதில் இறகு, பஞ்சு இவற்றை பிடித்து அறியலாம். அன்றியும் காதுக்கும் தொண்டைக்கும் சம்பந்தமுண்டு. இதை அறிவதற்கு சிறு குச்சியினால் காதைக் குடையும்போதுதொண்டையில் கரகரப்பேற்பட்டு செருமுவதை அறியலாம். அன்றேல் தும்மல் ஏற்படலாம். இதிலிருந்து செவிப்பறையின் உள்ளும் வெளியும் காற்றிருப்பதை அறியலாம்.

### காதைப் பாதுகாத்தல்

எங்களைப்பற்றியோ, அல்லது வேறு விஷயங்களைப் பற்றியோ, இன்னொருவர்பேசும் போது காது மிகவும் உன்னிப்பாக கேட்டு அறிகின்றது. அறிஞர்களின் விரிவுரைகளையும், வீட்டில் உற்றார், பெற்றார், பிள்ளைகளின் பேச்சுக்களையும் கேட்டு அறிவதற்கு காது மிகவும் இன்றியமையாத கருவியாகும். இப்பேரன்ன உறுப்பாகிய காதைப் பாதுகாப்பது அறிவுடைமாந்தர் யாவரின் கடமையாகும்.

குழந்தைகளைக் குளிப்பாட்டியதும் சிறுபஞ்சினால் காதைத் துடைத்து சுத்தம் செய்தல் அவசியம். பெரியவர்களும் குளித்து முடிந்து உடம்பைத் துவட்டும்போது காதுகளையும் துடைத்தல் அவசியம் ஏனெனில் காதில் நீர் சென்றால் ஒருவித 'டும்-டும்' என்ற சப்தம் கேட்பதை அறியலாம். இதை நாம் நடக்கும்போது மிக இலகுவாக அறியலாம். நீர் செவிப்பறையில் பட்ட அதிர்ச்சியால் இச் சப்தம் ஏற்படுகின்றது.

பனிக்காலங்களிலும், அதிக குளிருள்ள இடங்களில் வசிப்போரும் காது இரண்டையும் மறைத்துக்கட்டிக் கொள்ளுதல் அல்லது பஞ்சினால் அடைத்தல் சிறந்தது.

'குத்திக்கெடுத்த காது' என்ற பழமொழிக் கொப்ப

ஒருவித அழற்சியை ஏற்படுத்தி வியாதியை உண்டாக்கும். சிலருக்கு சிரங்கு, தோல் வியாதிகள் காரணமாகவும் வியாதி ஏற்படும்.

### பரிகார முறைகள்

பிரதானமாக காதுகளைச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். கிழமைக்கொரு தரம் எண்ணெ ஸ்நானம் மிகவும் வேண்டற்பாலது. அன்றியும் மலச் சிக்கல் ஏற்படாது பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.

காதுக் குத்தையும்வலியையும் தடுப்பதற்கு இஞ்சிச் சாற்றுடன் சிறிது தூள் செய்த இந்துப்பை கலந்து வடிகட்டி காதில் விட்டு பஞ்சினால் அடைத்து விடுதல வேண்டும்.

தடிமனைத் தொடர்ந்தேற்படும் நமைச்சல், காதுக்குத்துக்கு முருங்கைத் துளிர், உள்ளி, இஞ்சி, இவற்றின்

காதில் புண் முதலியன இருப்பதாகக் கண்டால் நத்தையின் தசையை கடுகெண்ணெயில் இட்டுக் காய்ச்சி வடிகட்டி காதில் சில சொட்டுகள் இட்டுவந்தால் 2; 3 நாட்களில் மாறிவிடும்.

அன்றியும் காதுவலி, உளைச்சல், சீழ் வருதல், முதலியவற்றுக்கு மாந் துளிர், நாவல்துளிர், இலுப்பை துளிர், ஆலந்துளிர், இவற்றை சம எடை எடுத்து இடித்து நல்லெண்ணெ அளவுடன் விட்டு காய்ச்சி இறக்கி வடித்து, துளிப்பிரமாணம் காலை மாலை இட்டுவரத் தீரும்.

பனங்கற்றாளை சாற்றில் சிறிது உப்பிட்டு சூடாக்கி காதுவலிக்கு இட்டுவரலாம். முருங்கைப் பிசினை நல்லெண்ணெயில் விட்டுக் காய்ச்சி பாவித்து வர காதுவலி, காதிரைச்சல் தீர இடமுண்டு.

காதில் ஏற்படும் சகல வலிகளையும் நீக்குவதற்கு மகா பஞ்சமூலம் (பில்வம் குமிழ், பெருவாகை, பாதிரி, சிறுவழுதுணை) வேர்களை பட்டுத்துணியில் சுற்றி நல்லெண்ணெயில் நனைத்து எரிக்கும்போது அதிலிருந்து தைலம் சிந்தும். இவற்றை சேகரித்து இளஞ் சூடாக இட்டுவரலாம்.

சில சமயம் உட்காதில் கட்டிகள் ஏற்பட்டு உடைந்து இரத்தம், சீழ் வர ஏதுவாகும். இதனால் காது கேட்பது குறையும், பேசவும் முடியாது. இப்படியானவர்கள் காதுநோய் நிபுணரை நாடுவது சிறந்தது.

"குத்திக்கெடுத்த காது" என்ற பழமொழிக் கொப்ப அடிக்கடி காதில் குச்சிகளைவிட்டு குடைவது தவிர்க்கப்படல் வேண்டும். இதன் காரணமாக சிறு காயங்கள் ஏற்பட்டு அதனால் காதிலிருந்து இரத்தம் சீழ் வர ஏதுவாகும். பொடுகு காரணமாக தலையைச் சொறிவதனாலும், சொறிந்த விரலால் காதைக் குடைவதினாலும், அவை காதில் சென்று ஒட்டி ஒருவித அழற்சியை ஏற்படுத்தி வியாதியை உண்டாக்கும்.

காதுக் குத்தையும் வலியையும் தடுப்பதற்கு இஞ்சிச் சாற்றுடன் சிறிது தூள் செய்த இந்துப்பைக் கலந்து வடிகட்டி காதில் விட்டு பஞ்சினால் அடைத்துவிடுதல்வேண்டும்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய லேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


## மக்கள் குரல்

### கவனிப்பார் இல்லையா?

சுன்னாகம் ஓர் பட்டின சபையாக, இருந்தும் சுன்னாகத்திலிருந்தே மின்சாரம், வேறு பல இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டும், பட்டினசபை எல்லைக்குள், மிக முக்கியமான இடங்களில், திருப்திகரமாக மின்சார வசதியில்லாதது வருந்தக் கூடிய விஷயமாகும். இதைப் பற்றி கவனிப்பார் இல்லையா?

முக்கியமாக, சுன்னாகம் பட்டினசபையின் 4-ம் வட்டாரத்தை நோக்கின், சந்தையின் தெற்குப்புற எல்லையிலுள்ள 'இலகந்தோட்டம்' என்ற பாதைக்கு இதுவரை மின்சார வசதியில்லாதது, பார்ப்பதற்கே அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது.

பொலிஸ் ஸ்தாபனத்துக்கு சற்று வடக்கே, முன்புறமாக, காங்கேசன்துறை வீதியிலிருந்து, மேற்கூறிய இலகந்தோட்டம் என்ற பாதை பிரிந்து, சுன்னாகம் சந்தையின் தெற்குப்புற எல்லையாக பகிரங்க மலசலகட்டடங்களுக்கருகாமையில் செல்லுகின்ற பாதை, ஒரே இருட்டாக காட்சியளிக்கின்றது. மலசல கூடங்கள் இருந்தும், அநேகர் இந்தப் பாதையைத்தான், மலசல கூடங்களாகப் பாவிக்கிறார்கள், என்று சொன்னால் மிகையாகாது.

இதைவிட, மேற்கூறிய பாதையின் ஓரங்களில் குடியிருப்போர், எத்தனையோ பேர், தங்கள் வீடுகளுக்கும் மின்சாரவசதி ஏற்படுத்துவதற்கு, பட்டினசபை மின்சாரக்கம்பங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

பட்டினசபைத் தலைவரோ உள்ளூராட்சி அமைச்சரோ இந்தக் குறையை நிவர்த்திக்க, கூடிய விரைவில் ஆவன செய்வார்களென நம்புகிறேன்.

ஒரு வரியிறுப்பாளன்
சுன்னாகம்.

### செங்குத்தாகக் கிளம்பும் விமானம்

செங்குத்தாகக் கிளம்பும் விமானம் ஒன்றிற்கு பெர்லின் தொழில் நுட்பப் பல்கலைக்கழக விமான நிர்மாண கழக டைரக்டர் டாக்டர் ஹர்டல் வடிவமைத்துள்ளார். இப்புதுமையானவிமானம், செங்குத்தாகக் கிளம்பக்கூடியது. விமானத்தின் இரு புறங்களில் மும்மூன்று காற்றாடிகள் இருக்கின்றன.

# ஓடிப்போனவன்

…நவசோதி…

## (14)
## முரட்டுப் பிடியில்

வீட்டிலே ஆருயிர் தங்கை கண்ணீர் சிந்திக் கொண்டிருக்க, விரைந்து செல்லும்புகையிரதத்தினுள் உலகத்தையே உணராது மயங்கிக் கிடந்தான் வசந்தன்.

தண்ணீர் கொண்டு வருவதற்காக டிக்கட் பரிசோதகர் அவ்விடத்தை விட்டகன்ருர். புகையிரதம் அடுத்த நிலையத்தில் நின்றது. மூன்ரும் வகுப்புப் பெட்டியினுள் ஏறியவருள் ஒரு கைமுடமான இரத்தினமும் ஒருவன். பரபரப்புடன் தண்ணீருடன் டிக்கட் பரிசோதகர் வருவதைக் கண்ட இரத்தினம் அவரைப் பின்தொடர்ந்தான். வசந்தன் இருந்த நிலை அவனைத் திடுக்கிட வைத்தது.

மூர்ச்சை தெளிந்துஎழுந்த வசந்தன் டிக்கட் பரிசோதகருக்குத் தன் நன்றியைத் தெரிவித்தான். எதிர்பாராத வகையில் அங்கு இரத்தினத்தைக் கண்ட வசந்தனும் நடந்தவைகளை அப்படியே கூறினன்.

இள வயதில் இவ்வாறு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வீட்டை விட்டுக்கிளம்பியிருக்கக் கூடாதென்று அறிவுரை கூறினன் இரத்தினம். எங்கேயாவது பிச்சையெடுத்துப் பிழைத்தாலும் வீட்டைத் திரும்பிப் பார்க்க முடியாதென்ற வைராக்கியத்தை உமிழ்ந்தான் வசந்தன்.

பைத்தியம் பிடித்தவனைப் போல் காட்சியளித்த வசந்தனைத் தன்னுடன் தங்குமாறு வேண்டினன் இரத்தினம். இரத்தினத்தின் பிடிவாதத்தினலும் வற்புறுத்தலினலும் நீண்ட சர்ச்சைக்குப் பின் அதற்குச் சம்மதித்தான் வசந்தன்.

இரத்தினத்தின் முயற்சியால் கண்டியில் 'செல்வன் கபே'யில் வேலையும் கிடைத்தது. அத்துடன் வசந்தனைப் பார்த்ததும் பெரிய இடத்துப் பிள்ளைபோல இருந்ததை முதலாளி உணரத் தவறவில்லை. மேலும், கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பத்திரிகைக்காரர்கள் வசந்தனைப் பிடித்த படம் அடுத்தநாள் பத்திரிகைகளில் வெளிவந்ததை ஏற்கனவே தனது முதலாளியிடம் காட்டிய இரத்தினம் தனது நண்பன்தான் வசந்தன் என்பதைக் கூறி பெருமைப்பட்டுக்கொண்டான். வசந்தனை நேரே அழைத்துச் சென்றபோது இதனை மீண்டும் முதலாளிக்கு நினைவுபடுத்திக் கொண்டான். இதனல் எவ்வித மறுப்புமின்றி தனது ஹோட்டலில் சேர்த்துக் கொண்டார்.

புத்தகங்களும், நாளாந்த வாரப் பத்திரிகைகளும் விற்கும் பகுதிக்குரிய விற்பனைப் பொறுப்பு வசந்தனிடம் விடப்பட்டது. தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் இலக்கிய, அறிவியல் பற்றிய நூல்களைக் கற்று வந்தான் வசந்தன்.

தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு வீட்டை விட்டு ஓடிவந்திருந்தாலும், வசந்தன் அடிக்கடி வீட்டு நினைவில் கண்கலங்க ஆரம்பித்தான். யாருக்கும் கூருவிட்டாலும் மாலதிக்குக்கூட கூருது வந்துவிட்டேனே யென்று எண்ணிக் கலங்கினன்.

எவ்விதமான குற்றத்தையும், தான் செய்யாதிருக்கையில் சிற்றன்னை தன் மீது ஏனிவ்வளவு வெறுப்பை உமிழவேண்டுமென நினைத்துப் பார்த்தான். எதுவுமே விளங்கவில்லை.

ஆனல், இரத்தினமும் அவனின் தங்கைவிமலாவுமகாட்டிய அன்பில் வீட்டு நினைவைப் படிப்படியாக மறந்து வரலானன்.

நாட்களும் நகர்ந்தன—

ஒருவாறு ஒரு மாதத்தை ஓட்டிக் கலைத்துவிட்டான் வசந்தன். அன்று அவனுடைய முதல் சம்பள தினம்.

இரவு எட்டுமணி இருக்கும். 'கும்' மென்று இருள் எங்கும் சூழ்ந்திருந்தது.

அன்று காலையில் விமலா தன் அண்ணனிடம் ஒரு புத்தகம் வாங்கித் தரும்படி கேட்டபோது இரண்டு நாட்களின் பின்னர் வாங்கித் தருவதாக இரத்தினம் கூறியதை வசந்தனும் நினைவில் வைத்திருந்தான். அவர்களுக்குத் தெரிவிக்காமலே அப்புத்தகத்தையும், விமலாவுக்கு சட்டைக்கும் பாவாடைக்குமாகத் துணிகளையும் சம்பளத்தில் வாங்கிக் கொண்டு மிகுதிப் பணத்துடன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான் வசந்தன்.

எதிர்பாராத வகையில் அவற்றை வாங்கிக்கொடுத்தால் மாலதி எவ்வளவு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைவாள் என்பதை எண்ணி கற்பனை செய்துகொண்டேநடந்தான் வசந்தன்.

வழக்கத்தில் ஏழுமணிக்கெல்லாம அவன்வீடுதிரும்பி விடுவான். பஸ் ஸ்டான்ட் அருகிலிருந்த கோபுர மணிக் கூட்டைப் பார்த்தபொழுது அவனுக்கே நெஞ்சில் பயம் பிடித்துக்கொண்டது-எட்டு அடித்து பதினைந்து நிமிடங்களாகிவிட்டது. அவன் இருக்கும் 'மாத்தளை வீதி'யில் ஏழு மணிக்குப் பின் மக்கள் நடமாட்டத்தைக் காண்பதே அபூர்வம்.

வழக்கத்திலும் பார்க்க நேரம் தாழ்த்திச் செல்லும் தன்னை எதிர்பார்த்து இரத்தினமும் தங்கை விமலாவும் காத்திருப்பார்களே யென்று விரைந்து நடந்தான் வசந்தன். 'கொழும்பு வீதி'யைக் கடந்து மாத்தளை வீதியில் காலடியெடுத்துவைத்தான். தனக்குப் பின்னல் யாரோ வருகின்ற காலடிச் சத்தத்தைக் கேட்டபோது முன்னர் ஏற்பட்ட பயம் மேலும் அதிகரித்துக்கொண்டது. மக்கள் நடமாட்டமே இல்லை. அத்துடன் இருட்டியுமிருந்தது. திரும்பிப்பார்க்க வேண்டும்போலிருந்தது அவனுக்கு. ஆனல் அதற்குத் துணிவு பிறக்கவில்லை.

தனது நடையைச் சிறிது விரைவாக்கினன்.

திடீரென்று பின்னல் வந்த காலடிச்சத்தமும் விரைவாக வருகின்ற தன்மையை அறிந்தான். கையிலே பார்சலும் சம்பளப் பணமும் இருப்பதை எண்ணும்போது படக் படக் என்று நெஞ்சு அடித்துக் கொண்டது.

எனினும் மனதிலே ஓரளவு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு தன் தலையைத் திருப்பினன் வசந்தன்.

அடுத்த கணம்—

'ஐயோ! அம்மா!' கத்திக் கொண்டே கீழேசாய்ந்தான் வசந்தன். இரு முரடர்கள் அங்கு நின்றனர். அவர்களில் ஒருவனின் இரும்புக் கரங்களே வசந்தனின் கன்னத்தைப் பதம்பார்த்தது. வசந்தனின் புத்தகமும் துணிப் பார்சலும்தூரத்தேசிதறின. இரண்டாம் முரடன் வசந்தனின் வாயுக்குள் பெரிய சீலைத் துண்டொன்றைத் திணித்தான். வசந்தனின் காற்சட்டைக்குள் இருந்ததை எடுத்தனர்.

அப்பொழுது—மின்னல் வெட்டுப்போல ஒரு ஒளி தோன்றியது. அதைத் தொடர்ந்து ஒரு கார் வரும் ஒலி எழுந்தது.

விழுந்து கிடந்த பார்சலை எடுக்கப் போனவர்கள். அவ்வொலியைக் கேட்டதும் ஒரே ஓட்டம் பிடித்தனர். 'கார்' விரைவாக வந்தது. நடுத்தெருவில் பிணம்போல விழுந்து கிடந்தான் வசந்தன்—

## (15)
## திருந்தி விட்டேன்

வசந்தனின் நினைவால் ஏங்கி வாடி வதங்கினள் மாலதி. அவளின் உடல் வாட்டத்தைக்கண்டு அன்னை துயரப்பட்டாள். கனவிலும் வசந்தனைக் கண்டு அடிக்கடி வாய் பிதற்றினள் மாலதி.

ஆரம்பத்தில் வசந்தனுக்காக மாலதி இரங்குவதை வெறுத்த அன்னையின் மனம் படிப்படியாக இளகியது. மகளின் வாட்டத்தைக் கண்டு கலங்காத அன்னையர் யார் இருக்கின்றார்கள்.

"சற்றுன்
முகஞ்சிவந்தால்-மனது
சஞ்சல மாகுதடீ!
நெற்றி சுருங்கக் கண்டால்
எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ!
உன்கண்ணில் நீர்வழிந்தால்-
என்னெஞ்சில்
உதிரங் கொட்டு தடீ!

என்று கண்ணம்மா என்ற குழந்தையின் துன்பத்தைத் தாங்காத தாயின் நெஞ்சத்தைப் பாரதி பாடவில்லையா!

மாலதியின் நிலை ஒருபுறமிருக்க விமலநாதனின் நிலையும் அன்னைக்கு மனவேதனையை அளித்தது. மேய்ப்பாரற்ற மாடுபோல ஊர்சுற்றித் திரிந்தான் அவன். இருட்டிய பின்பே வீடு திரும்பினன். படிப்பிலே கவனம் செலுத்தாமல் உண்பதும் உறங்குவதும் ஊர் சுற்றுவதுமாகக் காலம் கடத்தி வந்தான். அன்னையின் அறிவுரைகள் அனைத்தும் செவிடன் காதில்ஊதிய சங்குபோலப் போனது.

களனி கங்கையின் முகத்துவாரப் பகுதியில் நண்பர்களுடன் நீந்தப்போய் வந்தான் விமலநாதன். சிறுவயதிலேயே செல்லம்கொடுத்து கட்டுப்பாடின்றி வளர்த்து வந்ததன் விபரீத விளைவை இப்பொழுதுதான் அன்னை உணர்ந்தாள்.

மாலதிக்கு காய்ச்சல்வரும்போதெல்லாம் அவளுக்கு என்ன நேர்ந்து விடுமோ என்று அவள் பயந்தாள். வசந்தனைப்பற்றிக் கனவிலும் எண்ணமாட்டேன் என்று வைராக்கியம் கொண்ட அவள், இப்பொழுதுஅவனைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தாள்.

ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை—

காலையில் ஒன்பது மணிக்கு வீட்டை விட்டு வெளியே சென்ற விமலநாதன் நண்பகல் பன்னிரண்டு மணியாகியும் வீடு திரும்பவில்லை. அவனை எதிர்நோக்கி வீட்டு வாசலிலேயே காத்து நின்ருள் அன்னை. விமலநாதன் நண்பர்களுடன் களனி கங்கைக்குக் குளிக்கப்போயிருந்தால் என்று எண்ணியபோது வயிறுபற்றி எரிந்தது.

இரு நாட்களுக்கு முன் பத்திரிகையில் வெளியான 'இரு சகோதரர் களனிகங்கையில் மூழ்கி உயிர் நீத்த' செய்தியை அவளின் மனம் நினைத்துப் பார்த்தபோது வேர்த்துக் கொட்டியது.

மகனைக் காணது 'அன்னை' ஏங்கிநிற்கும் நேரத்தில் ஆனந்தமாகக் களனி கங்கையில் நண்பர்களுடன் கும்மாளமடித்துக் குளித்துக் கொண்டிருந்தான் விமலநாதன். அவனுடன் கந்தசாமியும் சண்முகமும் இருந்தனர். வழக்கத்திலும்பார்க்க அன்று, கங்கையின் வெள்ள ஓட்டம் வேகமாகவேகாணப்பட்டது.

'நேரமாச்சுடா! மணி பன்னிரண்டு பாகாகியிருக்கும். வாங்க போவோம்' என்று சண்முகம் கூறினன். 'என்னடா அவ்வளவு அவசரம். ஞாயிற்றுக்கிழமை தானே. இன்னும் கொஞ்ச நேரம் இருப்பம்டா...' என்றுவிமலநாதன் தடைபோட அதற்கு 'ஆமாண்டா' போட்டுத்தன் சமமதத்தைத் தெரிவித்தான் கந்தசாமி.

மீண்டும் கும்மாளம் ஆரம்பித்தது. இவர்களுக்கு அருகில் ஒரு பெரியவரும் குளித்துக் கொண்டிருந்தார். நீரோட்டத்தின் வேகத்தையும் நீரின் ஆழத்தையும், இவர்கள் போடும் கும்மாளத்தையும் கண்ட அவர், 'தம்பிமாரே, இன்றுநீரோட்டம் வேகமாய் இருக்குது: நடுவுக்குப் போகாதீங்க ஆழமாயிருக்கும். வழுக்கமும் அங்கு அதிகம்-' என்று அறிவுரை கூறினர்.

இதைக் கேட்ட மூவரும் 'ஏனய்யா, எங்களுக்கு நீந்தத்தெரியாதென்டா நினைச்சீங்க' என்று கூறி அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தனர். அப்பெரியவரும் அதன்பின் அமைதியாக இருந்துவிட்டார்.

திடீரென்று, 'என்னைப்பிடி சண்முகம்...ஐயோ என்னைப் பிடிங்க' என்று கைகளை உயர்த்திக்கொண்டே கூக்குரலிட்டான் விமலநான். பிரமித்துநின்ருன் சண்முகம். அதற்குள் நீரோட்டம் விமலநாதனை வேகமாக இழுத்துச் சென்றது. கந்தசாமி கரையை நோக்கி விரைந்தான். அவனைப் பின்தொடர்ந்தான் சண்முகம். விமலநாதனின் குரல்இப்பொழுது செத்து மடிந்துவிட்டது. ஒரு மணி அடித்து ஓய்ந்தது. மகனின் வரவை எதிர்நோக்கி கால்கடுப்பதையும் மறந்து வாசலிலேயே காத்து நின்ருள் அன்னை.

அவனைத் தேடி களனி கங்கைக்கு ஆளனுப்பியும்பார்த்தாகிவிட்டது. அவனின் நண்பர்கள் கந்தசாமி, சண்முகம் வீட்டிலும் தேடியாகிவிட்டது. தாங்கள் விமலநாதனைக் காணவேயில்லையென்று அவர்கள் ஒரு பொய்யைப் பதிலாகக் கூறினர்.

நண்பர்களின் வீட்டிலும் தன் மகனைக் காணதோல் அன்னையின்நெஞ்சம் டக்கு... ...டக்கு...என்று ஏக்கத்தாலும் பயத்தாலும் அடித்துக்கொண்டது. அப்பொழுது தூரத்திலே ஒரு பெரியவருடன் விமலநாதன் வருவது தெரிந்தது.

அன்னையின் நெஞ்சிலே பாலை வார்த்தாற்போல் இருந்தது. உள்ளம் குளிர்ந்தது. மறுகணம் அவள் நெஞ்சம் கொதித்தது. விமலநாதன்மீது அவளுக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது.

வாசற்படியில் அவன் காலெடுத்து வைத்ததும் அவனை அடிப்பதற்காக கையையோங்கினள். அடிஅவன் மேல் விழுமுன்பே அவனுடன் வந்த பெரியவர் தடுத்துவிட்டார். விமலநாதன் வெள்ளத்தில் அடிபட்டுச் சென்றபோது தன்னல் அவன் காப்பாற்றப்பட்டதையெல்லாம் கூறிமுடித்தார் பெரியவர். இதைக் கேட்டதும் அன்னைக்கு இதயம் வெடித்துவிடும்போலிருந்தது.

'விமலநாதன் இன்றுமுதல் திருந்திவிட்ட அதிசயமனிதனுகிவிட்டான்' என்றுபெரியவர் கூறியதும் அவளின் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன. அப்பெரியவருக்குத் தன் நன்றியைத்தெரிவித்தாள் அன்னை.

விமலநாதன் அன்னையைப் பார்த்தான். நான் திருந்திவிட்டேனம்மா. செய்ததவறுகளையெல்லாம் மன்னித்துவிடு...' என்று கூறுவதைப் போலிருந்தது அந்தப் பார்வை.

இருவரிடமிருந்தும் விடைபெற்றுக்கொண்டார் பெரியவர்.

ஒன்ருகக் கங்கையிலே நீராடிவிட்டு, காணவில்லை என்று ஒரு பொய்யையும் சொன்ன தீய நண்பர்களை இனிமேல் கண்ணுல்கூட பார்க்கக்கூடாது என்ற கட்டளை அன்னையால் விமலநாதனுக்கு விதிக்கப்பட்டது.

அதைக்கேட்க அங்கு விமலநாதன் நிற்கவில்லை. தான் செய்ததவறுகளுக்கெல்லாம் தங்கையிடம் அவளின் கரங்களைப் பிடித்துக் கண்ணீர் வடித்துக்கொண்டேமன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்தான் அவன்—



வளரும்

## திருகோணமலையும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை மாணவர்களும் ஆசிரியர்களும் விடுகலை நாளில் மாலை நேரங்களிலும் உலாவி விளையாடிக் களித்தின்புறுதற்குரியவை. இங்கிருந்து இலங்கையின் நாற்புறமும் அடிக்கடி மாணவர் சுற்றுலாச் செய்து மீளுதற்கும் வாய்ப்பிருக்கின்றது. இங்ஙனம் பலவகையாலு மாணவர்கட்குக் கல்வியில் ஆர்வமும் ஊக்கமு முயற்சியும் பெருக்கமடையலாம்.

திருக்குணமலையிலே பல நாட்டு மக்களையும் பல்கலைக்கழக மாணவர் அடிக்கடி பார்க்க நேர்வதனுலே அவர்களதுஉலகியலறிவுவிரிவடையும்.

### தமிழர் கடன்

எவ்வகையிற் பார்த்தாலும் இலங்கையிற் கொழும்புப் பல்கலைக்கழகத்தைக் காட்டிலுந் திருக்குணமலைப் பல்கலைக் கழகம் உலகத்தின் எண்ணத்தைக் கவர்வதாயிருக்கும்.

இனவேற்றுமை மதவேற்றுமையின்றித் தம் வழித்தோன்றல்களின் வாழ்வையுட்கொண்டு தமிழரெல்லாரும் ஒற்றுமைக்குரல் எழுப்பி உறுதியொடு நின்ருல் அரசு திருக்குணமலைப் பல்கலைக் கழகத்துக்கு எதிர்ப்புஞ் சாட்டும் இயம்ப முடியாத நிலை உண்டாய்விடும்.

## வெகு விரைவில்

கெப்பிட்டல் பிளாசா மற்றும் திரைகளில்

* *பல வெற்றிப்படங்களை அளித்த மொடேன் தியேட்டர்சாரின் 100 வது தயாரிப்பு*

ஜெமினி கணேசன், தங்கவேலு, மனோகர், அசோகன், மணிமாலா, மனோரமா, சாவித்திரி நடித்த



# வல்லவனுக்கு வல்லவன்

டைரக்சன்: ஆர். சுந்தரம் இசை: வேதா

## 2வது வெற்றி மாதம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) விஜயா (அம்பாறை) லட்சுமி (இரத்தினபுரி) மொடேன் (பதுளை)

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ்,
டி. எஸ். பாலையா, கீதாஞ்சலி,
எஸ். ஏ. அசோகன் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்



# பணம் படைத்தவன்

இன்று

## 93வது தினமாக

நடைபெறுகிறது!

## சென்ட்ரல்

மற்றும் சிலோன்எண்டடெயின்மன்ஸ் திரைகளில்

* ஜெமினி கணேஷன் * பத்மினி

நடிக்கும்

சித்ரா புரொடக்ஷன்ஸ்

# சித்தி

திரைக்கதை — வசனம் — டைரெக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## விரைவில் எதிர்பாருங்கள்

* எஸ். எஸ். இராஜேந்திரன், * விஜயகுமாரி,
எம். என். நம்பியார் எம். ஆர். ராதா நாகேஷ் மனோரமா
முதலானோர் நடித்திருக்கும்

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# ஆனந்தி

டைரெக்ஷன்: ப. நீலகண்டன்

நாகேஷ், டி. ஆர். ராமச்சந்திரன்
டி. எஸ். பாலையா, கல்பனா, மனோரமா, ஓ.ஏ.கே.தேவர்
மற்றும் பலர் ஒன்று சேர்ந்து நடிக்கும்

சன்பிம்ஸாரின்

# சாது மிரண்டால்......

நவீன நகைச்சுவைச் சித்திரம்

திரைக்கதை: ஏ. பீம்சிங் டைரெக்ஷன்: திருமலை மகாலிங்கம்

## நவம்பர் 2 புதன் முதல்-மகத்தான ஆரம்பம்

எம்பயர் (கொழும்பு) செல்லமகால் (கொழும்பு) வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருமலை) கிங்ஸ் (பதுளை) றீகல் (கண்டி) றீகல் (நுாரலை)

★ கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய 'ஆயிரத்தில் ஒருவன்' நட்சத்திரங்களான



● மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ● கவர்ச்சிக்கன்னி ஜெயலலிதா

நடித்த

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்



# கன்னித்தாய்

சக நடிகர்கள்: * நம்பியார், * அசோகன், * நாகேஷ், * விஜயா மற்றும் பலர்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194-ம இலக்கத்தில் 1966-ம் வருடம் அக்டோபர் மாதம் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது